janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

நிறுவனர்: ப. ஜீவானந்தம்

மலர் 86 | 2024 பிப்ரவரி 04 - பிப்ரவரி 10 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 44




# பிப்.16 ல் முழு அடைப்புப் போராட்டம்!

## இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் பொதுக்குழு முடிவு!

**இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் பொதுக் குழுக் கூட்டம் 28.01.2024 முதல் 30.01.2024 வரை சென்னையில் சங்கத் தலைவர் நா.பெரியசாமி முன்னாள் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது.**










கூட்டத்தில் கேரளா, தமிழ்நாடு, ஆந்திரா, தெலுங்கானா, மகாராஷ்டிரா, மத்திய பிரதேசம், ராஜஸ்தான், உத்தரபிரதேசம், பஞ்சாப், அரியாணா மற்றும் புதுச்சேரி மாநிலங்களில் இருந்து 93 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

பிப்ரவரி 16 வேலை நிறுத்தம் – கிராமங்கள் முழுஅடைப்பு போராட்டத்தில் பங்கேற்போம்!

விவசாயிகளையும், தொழிலாளர்களையும், ஒட்டு மொத்த உழைக்கும் மக்களையும் வஞ்சித்து வரும் ஒன்றிய பாஜக அரசின் மக்கள் விரோதக் கொள்கைகளுக்கு எதிராக ஐக்கிய விவசாயிகள் முன்னணியும், மத்திய தொழிற்சங்கங்களும் ஒருங்கிணைந்து போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக வரும் 16.02.2024 ஆம் தேதி நாடு முழுவதும் தொழிலாளர் வேலை நிறுத்தம் கிராமங்களில் முழு அடைப்புப் போராட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓராண்டுக்கும் மேலாக நீடித்த விவசாயிகள் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வர நாட்டின் பிரதமர் அளித்த உறுதிமொழி காப்பாற்றப்படவில்லை. விவசாயிகள் சாகுபடி செய்யும் அனைத்து பயிர் வகைகளுக்கும் குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயம் செய்யும் சட்டபூர்வ நிர்வாக ஏற்பாடு செய்ய வேண்டும்,

தேசிய விவசாயிகள் ஆணையம் பரிந்துரைத்த உற்பத்தி செலவுகளுக்கு மேல் 50 சதவீதம் சேர்த்து (சி2+50%) குறைக்கப்பட்ட விலை நிர்ணயம் செய்யவேண்டும்,

விவசாய விளைபொருட்கள் அனைத்தும் அரசே முழுமையாக கொள்முதல் செய்ய வேண்டும்.

குறைந்தபட்ச ஊதியமாக மாதம் ரூ.26 ஆயிரம் நிர்ணயம் செய்ய வேண்டும்.

ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி நடைபெறும் பிப்ரவரி 16 முழுஅடைப்புப் போராட்டத்தில் இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கம் முழுமையாக பங்கேற்பது, விவசாயத் தொழிலாளர்களை பெருமளவில் திரட்டி போராட்டத்தை வெற்றிகரமாக நடத்துவது என தேசிய பொதுக்குழுக் கூட்டம் தீர்மானிக்கிறது.

கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### 1. வேலை உறுதியளிப்புத் திட்டத்திற்கு ரூ.4 லட்சம் கோடி ஒதுக்கீடு செய்க!

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டத்திற்கு ஆரம்ப நிலையிலேயே கடுமையாக எதிர்ப்பு தெரிவித்த பாஜக, ஒன்றிய ஆட்சியை கைப்பற்றிய பிறகு அதன் மீது கடுமையான தாக்குதலை நடத்தி வருகிறது. திட்ட ஒதுக்கீட்டுக்கான நிதியை தொடர்ந்து குறைத்து வருகிறது. கடந்த 2023 24 ஆம் ஆண்டில் ரூ.60 ஆயிரம் கோடியாக வெட்டி குறைத்து விட்டது. கடந்த மூன்று மாதங்களாக வேலை செய்த தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்காமலும், வேலை உறுதியளிப்புச் சட்டப்படி 100 நாள் வேலை மறுப்பதுமான சட்ட அத்துமீறலில் ஒன்றிய அரசு செயல்பட்டு வருகிறது. இந்த போக்கை சங்கம் வன்மையாக கண்டிப்பதுடன் வரும் 2024 – 25 ஆம் ஆண்டுக்கான நிதி

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

## நாகேந்திரநாத் ஓஜா உரை!

சங்கத்தின் மூத்த தலைவர், நாடாளுமன்ற மாநிலங்களவை முன்னாள் உறுப்பினர் நாகேந்திர நாத் ஓஜா பொதுக் குழுக் கூட்டத்தை தொடக்கி வைத்து பேசினார். நாட்டின் வரலாற்றில் விவசாயத் தொழிலாளர்களை தனி அமைப்பில் அணிதிரட்ட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கம் உருவாக்கப்பட்டது. விடுதலை போராட்ட காலத்தில் முன்வைக்கப்பட்ட "உழுபவருக்கே நிலம்" என்ற தேசிய முழக்கத்திற்கு செயல் வடிவம் கொடுக்கும் வகையில் நிலச் சீர்திருத்தம் மற்றும் நில உச்சவரம்பு சட்டங்கள் கோரிய போராட்டத்தினை முன்னெடுக்கப்பட்டது.

இதன் காரணமாக 1960 நில உச்சவரம்பு சட்டங்கள் பல மாநிலங்களில் நிறைவேற்றப்பட்டன. இதனையொட்டி 1968 செப்டம்பர் 28, 29 பஞ்சாப் மாநிலத்தில் நடந்த விவசாயத் தொழிலாளர் மாநாட்டில் இந்திய விவசாயத் தொழிலாளர்களுக்காக அமைக்கப்பட்ட அமைப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக நாம் நடத்திய போராட்டங்கள் அனைத்தும் வெற்றி பெற்று, ஒன்றிய, மாநில அரசுகளின் திட்டங்களாக அமலாக்கப்பட்டு வருகின்றன. குறைந்தபட்ச ஊதிய சட்டம், குடியிருப்பு மனை பெறும் உரிமை, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டம், ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டம், வேலைக்கு உணவு திட்டம், விலையில்லா அரிசி திட்டம் என்பது உள்பட அரசுகளால் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் நமது போராட்டங்களின் நிர்பந்தத்தால் அறிவிக்கப்பட்டவை என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

இடதுசாரி சக்திகள், ஜனநாயக கட்சிகள் ஒன்றிய ஆட்சியில் தலையிடும் வலிமை பெற்றிருந்த காலகட்டத்தில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு சட்டம் 2005 நிறைவேற்றப்பட்டது. நாட்டின் வளர்ச்சிக்கும், விவசாயத் தொழிலாளர் நலனுக்கும் உதவும் வேலை உறுதியளிப்பு திட்டத்தை சீர்குலைக்கும் முயற்சியில் பாஜக ஆட்சி பத்தாண்டுகளாக தாக்குதலை நடத்தி வருகிறது. உடல் உழைப்புத் தொழிலாளர்கள் போராடி பெற்றுள்ள சட்டபூர்வ வேலை பெறும் உரிமை மறுக்கப்படுவதை அனுமதிக்க முடியாது. வேலை உறுதியளிப்பு திட்டத்தை மேலும் வலுப்படுத்தி ஆண்டுக்கு 200 நாள் வேலை பெறுவதற்கும், தினசரி குறைந்தபட்ச ஊதியமாக ரூ.700 பெறுவதற்கும் தீவிரமான போராட்டங்களை நடத்த வேண்டும்.



## இரா.நல்லகண்ணு உரை!

மூத்த தலைவர் இரா.நல்லகண்ணு வாழ்த்தி பேசியது பொதுக் குழு உறுப்பினர்களுக்கு எழுச்சியூட்டுவதாக அமைந்தது. தோழர்.இரா.நல்லகண்ணு "எனக்கு 99 வயது ஆகிறது. 45வது வயதில் சங்க வேலைகளுக்காக சென்னைக்கு வந்து 50 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது. பெரும்பாலான மாநாடுகளில் கலந்து கொண்டுள்ளேன். விவசாயத் தொழிலாளர்களுக்காக பல போராட்டங்களை நடத்தி வருகிறோம். நிலம், வீட்டு மனை, வேலை, ஊதியம், ஓய்வூதியம் போன்ற கோரிக்கைகளுக்கு போராடுவது மட்டும் அல்ல. சாதிய சமூகத்தில் தீண்டாமையும், ஒடுக்குமுறையும் ஆதிக்கம் செலுத்தி வந்ததை எதிர்த்து போராடி வெற்றி பெற்றுள்ளோம். ஆனால் இன்று பாஜக ஆட்சி சனாதன வர்ணாசிரம நடைமுறைகளை புதுப்பிக்க விரும்புகிறது.

அரசியல் அமைப்புச் சட்டத்தை சிறுமைப்படுத்தி வருகிறது. ராமர் கோயில் குடமுழுக்கை பயன்படுத்தி பெரும்பான்மை மத அடிப்படைவாத சக்திகளை அணிதிரட்டி, தேர்தலில் ஆதாயம் தேடும் சமூக விரோத செயலில் தீவிரமாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் பாஜகவும் அதன் கூட்டாளிகளையும் மக்கள் நிச்சயமாக தோற்கடிக்கப்பார்கள்" என்று பேசினார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சி.எச்.வெங்கடாசலம், அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் பொதுச் செயலாளர் சீ.தினேஷ் ஆகியோர் வாழ்த்தி பேசினார்கள். பொதுச் செயலாளர் குல்கர் சிங் கொரியா கடந்த 2023 நவம்பர் 2, 3, 4, 5 தேதிகளில் பிகார் மாநிலம் பாட்னாவில் நடந்த 15வது தேசிய மாநாட்டிற்கு பின்னர் சங்கம் மேற்கொண்ட பணிகள், மாநிலங்களில் நடந்துள்ள வேலைகள் குறித்த அறிக்கையை அறிமுகம் செய்தார்.

இந்த அறிக்கையின் மீதான விவாதத்தில் பொதுக்குழு உறுப்பினர்கள் 33 பேர் பங்கேற்றனர். பொதுச் செயலாளர் தொகுப்புரை வழங்கிய பிறகு அறிக்கையை பொதுக்குழு ஒரு மனதாக ஏற்றுக் கொண்டது.

கட்சிக் கடிதம்

# இவர்கள் இருக்கக்கூடிய இடம்!



போர்க்குணமிக்க தோழர்களே!

**நாடாளுமன்றத்திற்கான 18வது தேர்தல் கதவை தட்டுகின்றது. இவ்வாண்டு பிப்ரவரி மத்தியில் தேர்தலுக்கான தேதிகள், தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்படக் கூடும்.**

தேர்தல் ஆணையம் தேதியை அறிவிக்க உள்ளது என்பது அவர்களது கையில் இல்லை. மோடி – அமித்ஷா கூட்டணி விருப்பம் அறிந்து அறிவிப்புகள் வரும்.

எப்படி ஆயினும் ஏப்ரல் மற்றும் மே மாதத்திற்குள்ளாக தேர்தல் நடந்து முடியும்.

புதிய ஆட்சி அமைக்கப்படும், அவ்வாறு அமையப்பெற்ற ஆட்சி எத்தகையதாக இருக்க வேண்டும் என்பது மிக முக்கியமானது. தற்போதைய மோடி தலைமையிலான ஆட்சி தொடரக்கூடாது.

மூன்றாம் முறையாக மோடி ஆட்சி தொடருமேயானால், நாடு பெரும் பேராபத்தை எதிர்கொள்ள நேரிடும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் எவருக்கும் இல்லை.

நாடு எதிர்காலத்தில் ஜனநாயக பாதையில் செல்லப் போகிறதா? அல்லது சர்வாதிகாரத்தை ஏற்க உள்ளதா? என்பதற்கான வினாவிற்கு விடை காண வேண்டிய தேர்தல் ஆகும்.

ஆர். எஸ். எஸ். ஜனநாயகத்தின் மீது நம்பிக்கையற்ற அமைப்பாகும். சர்வாதிகாரத்தின் மீதும், பாசிச கொள்கையிலும் அதீத நம்பிக்கை கொண்ட ஓர் வன்முறை கும்பல் என்பதை நிரூபித்து, நிலைநிறுத்தி வந்துள்ளது.

நாட்டின் விடுதலைப் போர்க்களத்தில் பங்கேற்காதது மட்டுமல்ல, வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கு ஆதரவு அளித்திட்ட கும்பல் என்பது வரலாறு அறிந்தவர் அனைவரும் நன்கு அறிவார்கள்.

ஒண்ட வந்த பிடாரி ஊர்ப் பிடாரியை விரட்டியது என்று கிராமத்தில் கூறுவார்கள்.

எத்தகைய பங்களிப்பும், தியாகமும் இன்றி ஆட்சி அதிகாரத்தில் இன்று அமர்ந்துள்ளனர்.

ஆட்சியில் இருப்பது மட்டுமின்றி பொறுப்பேற்ற போது, எந்த அரசியல் அமைப்பு சட்டத்தின் மீது சத்தியம் செய்தார்களோ, அச் சத்தியத்தை சர்க்கரை பொங்கல் ஆக்கிவிட்டார்கள்.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் கொள்கைகளை பிசிறின்றி நிறைவேற்றி வருகின்றார்கள்.

தங்களுக்கு கிடைத்திட்ட ஆட்சி அதிகார வாய்ப்பை பயன்படுத்தி, இராணுவம், நீதிமன்றங்கள், நிர்வாகத்துறை என அனைத்திலும் தங்களது கொள்கைகளை ஏற்று கொண்டவர்களை புகுத்தியுள்ளனர்.

நாட்டின் விடுதலைப் போராட்ட தியாகிகளை மதிப்பது போன்று பொதுவெளியில் மோடி உரக்கப் பேசுவார்!


ஆனால் பல மதிப்புமிக்க தலைவர்களை நேரடியாகவும், மறைமுகமாகவும் தாக்குவார்கள்

நாட்டின் முதல் பிரதமராக இருந்த நேருவை, அவரது குடும்பத்தார் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

நாட்டின் சிருஷ்டியாக போற்றப்படும் நேருவை தாக்குவது மட்டுமல்ல, அவரால் தான் நாடு கெட்டு விட்டது என்று நாடாளுமன்றத்திலேயே தாக்குதல் நடத்துகின்றனர்.

ஒற்றை நபருக்காக, ஒரு குடும்பத்திற்காக நாட்டையே பலிகடாக்கி விட்டார்கள் என்று நாக்கில் நரம்பின்றி பேசி வருகின்றார்கள்.

நேரு – அவரது தந்தை மோதிலால் நேரு இவர்களின் தியாகத்தை கொச்சைப்படுத்தி தரம் தாழ்ந்து பேசுகின்றனர்.



நேரு குறித்து மட்டுமல்ல, நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் மிகப்பெரிய பங்களிப்பு செய்து, நாட்டு மக்கள் அனைவரையும் ஓரணியில் திரட்டி வெள்ளையனே வெளியேறு என்கிற போராட்டம், "செய் அல்லது செத்துமடி" என்று முழக்கமிட்ட தேசத்தின் தந்தை என போற்றப்படும் மகாத்மாவையும் தாக்கத் தொடங்கி விட்டார்கள்.

காந்தியின் போராட்டத்தால் நாடு விடுதலை பெறவில்லை, அவரது போராட்டம் பெரும் பிரதிபலிப்பை ஏற்படுத்திடவில்லை என்று இங்கே உள்ள ஆளுநர் ஆர்.என். ரவி பேசுகின்றார்.

ஒரு பக்கம் காந்தியின் சமாதி முன்பு முதுகை வளைத்து கும்பிடு போடுவதின் மூலம், தாங்கள் காந்தியை மதிப்பதாக காட்டிக் கொள்வார்கள். மறுபக்கம் காந்தியை இழிவு படுத்துவார்கள்.

நாடு விடுதலை பெற்று 5 மாதம், 15 நாளில் (1948 ஜனவரி 30) காந்தியை சுட்டுக் கொன்றார்கள்.

சுட்டுக்கொன்ற கொடியவன் ஆர்.எஸ்.எஸ். இயக்ககாரர்களில் ஒருவனாக விளங்கிய கோட்சேவிற்கு சிலை வைத்து வணங்குவார்கள். கோட்சே மிகச்சிறந்த தேசபக்தர் என போற்றி புகழ்வார்கள்.

இதையெல்லாம் ஏதோ அவர்கள் அறியாமல் செய்கிறார்கள் என்பது பொருள் அல்ல, அவர்கள் முழுவதும் அறிந்தே செய்கிறார்கள்.

வரலாற்றை மாற்றி எழுதிட முனைகின்றார்கள். தங்களின் துரோக செயல்களை மறைத்து, மற்றவர்களின் தியாகத்தை இகழ்ந்து பேசுவதின் மூலம் தங்களை பலசாலிகளாகவும், பெரிய மனிதர்களாகவும் காட்டிக்கொள்ள முயலுகின்றனர்.

இவர்கள் இருக்க வேண்டிய இடம் எது? என்பது குறித்து யோசித்துப் பாருங்கள்.

ஆட்சி அதிகாரத்திலா அல்லது கீழ்ப்பாக்கம் மருத்துவமனையிலா என்பதனை நாட்டு மக்கள் முடிவு செய்ய வேண்டிய தருணம் வந்துவிட்டது.

ஆட்சி அதிகாரத்தில் இருக்கிறோம் என்கிற காரணத்தினால் தலைகனத்து உலாவுகின்றனர்.

மக்கள் நாட்டை ஒட்டு மொத்தமாக இவர்களிடத்தில் ஒப்படைத்து விட்டதாக கருதுகின்றார்கள்.

ஐந்தாண்டுக்கு ஒரு முறை தேர்தல் நடைபெறும், மக்கள் ஆட்சியை உருவாக்குவார்கள் என்பதை மறந்து விட்டார்கள். எப்படியேனும் 2024 மீண்டும் அதிகாரத்திற்கு வந்து விட வேண்டும் என எந்தப் பொய்யும் துணிச்சலாக கூறுவார்கள்.

மீண்டும் ஆட்சிக்கு வந்து விட்டால், முற்றாக ஜனநாயகத்தை அழித்து பாசிச ஆட்சியை நிறுவி விடலாம் என்று கங்கணம் கட்டிக்கொண்டு செயல்படுகிறார்கள்.

அவர்களது நோக்கம் சாதாரணமான ஒன்று அல்ல.

நாட்டில் வாழும் அனைத்து சிறுபான்மை மக்களையும் நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும். கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள், பௌத்தர்கள், சீக்கியர்கள் என உள்ள சிறுபான்மை மக்களை ஒட்டுமொத்தமாக தங்கள் எதிரிகளாக கருதுகின்றார்கள்.

அச் சகோதரர்கள் அனைவரையும் தங்களின் வன்முறை செயல் திட்டத்தின் மூலமாக ஒட்டுமொத்தமாக நாட்டை விட்டு வெளியேற்றி விட வேண்டும். மொத்தமாக இந்துக்களை மட்டுமே கொண்ட இந்து தேசமாக மாற்றிட வேண்டும் என்பதே அவர்களின் தலையாயக் கொள்கையாக கொண்டுள்ளனர்.

பல்வேறு மதங்களைக் கொண்ட நாடு, மதச்சார்பின்மை என்கிற மகத்தான கொள்கைகளை தனது உயிர் மூச்சாக கொண்ட நாட்டை, தங்களது விருப்பப்படி மதவெறி சிமிழிக்குள் அடைத்திட வேண்டும் என்கிற, மிகக் குறுகிய கண்ணோட்டத்துடன் வெறித்தனமான முறையில் செயல்பட்டு வருகின்றனர்.

பாபர் மசூதி மட்டுமல்ல, மற்ற மசூதிகளையும் இடித்து தரைமட்டமாக்கிட வேண்டும் என்பதும், அவ்விடங்களில் இந்துமத கோவில்களை கட்டி எழுப்பி விழாக்கள் எடுத்திட வேண்டும் என்பதே இவர்களின் குறிக்கோளாக உள்ளது.

இத்தகைய அநாகரிக பொய்களின் மூலம் மத ரீதியாக இந்துக்கள் அனைவரையும் ஒன்றிணைத்து, வாக்குகளாக மாற்றி, தங்களின் ஆட்சி அதிகாரத்தை தங்களுக்கு மட்டுமே உரித்தானது என்பதனை நோக்கமாக் கொண்டு செயல்பட்டு வருகின்றனர்.

ஒரே நாடு – ஒரே மதம்
ஒரே நாடு – ஒரே மொழி
ஒரே நாடு– ஒரே தேர்தல்

என்று முழங்கி, ஒவ்வொன்றையும் நியாயப்படுத்திப் பேசி, கடைசியாக ஒரே நாடு ஒரே கட்சி, எதிர்க்கட்சிகள் இல்லாத, ஜனநாயகம் அற்ற, பாசிச ஆட்சியை நிறுவ வேண்டும் என்பது இவர்களின் நோக்கம் என்பதை கவனத்தில் கொண்டு, எதிர்வரும் நாடாளுமன்ற பொதுத் தேர்தலை நாம் எதிர் கொள்ள வேண்டும்.

மன நோயாளிகள் போன்று பொறுப்பற்ற முறையில், நாட்டில் பதட்டத்தை உருவாக்கிட வேண்டும் என்கிற நோக்கில் செயல்படும் இவர்கள் இருக்க வேண்டிய இடம் ஆட்சியில் அல்ல!

மாறாக கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் உள்நோயாளிகளாக அனுமதிக்கப்பட வேண்டியவர்கள் என்பதனை கருத்தில் கொண்டு, களம் காண்போம்! மீண்டும் சந்திப்போம்!

வணக்கம்

தோழமைமிக்க,

(இரா.முத்தரசன்)



# சர்வதேச நீதிமன்றம் இடைக்காலத் தீர்ப்பு

# காசாவில் அமைதியை கொண்டு வருமா?




வ.மணிமாறன்

**காசாவில் பாலஸ்தீனர்கள் மீது இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதல்கள் இனப்படுகொலையே என்று சர்வதேச நீதிமன்றம் இடைக்காலத் தீர்ப்பளித்துள்ளது.**

இஸ்ரேலின் குண்டு மழையால் பாலஸ்தீனம் காசா நிலம் ரத்தமும் பிணங்களுமாக காட்சியளிக்கிறது. வீடுகள், மருத்துவமனைகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் போன்றவை வெற்று இடிபாடுகளாகி விட்டன. உயிரைக் காப்பாற்ற பாலஸ்தீனர்கள் ஓடிக் கொண்டிருக்கின்றனர். உணவைத் தேடி அலைகின்றனர்.

19 லட்சம் பாலஸ்தீனர்கள் அதாவது காசா மக்கள்தொகையில் 85 விழுக்காட்டினர் தங்களின் வீடுகளில் இருந்து வெளியேற வேண்டிய கட்டாய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதனால் இடம்பெயரும் மக்கள், போதுமான தங்குமிடம் இல்லாத சிறிய பகுதிக்குள் தள்ளப்படுகின்றனர். அங்கும் இஸ்ரேல் ராணுவம் தாக்குதல் நடத்துகின்றது. பலர் கொல்லப்படுகின்றனர். இவை அனைத்தும் தென்னாப்பிரிக்கா தாக்கல் செய்த மனுவில் இடம்பெற்றுள்ளன. இதற்கான ஆவணங்களும் மனுவில் இணைக்கப்பட்டுள்ளன.



“காசாவில் பாலஸ்தீன மக்களின் வாழ்க்கையை அழித்தல் தாக்குதலுக்கு உள்ளாகின்றன” என்று ஐ.நா. மனிதாபிமான விவகாரங்களுக்கான துணைப் பொதுச்செயலாளர் மார்ட்டின் கிரிஃபித்ஸ் கூறியிருப்பது தீர்ப்பில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

“கடந்த 100 நாட்களில், காசா முழுவதும் நிகழ்ந்து வரும் தொடர் குண்டுவீச்சு மக்களை பெரிய அளவில் இடம்பெயரச் செய்துள்ளது. வேரோடு பிடுங்கி எறியப்பட்டு, இரவோடு இரவாக வெளியேற நிர்பந்திக்கப்படுகின்றனர். 1948க்கு பிறகு பாலஸ்தீன மக்களின் மிகப் பெரிய இடப்பெயர்வு இது” என்று ஐ.நா. நிவாரணப் பணிகள் முகமையின் ஆணையர் பிலிப் லஸரினி கூறியதும் ஆதாரமாக காட்டப்பட்டுள்ளது.

ஏகாதிபத்தியங்களின் மீதான குற்றப் பத்திரிகையும் ஆகும்.

இஸ்ரேலுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்ட போதே அமெரிக்கா கண்டனம் தெரிவித்தது. “இஸ்ரேலுக்கு எதிரான இந்த வழக்கு தகுதியற்றது. பயனற்றது. எந்த அடிப்படையும் இல்லாதது” என அமெரிக்க தேசிய பாதுகாப்பு கவுன்சில் செய்தித் தொடர்பாளர் ஜோன் கிர்பி தெரிவித்தார்.

“இஸ்ரேலிடம் இனப் படுகொலை உட்பட எந்தவொரு குற்றவியல் நடவடிக்கையும் காணப்படவில்லை” என அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் மாட் மில்லர் சான்றிதழ்(?) வழங்கினார். ஆனால் சர்வதேச நீதிமன்றம் இனப் படுகொலை என அறிவித்திருப்பது, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் கன்னத்தில் அறைவது போன்றதாகும்.






இஸ்ரேலின் இந்த இனப்படுகொலை போருக்கு எதிராக உலக நாடுகளில் போராட்டங்கள் வெடித்துள்ளன. அமெரிக்கா – நேட்டோ ஒத்துழைப்புடன் இஸ்ரேல் தாக்குதலை தீவிரமாக மேற்கொண்டு வருகிறது. இதற்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் தென்னாப்பிரிக்கா வழக்குத் தொடர்ந்தது. 84 பக்கங்களுடன், 574 அடிக்குறிப்புகளைக் கொண்ட மனுவை டிசம்பர் 29ஆம் தேதி தென் ஆப்பிரிக்கா தாக்கல் செய்தது.

இனப்படுகொலை குற்றங்களைத் தடுப்பது மற்றும் தண்டனை வழங்குவதற்கான ஒப்பந்தம் 1948 (Convention on the Prevention and Punishment of the Crime of Geno-cide) இனப்படுகொலை என்றால் என்ன என்பதற்கு விளக்கம் தருகிறது. இதன்படி, “ஒரு தேசிய, இன, நிற, மதம் சார்ந்த குழுவை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அழிப்பதே இனப்படுகொலை” என வரையறுக்கப்படுகிறது. இதன் அடிப்படையில் காசாவில் இஸ்ரேல் மேற்கொண்டுள்ள தாக்குதல்கள் “இனப்படுகொலை தன்மை கொண்டது” என தென் ஆப்பிரிக்கா குற்றம்சாட்டியுள்ளது.

இஸ்ரேல் அக்டோபர் – 7 முதல் தொடர்ச்சியான தாக்குதல்களை மேற்கொண்டு வருகிறது. டிசம்பர் – 29 வரை 7,729 குழந்தைகள் உட்பட 21,110 க்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் இறந்துள்ளனர். 7,780 க்கும் மேற்பட்டோரை காணவில்லை. அவர்கள் இடிபாடுகளில் சிக்கி செத்திருக்கலாம். 55,243 க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர்.

இஸ்ரேலின் தொடர் தாக்குதலில், காசாவின் பெரும்பகுதி பேரழிவுக்கு உள்ளாகி இருக்கிறது. 3 லட்சத்து 55 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன அல்லது பெரும் சேதமடைந்துள்ளன. என்ற தலைப்பில், நீதிமன்றங்கள், நூலகங்கள், பல்கலைக்கழகங்கள், அருங்காட்சியகங்கள், வரலாற்று கட்டமைப்புகள், மத வழிபாட்டுத் தலங்கள், பள்ளிகள், வரலாற்றுச் சின்னங்கள் மற்றும் கல்லறைகளையும் இஸ்ரேல் குறிவைத்து அழித்திருப்பதற்கான ஆவணங்களை தென் ஆப்பிரிக்கா தாக்கல் செய்துள்ளது.

இஸ்ரேலின் குண்டுகள் மற்றும் ஏவுகணைகளால் ஏற்பட்ட வன்முறையான மரணங்களை விட, பட்டினியால் ஏற்படும் மெதுவான சாவுகள் அதிகமாக இருக்கும் என வல்லுநர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.” இவற்றையும் தென்னாப்பிரிக்கா ஆவணப்படுத்தி உள்ளது. இஸ்ரேலின் குண்டுவீச்சுத் தாக்குதல்கள் கண்மூடித்தனமானது மட்டுமல்ல, இலக்கு வைத்து பேரழிவை மேற்கொண்டு வருவது என்பதை தென் ஆப்பிரிக்கா எடுத்துரைத்துள்ளது.

தென் ஆப்பிரிக்கா தொடர்ந்த இந்த வழக்கை சர்வதேச நீதிமன்றத்தில், 17 நீதிபதிகள் அடங்கிய அமர்வு விசாரணை நடத்தி வருகிறது. இந்த வழக்கில் ஜனவரி 26 அன்று எழுத்துப்பூர்வ இடைக்காலத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

“இஸ்ரேல் மீதான இனப் படுகொலை குற்றச்சாட்டுக்கு போதுமான ஆதாரங்கள் இருக்கின்றன. இஸ்ரேலின் சில நடவடிக்கைகள் மற்றும் பின்பற்றாமைகள் இனப்படுகொலைக்கு எதிரான ஒப்பந்தத்தின் விதிமுறைகளுக்குள் வரக்கூடியவை. எனவே சர்வதேச நீதிமன்றம் இந்த வழக்கை விசாரிக்க முடியும்” என திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

“பாதுகாப்பான இடங்கள் என இஸ்ரேல் அறிவித்த பகுதிகளும் குண்டுவீச்சில் இருந்து தப்பவில்லை. மருத்துவமனைகளும் இவற்றின் மூலம் மருத்துவமனைகளையோ பொது மக்களையோ குறிவைக்கவில்லை என்ற இஸ்ரேலின் விளக்கத்தை சர்வதேச நீதிமன்றம் ஏற்க மறுத்துள்ளது.

“காசா ‘மனித மிருகங்களால் ஆன’ மக்களைக் கொண்டது. நாங்கள் அனைத்தையும் அழிப்போம்” என்று இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கேலண்ட் கொக்கரித்தார்.

“காசாவில் உள்ள அனைத்து மக்களும் அங்கிருந்து வெளியேற வேண்டும். அவர்கள் உலகை விட்டுச் செல்லும் வரை ஒரு சொட்டுத் தண்ணீரோ ஒரு பேட்டரியோ கூட கிடைக்காது” என்று இஸ்ரேலின் எரிசக்தி மற்றும் உள்கட்டமைப்பு அமைச்சராக இருந்த இஸ்ரேல் காட்ஸ் அக்டோபர் 13 அன்று எச்சரித்தார்.

இப்படி இஸ்ரேல் அரசின் உயர் பொறுப்புகளில் இருப்பவர்களின் இனப்படுகொலை பேச்சுகளும் பாலஸ்தீன மக்கள் மீது பெரிய அளவில் திணிக்கப்பட்ட மனிதத் துயரமும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவை.

“இனப்படுகொலையில் இருந்து தற்காத்துக் கொள்வதற்கான பாலஸ்தீனர்களின் உரிமையும் அவர்களைப் பாதுகாப்பதற்கான தென்னாப்பிரிக்காவின் கோரிக்கையும் ஏற்கத்தக்கது தான் என்பதற்கு மேற்குறிப்பிட்டுள்ள உண்மைகளே போதுமானவை” என்று சர்வதேச நீதிமன்றம் உறுதிபடத் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் மேற்கொண்டு வரும் தாக்குதல்களுக்கு சர்வதேச நீதிமன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பு கடும் கண்டனமாகும். இஸ்ரேலுக்கு ஆயுதம், நிதியுதவி அளிப்பதுடன், இனப்படுகொலைப் போரை நியாயப்படுத்தியும் பாதுகாத்தும் வந்துள்ள அமெரிக்கா நேட்டோ

அதேநேரத்தில், காசா மீதான தாக்குதலை நிறுத்துமாறு, அதாவது போர் நிறுத்தம் செய்யுமாறு இஸ்ரேலுக்கு உத்தரவிட சர்வதேச நீதிமன்றம் மறுத்துவிட்டது.

சர்வதேச நீதிமன்றம் இடைக்கால நடவடிக்கைகளை எடுக்குமாறு, அதாவது இஸ்ரேல் அரசு இனப்படுகொலை தூண்டுதலைத் தவிர்க்க வேண்டும். மனிதாபிமான உதவிகள் காசாவை சென்றடைய வேண்டும் என்பது உள்ளிட்ட அறிவுறுத்தல்களை இஸ்ரேலுக்கு வழங்கியுள்ளது.

இது இனப் படுகொலையை முடிவுக்கு கொண்டுவருவதில் ஏற்பட்டுள்ள அப்பட்டமான தோல்வியை வெளிப்படுத்துகிறது.

இஸ்ரேல் போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என ஐ.நா. பொதுச் சபையில் ஒரு மாதத்துக்கு முன்பே தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. 193 உறுப்பு நாடுகளில் 153 நாடுகள் போர் நிறுத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்தன. அமெரிக்கா, இஸ்ரேல் உட்பட 10 நாடுகள் எதிராக வாக்களித்தன. ஜெர்மனி உட்பட 23 நாடுகள் வாக்கெடுப்பை புறக்கணித்தன.

ஆனால், போர் நிறுத்தம் செய்யுமாறு உத்தரவிடுவதற்குப் பதிலாக, ‘இடைக்கால நடவடிக்கையை’ செயல்படுத்துவது குறித்து 30 நாட்களுக்குள் இஸ்ரேல் ‘அறிக்கை’ தாக்கல் செய்ய வேண்டும் என சர்வதேச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஐ.நா.வில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை விட சர்வதேச நீதிமன்றத்தின் இந்த இடைக்காலத் தீர்ப்பு பின்தங்கி இருப்பது, அமெரிக்கா நேட்டோ ஏகாதிபத்தியங்களின் அரசியல் அழுத்தங்களுக்கு சரணடைவதாகும்.

தொடர்புக்கு: 9500001224

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 86 இதழ் 44

## ஆளுக்கொரு தீர்ப்பு

தெருவுக்குத் தெரு, சரம் சரமாய் வார, மாத, நாளிதழ்கள் தொங்கிக் கொண்டிருந்த பெட்டிக்கடைகளை இப்போது காணோம். செய்தித்தாள் விற்கும் கடை எது என்று விசாரித்து தேடிச் சென்று வாங்க வேண்டிய நிலை வந்துவிட்டது.

பத்திரிகைகளையும் தொலைக்காட்சிகளையும் பெருமுதலாளிய நிறுவனங்கள் ஆட்கொண்டு விட்டன. ஒன்றிய அரசுக்கும், அதன் ஆளும் கட்சியான பிஜேபி, அதன் ஞானத் தந்தை ஆர்எஸ்எஸ், அவற்றின் இந்துத்துவா வலதுசாரி சித்தாந்தத்திற்கும் அவை ஊதுகுழலாகி விட்டன.

இந்திய விடுதலைப் போராட்டத்தில், பத்திரிகைகளின் பங்களிப்பு காத்திரமானது. அன்று தனது முதலாளியின் செல்வக் குவிப்புக்கான வணிகக் கருவியாக பத்திரிகைகள் பயன்படுத்தப்படவில்லை. நாட்டின், மக்களின் நலன் கருதி, சரியான செய்திகளை கொண்டு சேர்க்க வேண்டும் என்ற அறத்தை அவை முன்னிறுத்தின.

அந்த இடத்தை இப்போது சமூக ஊடகங்கள் எடுத்துக் கொண்டுள்ளன. யாரும் எழுதலாம், யாரும் படிக்கலாம் என்ற நிலை வந்தது.

ஆனால் இந்தக் குறுகிய காலத்திலேயே, அரசை கடுமையாக விமர்சித்துப் போடுகிற பதிவுகளை, வெளிக்காட்டாமல் நீக்கி விடுமாறு இந்திய அரசு சம்பந்தப்பட்ட ஊடக நிறுவனங்களை வலியுறுத்தி நிறைவேற்றுகிறது.

தற்போது 'எக்ஸ்' என்று அழைக்கப்படும், முன்னாள் ட்விட்டர் நிறுவனத்தின் நிர்வாகி உலகத்திலேயே இந்திய அரசுதான் மிக அதிகமான பதிவுகள்/இடுகைகளை நீக்குமாறு அழுத்தம் தந்தது என்று வெளிப்படையாகவே கூறியிருக்கிறார்.

தனது வல்லதிகாரத்தைப் பயன்படுத்தி செய்திகளை தடுப்பது மட்டுமில்லாமல், அவ்வாறு தடுப்பதை சட்டபூர்வமாக்கிக் கொள்ள தகவல் தொடர்பு சட்டத்தை 2021ல் மோடி அரசு திருத்தியது.

சமூக ஊடக வலைத்தளங்கள், தேடுபொறிகள், இணைய சேவை வழங்குநர்கள், தொலைத்தொடர்பு சேவை வழங்குநர்கள், வலைத்தள சேவை வழங்குநர்கள் உள்ளிட்டோரின் நடவடிக்கைகளை இந்த திருத்தங்கள் கட்டுப்படுத்துகின்றன.

ஒன்றிய அரசாங்கத்தை பற்றி போலியான, தவறான அல்லது தவறாகப் புரிந்து கொள்ளும் வகையில் செய்திகள் வெளியிட்டால் அவற்றை நீக்குமாறு அறிவுறுத்தப்படும். தகவல் தொடர்புச் சட்டம் மற்றும் இந்திய குற்றவியல் சட்டத்தின் கீழ் அவர்கள் தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

அது தவறானது, போலியானது, தவறாகப் புரிந்து கொள்ளக் கூடியது என்பதையெல்லாம் தீர்மானிக்க, உண்மை கண்டறியும் அமைப்பை ஒன்றிய அரசு உருவாக்கும். அது எடுப்பதே முடிவு. அதில் யார் இருப்பார்கள் என்பது சொல்லித் தெரிய வேண்டியது இல்லை.

ஒரே நபர், குற்றம் சுமத்துபவராகவும் விசாரித்து தண்டனை வழங்குபவராகவும் இருக்கக் கூடாது என்பது இயற்கை நீதியின் அடிப்படை அம்சம்.

ஆனால் ஒன்றிய அரசே இங்கு குற்றம் சுமத்தும், விசாரிக்கும், தீர்ப்பு எழுதும், தண்டனை வழங்கும் என்று சர்வ அதிகாரங்களையும் கொடுப்பது, அரசியல் சாசனத்தில் வழங்கியுள்ள கருத்து சுதந்திர உரிமைக்கு எதிரானது என்ற வழக்கு, மும்பை உயர்நீதிமன்றத்தில் இரண்டு நீதிபதிகள் அமர்வு முன்பு நடந்து வந்தது. கம்யூனிஸ்ட்டும், மிகப் பிரபலமான அரசியல் நகைச்சுவையாளருமான குணால் காம்ரா உள்ளிட்ட மூவர் வழக்கை தாக்கல் செய்து இருந்தனர்.

வழக்கு நடக்கும் போது "இந்த வழக்கில் மனுதாரரின் வழக்குரைஞர் வாதிடுவதை வெளியிட்டால், அதைக் கூட தவறானது என்று கூறி உங்கள் விதி திருத்தத்தின்படி நடவடிக்கை எடுக்க முடியும். இது சரியானது தானா?" என்று கூட நீதிமன்றத்தில் வெளிப்படையாக நீதிபதி கேள்வி எழுப்பினார்.

இப்போது தீர்ப்பு வந்துவிட்டது. அரசு செய்த சட்ட திருத்தம் தவறு என்று ஒரு நீதிபதியும், சரிதான் என்று இன்னொரு நீதிபதியும் தீர்ப்பு எழுதி இருக்கிறார்கள்.

இது போலி, பொய், தவறான வழிநடத்தல் என்று தன்னிச்சையாக முடிவு செய்ய அனுமதிப்பது, பாகுபாட்டுடன் அரசு உத்தரவிட வழிவகுக்கும், அது அரசியல் சாசனத்தை மீறுவதாகும் என்று நீதிபதி பட்டேல் தீர்ப்பு சொன்னார்.

அதே நேரத்தில், சமூக வலைத்தளங்களும், அவற்றை வழங்குகிற நிறுவனங்களும் போலியான செய்திகளை தருகிற அபாயத்தை இனி மேலும் தொடர அனுமதிக்க முடியாது என்று நீதிபதி திருமதி நீலா கோகலே குறிப்பிட்டிருக்கிறார்.

"எங்களுக்குள் கருத்து வேறுபாடு உள்ளது, மாறுபட்ட கருத்துகளுடன் தனித்தனியாக தீர்ப்புகளை வழங்கியுள்ளோம். எங்களால் ஒத்துப் போக முடியவில்லை" என்கிறார் நீதிபதி பாட்டீல்.

இனி மூன்றாவது நீதிபதி ஒருவரை மும்பை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி நியமிப்பார். அவரது தீர்ப்பு யாருடன் ஒத்துப் போகிறதோ, அதுவே நிலை நிற்கும். அது எவ்வாறு இருக்கும் என்பதை பற்றி இப்போது சொன்னால், அது கூட இந்த சட்ட திருத்தத்தின் படி தண்டனைக்குரியதுதான்.

எது எப்படியாயினும், சரியான தீர்ப்பை நாடாளுமன்றத் தேர்தலில் வழங்கும் அதிகாரம் மக்களின் கைகளிலேயே உள்ளது.

# களப்போராளி சிவகிரி கே. செல்லையா

**1939 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பிக்கப்பட்டது. அண்ணாச்சி சேதுப்பிள்ளை என்ற எம்.சுப்பிரமணியம் முன் முயற்சியில் கம்யூனிஸ்டு கட்சி ஆரம்பிக்கப்பட்டது.**



ஆங்கிலேயரால் தொடுக்கப்பட்ட நெல்லை சதி வழக்கில் பல ஆண்டு காலம் சிறையில் வாடிய வாசுதேவநல்லூர் இராஜகோபால கிருஷ்ணனின் வழிகாட்டலினாலும் கம்யூனிஸ்டு கட்சி வீரியத்துடன் வளர்ந்து வந்தது.

சிவகிரியின் சிவப்பு மனிதர் செல்லையா 1925 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18 ம் தேதி சிவகிரியில் விவசாயக் குடும்பத்தைச் சார்ந்த கருப்பணன் கிருஷ்ணம்மாள் இணையரின் கடைசி மகனாகப் பிறந்தார். அவர் அங்குள்ள வலம்புரி விநாயகர் சக்கரையப்பா நடுநிலைப் பள்ளியில் ஏழாவது வகுப்பு வரை படித்தார். அவர் குடும்பச் சூழல் காரணமாக விவசாய வேலைகளை மேற்கொள்ள வேண்டிய நிலைக்காளானார். செல்லையாவிற்கு 18 வயதில் திருமணம் நடந்தது.

1942 ல் தனது அரசியல் வாழ்க்கையைத் துவக்கிய செல்லையா தனது இறுதி மூச்சு வரை அலுப்பு சலிப்பின்றி உழைத்தார். 1942 ஆம் ஆண்டு 'உளுத்தசோளம் ஒழிப்பு' என்ற இயக்கத்தில், கடத்திச் செல்லப்பட்ட தானிய மூட்டைகளைத் தடுத்து நிறுத்தி கூட்டுறவு பண்டகசாலை மூலம் தானியங்கள் மக்களுக்குக் கிடைக்க செய்வதில் முன்னணி பாத்திரம் வகித்தார். 1945 இல் பஞ்சம் நிலவிய காலத்தில் கடத்தப்பட்ட அரிசியை வழிமறித்து மக்களுக்கு கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக வினியோகம் செய்தார்கள்.

இதனைக் கொள்ளை நடந்து விட்டது என்று ஆயுதப்படைக்கு விரோதிகள் செய்தி கொடுத்தனர். இதனால் மக்களிடம் ஏற்பட்ட பீதியைப் போக்க செல்லையாவும் இதர தோழர்களும் தெருத்தெருவாகச் சென்று பிரச்சாரம்செய்து மக்களிடையே ஏற்பட்ட பீதியைப் போக்கினர். ஆனால் ஆயுதப்படையினரால் இவர்கள் மீது தடியடி நடத்தி கைது செய்யப்பட்டனர். இதனை எதிர்த்த மக்கள் மீதும் தடியடி செய்தனர். கே.செல்லையா உட்பட 19 தோழர்கள் மீது கொள்ளையடிப்புக் குற்றம் சாட்டப்பட்டு 7 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டனர்.

### சிறை வாழ்க்கை!

இவ்வழக்கு தொடர்பான தீர்ப்பில் செல்லையாவிற்கு மூன்று ஆண்டு சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. தண்டனையோடு சிறையில் கலவரம் செய்ததற்காகவும் சேர்த்து தண்டனை கொடுக்கப்பட்டது. கே. செல்லையா மதுரை, வேலூர் மத்திய சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டார்.1950, பிப்ரவரி 11ம் நாள் சேலம் சிறையில் 22 தோழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அந்த சமயம் தான் கே. செல்லையா கடைசியாக சேலம் சிறையில் அடைக்கப்பட்டார். சேலம் சிறையில் மாபாதகப் படுகொலை செய்யப்பட்ட 22 தியாகிகளின் மத்தியில் மூச்சுப் பேச்சின்றிக் கிடந்தார். சேலம் சிறைக் கொடுமையின் சாட்சியவர்.

சிறையில் இருந்த காலத்தில் ஆந்திரம்,கேரளத் தோழர்களுடன் இருந்ததால் அவர்களது வழிகாட்டுதலில் முறையாக ஆங்கிலம் படிக்கவும் மலையாளம், தெலுங்கு பேசவும் கற்றுக்கொண்டார்.

### வகித்த பதவிகள்!

1952 ல் கட்சியின் முழு நேர ஊழியரான செல்லையா கிளைச் செயலாளராக, சங்கரன்கோயில் தாலுகாச் செயலாளராக கட்சிப் பணி செய்தார். வி.எஸ். காந்தி மாவட்டச் செயலாளராக இருந்த காலத்தில் மாவட்டக்குழு உறுப்பினராக, மாவட்டத் துணைச்செயலாளராக இருந்தார். வி.எஸ்.காந்தி மறைவிற்குப் பிறகு மாவட்டச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட செல்லையா 1981 முதல் 1998 வரை 17 வருடங்கள் தொடர்ந்து மாவட்டச் செயலாளராக இருந்தார்.

இரா. நல்லகண்ணு நெல்லை மாவட்டத்தில் விவசாய சங்க மாவட்டத் தலைவராக செயல்பட்ட காலத்தில் கே. செல்லையா மாவட்ட துணைச் செயலாளராக செயல்பட்டார். இரா. நல்லகண்ணு சென்னை சென்ற பிறகு மாவட்ட விவசாய சங்கத் தலைவராக செல்லையா செயல்பட்டார். கம்யூனிஸ்டு இயக்கத்தில் மிகப்பெரிய சோதனை ஏற்பட்ட போது செல்லையா கட்சியையும் அலுவலகத்தையும் பாதுகாத்தார்.

### சமூகப் பணி !

1958 ஆம் ஆண்டு நடந்த பஞ் சாயத்துத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். சிவகிரியில் இருந்த ஜில்லா போர்டு மருத்துவமனையை அரசு மருத்துவமனையாக மாற்ற, டாக்டர் நியமிக்கப்பட, டவுண் பஸ் விடக்கோரி 7 தினங்கள் உண்ணாவிரதமிருந்தார். மக்கள் போராட்டம் தீவிரமாகவே மாவட்ட ஆட்சித் தலைவர் பேச்சுவார்த்தை நடத்தி கோரிக்கைகளை நிறைவேற்றினார்.

ஆர்.கே.நாச்சியார் அறக்கட்டளை மற்றும் ஸ்ரீ பாலசுப்பிரமணியர் சுவாமி கோயில் தேவஸ்தான நிலங்களைப் பாடுபடும் குத்தகை விவசாயிகள் கூட்டுறவு சங்கத்திற்கு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 26 ஆண்டுகள் அதன் தலைவராக செயல்பட்டார்.

அக்காலத்தில் தான் சங்கத்திற்குச் சொந்தக் கட்டிடமும், அரசு கடன் இல்லாமலேயே விவசாயிகளுக்கு கடன் கொடுக்கும் நிதியும் சேர்ந்து அச்சங்கம் செயல்பட திறமையான நிர்வாகம் செய்தார்.1986 ல் நடந்த பஞ்சாயத்து தேர்தலில் வெற்றி பெற்று பஞ்சாயத்து தலைவர் ஆனார். சிவகிரி பேரூராட்சி வளாகத்தில் டாக்டர் அம்பேத்கர் படத்தைத் திறந்து வைத்தார். சிவகிரி 0.1018 கூட்டுறவு பண்டகசாலையின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு 16 ஆண்டுகள் சங்கத்தை நிர்வகித்தார்.

இவர் பேரூராட்சித் தலைவராக இருந்த காலத்தில் தான் தெருக்களில் இருந்த சாதிப் பெயர்கள் அகற்றப்பட்டு தலைவர்கள் தியாகிகள் பெயர்கள் வைக்கப்பட்டன.

ஜமீந்தாருக்கு எதிராக கம்யூனிஸ்டுகள் போராடி நிலத்தைப் பெற்றுக் கொடுத்ததில் மீதமிருந்த எட்டு ஏக்கரை எதிராளிகளிடமிருந்து மீட்பதில் தோழருடைய பங்கானது மகத்தானது. நில மீட்பு போராட்டத்தை கேலி செய்த சிலர் எட்டு ஏக்கரை குறுக்கு வழியில் கைப்பற்றி விட்டனர்.

அந்த நேரத்தில் செல்லையா ஊரில் இல்லாததால் தலைமையின் வழிகாட்டுதலை எதிர்நோக்கி இருந்தனர் தோழர்கள். எதிரிகள் நிலத்தில் உழ ஆரம்பித்து விட்டனர். விவரம் அறிந்து வந்த செல்லையா நான் செல்கிறேன், வாருங்கள் என்று வீதி இறங்கினார். செல்லையா வந்து விட்டாராம்; 8 ஏக்கரை மீட்க போகிறார்களாம் என்ற செய்தி சிவகிரி முழுவதும் பரவியது. அவரது வருகை நம்பிக்கை மந்திரமாகியது. ஏழு பேராய் கட்சி அலுவலகத்தை விட்டு இறங்கிய கம்யூனிஸ்ட் தோழர்கள் நிலத்தை நோக்கிப் புறப்பட்டனர். 8 ஏக்கர் நிலத்தருகில் சென்ற போது ஏழு எழுநூறு பேராகத் திரண்டிருந்தனர். அனைவரின் கையிலும் ஆயுதம். 8 ஏக்கர் நிலம் முழுவதும் மக்கள் கூட்டம் ஆர்ப்பரித்தது.யுத்தம் நடப்பதற்கு முன்பே துரோகக் கூட்டம் நிலத்தை விட்டு ஓடிவிட்டது. நிலத்தை 40 சென்ட்களாகப் பிரித்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்து கூட்டுறவு முறையில் விவசாயம் செய்வதற்கு பாடுபட்டார்.இன்றும் 8 ஏக்கர் நிலத்தில் விவசாயிகள் கூட்டு விவசாயம் செய்து வருகிறார்கள்.

நில சீர்திருத்த சட்டம் வேண்டி 21 தினங்கள் பாத யாத்திரையாக கிராமம் கிராமமாகச் சென்று மெக்கப்போன் அடித்துப் பிரச்சாரம் செய்ததுடன் நூற்றுக்கும் மேற்பட்ட கூட்டங்களை இரவு நேரங்களில் நடத்தியவர். நில உச்சவரம்பு சட்டம் வேண்டி தமிழ்நாடு முழுவதும் மறியல் போராட்டம் நடத்தப்பட்டபோது, சங்கரன்கோவில் தாலுகா அலுவலகம் முன்பு 15 தினங்கள் போராட்டம் நடந்தது. அரசு கைது செய்தது. தோழர்கள் சித்திரவதைகளுக்கா ட்படுத்தப்பட்டனர். இதைக் கண்ட பி. சீனிவாசராவ் கடுமையாக ஆட்சேபித்து கண்டன அறிக்கை விட்டார். போராட்டத்திற்காக ஆட்களைத் தயார் செய்யவும், செலவிற்குப் பணம் தயார் செய்யவும்,தங்க இடம் மற்றும் உணவு தயார் செய்யவும் செல்லையா முழுப் பொறுப்பேற்று கடுமையாக பாடுபட்டார்.

கோம்பையாறு சிவகிரி பாசன வசதிக்கு பயன்படக்கூடிய ஆறு ஆகும். இந்த ஆற்று நீர் சின்னவுடைப்பேரி குளத்திற்கு வந்த பிறகுதான் பிற பகுதிகளுக்குச் செல்லும். இந்தக் குளம் அடிக்கடி உடைப்பு எடுக்கும். உடைப்பு எடுத்த காலத்தில் அதாவது 1956 வது ஆண்டு எடுத்த போது 15 நாட்கள் சிரமதானம் செய்து மண் சுமந்து கரையை அடைத்தார்கள். இதற்காகதோழர்களைத் திரட்டி சிரமதான இயக்கம் கண்டவர் கே.செல்லையா.

– செ.பரத்வாஜ்

# எங்கே செல்கிறது இந்திய நீதித்துறை?



த.லெனின்

**அரசியல் அழுத்தங்கள், சமூக நிர்ப்பந்தங்கள் மற்றும் உள்ளார்ந்த சார்புகள் இல்லாமல் பதவியில் செயல்படும் ஒவ்வொரு தனி நீதிபதியின் சுதந்திரத்தைப் பொறுத்தே நீதித்துறையின் சுதந்திரம் அமைந்துள்ளது என்று தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் தெரிவித்தார்.**

ஜனவரி 28, 1950 அன்று உச்ச நீதிமன்றத்தின் முதல் அமர்வை நினைவுகூரும் வகையில், உச்ச நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் நாடு முழுவதும் உள்ள 25 உயர் நீதிமன்றங்களின் தலைமை நீதிபதிகள் கொண்ட ஒரு பூர்வாங்க நிகழ்விற்கு தலைமை நீதிபதி டி.ஒய் சந்திரசூட் தலைமை தாங்கி பேசிய போது இப்படி குறிப்பிட்டார்.

ஆனால் இந்தியாவில் உண்மையாக நீதித் துறையின் சுதந்திரம் பாதுகாக்க பட்டுள்ளதா?

உத்தரப்பிரதேச மாநிலம் வாரணாசியில் அமைந்து உள்ள காசி விஸ்வநாதர் கோயில் இந்துக்களின் பிரசித்திபெற்ற புனித தளமாக இருந்து வருகிறது. இதன் அருகாமையிலேயே முகலாய பேரரசர் அவுரங்கசீப் கட்டிய ஞானவாபி என்ற மசூதியும் அமைந்து உள்ளது.

பல நூற்றாண்டுகள் பழமை கொண்ட இந்த மசூதி வளாகத்தின் வெளிப்புறச் சுவற்றுக்கு அருகே சிங்கார கவுரி அம்மன் சிலையும் உள்ளது. ஒரு காலத்தில் இந்து – முஸ்லிம் ஒற்றுமைக்கு உதாரணமாக சொல்லப்பட்ட இந்த இடம் தற்போது பிரச்சனைக்குரிய இடமாக மாற்றிவிட்டனர்.

காரணம் சிங்காரகவுரி அம்மன் சிலைக்கு 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை பூஜை நடத்த அனுமதிகோரி பெண் பக்தர்கள் வாரணாசி நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். கடந்த 2022 ஆம் ஆண்டு இந்த வழக்கை விசாரித்த வாரணாசி நீதிமன்றம் ஞானவாபி மசூதியில் வீடியோ ஆய்வு மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டது. மசூதியை நிர்வகித்து வரும் அஞ்சுமன் ஜாமியா கமிட்டி இந்த உத்தரவை எதிர்த்து வாரணாசி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது.

இந்த வழக்கை கடந்த 2022 ஆம் ஆண்டு மே மாதம் விசாரித்த நீதிமன்றம் அம்மாதம் 17 ஆம் தேதிக்குள் ஆய்வை நிறைவு செய்து அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்தது. இதனை எதிர்த்து மசூதி நிர்வாகம் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது. இந்த வழக்கு அப்போது உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக இருந்த என்.வி.ரமணா அமர்வு முன்பாக விசாரணைக்கு வந்தது. அதில் வழக்கு குறித்த ஆவணங்களை பார்க்காமல் கள ஆய்வு செய்ய தடை விதிக்க முடியாது என தெரிவித்தது.

இதனை தொடர்ந்து மசூதியில் கள ஆய்வு நடைபெற்றது. 3 நாட்கள் நடைபெற்ற ஆய்வில் மசூதியில் சிவலிங்கம் போன்ற ஒரு கல் இருப்பதாக மனுதாரர் தரப்பு தெரிவித்தது. அதன் பின்னர் நீதிமன்றம் சிவலிங்கம் போன்ற கல் கண்டுபிடிக்கப்பட்ட பகுதிக்கு சீல் வைக்க மாவட்ட ஆட்சியருக்கு உத்தரவிட்டது. இந்த நிலையில் மசூதியில் கண்டுபிடிக்கப்பட்டது சிவலிங்கம் இல்லை என்றும், தொழுகைக்கு வருபவர்கள் தூய்மை செய்யும் தண்ணீர் தொட்டியில் இருந்த நீரூற்று போன்ற ஒரு அமைப்பு அது என மசூதி நிர்வாகம் தரப்பில் விளக்கமளிக்கப்பட்டது.

அதேபோல் இந்திய தொல்லியல்துறை மசூதியில் செய்த அறிவியல்பூர்வ சர்வே முடிவுகளை கடந்த 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வாரணாசி மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. வழக்கை விசாரித்த நீதிமன்றம் இந்து கோயிலை இடித்துவிட்டு மசூதி கட்டப்பட்டதா? என்பதை உறுதிபடுத்துமாறு கேட்டது. அத்துடன் இது குறித்த அறிவியல் ஆய்வுகளை இரு தரப்புக்கும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையும் நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது

### வி.எச்.பி.யும் – பா.ஜ.க.வும்!

ஞானவாபி பள்ளிவாசல் வளாகத்தில் சுயம்புவாக உள்ள சிவலிங்கம் உள்ள இடத்தில் புதிய கோயிலை புனரமைக்க அனுமதிக்க வேண்டும். இதனை முஸ்லிம்கள் தடுக்கக்கூடாது என்று வி.எச்.பி.யும், பாஜகவும், இப்போது கோரிக்கை வைத்துள்ளன.

ஞானவாபி பள்ளிவாசல் வளாகம் எந்த மதத்திற்கு சொந்தமாக இருந்தது என்பதை முதலில் முடிவு செய்ய வேண்டும் என்று வாரணாசி மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டது. மேலும் 1991ஆம் ஆண்டின் வழிபாட்டுத் தலங்கள் சிறப்பு ஏற்பாடுகள் சட்டத்தின்படி, அயோத்தியை தவிர, பிற வழிபாட்டுத் தலங்கள் அனைத்தும் ஆகஸ்டு 15, 1947 அன்று இருந்த அதே நிலையில் பராமரிக்கப்பட வேண்டும் என்று



கூறப்பட்டுள்ளதால், சர்ச்சைக்குரிய இடமான ஞானவாபி கிணறு அல்லது பள்ளிவாசல், காசி விஸ்வநாதர் கோயிலின் ஒரு பகுதியாக இருந்ததா? என்பதை முதலில் தீர்மானிக்க நடவடிக்கை வேண்டும் என வாரணாசி மாவட்ட நீதிமன்றம் முடிவு செய்தது.

காசிவிஸ்வநாதர் கோயிலுக்கு ஒரு பழங்கால வரலாறு இருப்பதாகவும், அது மக்களின் இந்து மத உணர்வுகளுடன் தொடர்புடையது என்றும் நீதிமன்றம் நம்பியது. எனவே இந்த சர்ச்சையை விரைவில் தீர்க்க வேண்டும் என்றும் கூறியது.

இந்திய தொல்லியல் துறையின் (ஏஎஸ்ஐ) ஆய்வுக்கு இடையூறாக, செயற்கை சுவர்களால் சீல் வைக்கப்பட்ட வாரணாசி மசூதியின் 10 பாதாள அறைகளைத் திறக்க கோரி ஞானவாபி வழக்கில் இந்து பெண் பக்த்தர்கள் உச்ச நீதிமன்றத்தை அணுகி உள்ளனர்.

### வழிபாட்டுத்தல பாதுகாப்புச் சட்டம்!

பொது வழிபாட்டுத் தலங்களின் மதத் தன்மையை 1947 ஆகஸ்டு 15 இல் இருந்ததைப் போன்றே பாதுகாப்பதற்கும், பொது வழிபாட்டுத் தலங்களை, வேறு மத வழிபாட்டிற்கு மாற்றுவதற்கு எதிராகவும் உத்தரவாதம் அளிப்பதன் மூலம், காலனித்துவ ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெறுவது, அநீதிகளைக் களைவதற்கான அரசியலமைப்பு அடிப்படைகளை வழங்குகிறது என்று நாடாளுமன்றம் தீர்மானித்தது.

ஒவ்வொரு மத சமூகத்திற்கும் அவர்களின் வழிபாட்டுத் தலங்கள் பாதுகாக்கப்படும் மற்றும் அவற்றின் குணாதிசயங்கள் மாற்றப்படாது என்று நம்பிக்கையை அளித்தது. அந்த விதிமுறைகள் பிரிவு 51A இன் கீழ் அடிப்படைக் கடமைகளைச் செயல்படுத்துகின்றன, எனவே இது ஒவ்வொரு குடிமகனுக்கும் சாதகமான கட்டளைகளாகும்.

அரசு, இந்தச் சட்டத்தை இயற்றுவதன் மூலம், அரசியலமைப்பின் அடிப்படை அம்சங்களில் ஒரு பகுதியாக இருக்கும் அனைத்து மதங்களின் சமத்துவத்தையும், மதச்சார்பின்மையையும் நிலைநிறுத்துவதற்கான அரசியலமைப்பு உறுதிப்பாட்டை அமல்படுத்தியது இச்சட்டம். ஆனால் இச்சட்டம் மீண்டும் கேள்விக்கு உட்படுத்தப்பட்டால் இந்தியாவின் மதச் சார்பின்மைக்கு குந்தகம் விளைவிக்கும் மதவெறிக் கலவரங்களுக்கே வழி வகுக்கும் இதனை இப்போது நீதிமன்றமே செய்யலாமா?

ஏன் ஒரு வேலை 1192 ஆண்டிலிருந்து அதாவது முகலாய ஆட்சி காலத்தில் இருந்த இந்து கோவில்கள் குறித்து ஒருவர் கேள்வி கேட்கலாம் என்றால் பிரிட்டிஷ் கால தொல்பொருள் ஆய்வாளர் ஆர்.எஸ். பிஷ்ட் விவரித்தபடி, ஆரியர்களின் படையெடுப்பின் போது அன்றைய திராவிடர்களின் ஹரப்பா, மொகஞ் சதாரோ வழிபாட்டுத் தலங்களை “வேண்டுமென்றே” சேதப்படுத்திய கூற்றுக்கு ஏன் திரும்பிச் செல்லக்கூடாது ? என்ற கேள்வியும் முக்கியத்துவம் பெறுகிறது.

ஒரு காலத்தில் இயற்கை வழிபாட்டு முறைகள் இங்கு ஏராளம் கடைபிடிக்கப்பட்டு வந்துள்ளன அவற்றையெல்லாம் அழித்துவிட்டுத் தான் பின்பு சைவம், வைணவம் தோன்றியது. சமண, பௌத்த ஆலயங்களை அழித்துதான் பல இந்து கோவில்கள் கட்டப்பட்டுள்ள வரலாறும் நாம் அறிந்ததே.

இதற்கெல்லாம் மீண்டும் தீர்ப்பு எழுத தீர்மானித்தால் ஒரு காட்டுமிராண்டிக்கால வாழ்க்கைக்குத் தான் நாம் சென்றாக வேண்டும். எனவே தான் இந்தியாவில் கொண்டுவரப்பட்டுள்ள வழிபாட்டு தலங்கள் பாதுகாப்புச் சட்டம் 1991 இந்திய சுதந்திரம் பெற்ற நாளை ஒரு அடிப்படை அலகாக கொண்டு மிகத் தெளிவாக வழிகாட்டுகிறது. இதனைத் தான் அனைவரும் பின்பற்ற வேண்டும். அதுவே இதற்கெல்லாம் தீர்வை தரும்.

அத்துடன் பாபர் மசூதி – அயோத்தியா தீர்ப்பில் அதற்குப் பிறகு எந்த வழிபாட்டுத் தலப் பிரச்சனையும் இந்த சட்டப்படியே நாம் அணுக வேண்டும் என்று குறிப்பிட்டதன் மூலம் அதற்கு முற்றுப்புள்ளியை அன்றே உச்ச நீதிமன்றம் வைத்தது என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இதே வழிபாட்டுச் சட்டம் பாகிஸ்தானிலும் கொண்டுவரப்பட்டது.

### பாதுகாக்கப்பட்ட குருத்துவரா!

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் உள்ள குருத்துவரா நன்கனா சாஹிப்பை சேதப்படுத்திய குற்றத்தில் ஈடுபட்ட மூன்று குற்றவாளிகளுக்கு பாகிஸ்தானின் பயங்கரவாத எதிர்ப்பு நீதிமன்றம் (ATC) செவ்வாய்க்கிழமை இரண்டு ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதித்தது.

குருத்வாரா நங்கனா சாஹிப், குருத்வாரா ஜனம் ஆஸ்தான் என்றும் அழைக்கப்படுகிறது, இது லாகூருக்கு அருகிலுள்ள ஒரு வழிபாட்டுத் தளமாகும், அங்கு சீக்கியர்களின் முதல் குரு குரு நானக் பிறந்தார் என்றும் நம்பப்படுகிறது.

ஜனவரி 2020 இல், ஒரு வன்முறைக் கும்பல் குருத்வாராவைத் தாக்கி கற்களை வீசியது மற்றும் சிறுபான்மையினரின் வழிபாட்டுத் தலத்தை (குர்த்வாரா ஜனமஸ்தான்) அழித்து அங்கு “குலாமான் இமுஸ்தபா” மசூதியைக் கட்டுவதாக அச்சுறுத்தியது. எனினும் காவல் துறையினர் நிலைமையைக் கட்டுப்படுத்தினர்.

பாகிஸ்தான் தண்டனைச் சட்டத்தின் பிரிவுகள் 295A, 290, 291, 341,506, 148 மற்றும் 149 மற்றும் 7ATA (தீவிரவாத எதிர்ப்புச் சட்டம்) ஆகியவற்றின் கீழ் இவர்கள் குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டனர்.

இதில் பிரதான குற்றவாளி இம்ரான் சிஷ்டிக்கு இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்ததுடன் 10,000 பாகிஸ்தான் ரூபாய் அபராதமும் விதித்தது. மற்ற இரண்டு குற்றவாளிகள் முகமது சல்மான் மற்றும் முஹம்மது அகமது ஆகியோருக்கு ஆறு மாதங்கள் தண்டனை வழங்கியது . மற்ற, நான்கு பேர் ஆதாரம் இல்லாததால் விடுவிக்கப்பட்டனர். இதனை அப்படியே ஏற்று தீர்ப்பு வழங்கியுள்ள பாகிஸ்தானின் உச்சநீதிமன்றம்.

தண்டனை அறிவிக்கப்படும் போது குற்றம் சாட்டப்பட்டவர்கள் அனைவரும் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர். அவர்களின் தண்டனையை அடுத்து மதவாதிகள் நடத்தும் எந்தவொரு போராட்டத்தையும் கையாள கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

### மதச்சார்பற்ற நாட்டின் நீதிமன்றம்!

இஸ்லாமிய நாடு என்று அறியப்பட்ட பாகிஸ்தானில் கூட சிறுபான்மையினர் வழிபாட்டுத் தலங்கள் அதுவும் அந்த குருத்வரா ஏற்கனவே ஒரு பள்ளிவாசலை உடைத்து தான் கட்டப்பட்டது என்று ஆதாரப்பூர்வ சான்றுகளை காட்டியும் கூட நீதிமன்றம் மிக கவனமாக இதனை பரிசீலித்து சிறுபான்மையினரின் வழிபாட்டு உரிமையை பாதுகாத்துள்ளது.

ஆனால் மதச்சார்பற்ற இந்தியாவில் எந்த ஆதாரங்களையும் கணக்கில் எடுக்காமல் மனசாட்சியை, நம்பிக்கை மட்டும் கருத்தில் கொண்டு பாபர் மசூதி ராமர் கோவில் பிரச்சனையில் உச்ச நீதிமன்றம் ஒரு தலைப்பட்சமாக தீர்ப்பளித்தது.

இது இந்திய நீதி துறையின் நீர்த்துப்போன தன்மையைத் தான் படம் பிடித்து காட்டுகிறது. எனவே சுதந்திரமான நீதித்துறை இந்திய ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கு மட்டுமல்ல மதச்சார்பின்மையும் பாதுகாக்கும் ஓர் அடிப்படை தூண் என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஆனால் சமீபகாலமாக உச்சநீதிமன்றம் அளித்து வரும் தீர்ப்புகள் அனைத்தும் இந்த நம்பிக்கையை தகர்க்கும் வண்ணம் உள்ளது. இந்துத்துவா குறித்து தீர்ப்பளித்த உச்ச நீதிமன்றம் இது இந்தியர்களின் வாழ்க்கை முறை என்று குறிப்பிட்டது. காஷ்மீர் சிறப்பு சட்டப்பிரிவு 370 நீக்கியதை செல்லும் என்றும் தீர்ப்பளித்ததும், பாபர் மசூதியை சேதப்படுத்தியது குற்றவாளிகள் என்று கருத்து சொல்ல பட்டாலும் அவர்கள் மீது எந்த தண்டனையும் அளிக்காததும் நமது இந்திய நீதிமன்றங்கள் இந்துப் பெரும்பான்மை வாத கருத்துக்கு ஆட்பட்டு தீர்ப்பளித்து வருகிறதோ என்ற எண்ணம் மிக வலுவாக நமது ஒவ்வொருவர் மத்தியிலும் எழுந்து வருகிறது.

எனவே மதச்சார்பற்ற இந்திய ஜனநாயக குடியரசை காப்பாற்ற மக்கள் அனைத்து வகையிலும் போராட முன்வர வேண்டும் என்பதே இன்று நம் முன்னால் இருக்கும் ஒரே வழி!

தொடர்புக்கு: 9444481703

# நூற்றாண்டை நோக்கி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி

**நூற்றாண்டை நெருங்கும் நமது கட்சியின் அமைப்பு தினம் 1925 டிசம்பர் 26ல் அமைக்கப்பட்ட நமது கட்சி ஏறத்தாழ நூற்றாண்டை நிறைவு செய்யும் தலைவா யிலில் செம்மாந்து நிற்கிறது. அன்றிலிருந்து கூடுதல் சிகரங்களை நோக்கி இயக்கம் தன் வேகத்தைத் தொடர்கிறது.**

பம்பாய் பஞ்சாலைகள், கல்கத்தா சணல் ஆலைகள் மற்றும் பிற இடங்களிலும் உழைக்கும் மக்கள் கூட்டத்தின் வேலை நிறுத்தங்கள் மற்றும் போராட்டங்களுடன், 1920ல் ஏஐடியுசி பேரியக்கம் அமைக்கப்பட்டது.

விடுதலை என்பதன் பொருள், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் காலனியாக இருந்த தேசத்தின் உள்ளே சுரண்டும் முறையின் அடிமைத் தளைகளிலிருந்தும் மற்றும் உலக அளவில் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும் விடுதலை பெறுவது என்பதாகும்.

இந்தியப் புரட்சியாளர்கள் மத்தியில் இந்தக் கால கட்டத்தின் போக்குகளை நான்கு குழுக்களாகப் பிரிக்கலாம். முதலாவது அன்னிய மண்ணில் போரின்போதும், போருக்குப் பிந்தைய ஆண்டுகளிலும், அமெரிக்கா, ஜெர்மனி, ஆப்கானிஸ்தான் துருக்கி முதலான நாடுகளில் தீவிரமாகச் செயல்பட்டு வந்தவர்கள்.

மற்ற பிற நிகழ்வுகளில் காபூலில் ஒரு "சுதந்திர இந்தியத் தற்காலிக அரசு" அமைக்கப்பட்டதும் ஒன்று. இந்தச் செயல்வீரர்களில் இராஜா மகேந்திர பிரதாப், வீரேந்திரநாத் சட்டோபாத்யாயா, எம் பரகத்துல்லா, எம்.பி.பி.டி. ஆச்சார்யா. எம்.என்.ராய் மற்றும் அபானி முகர்ஜி முதலான முன்பு பெர்லினில் இருந்து செயல்பட்ட புகழ்பெற்றவர்களும் அடங்குவர்.

இரண்டாவது குழு, போர்க்காலத்தில் (1914 –16) நாட்டைவிட்டு வெளியேறி வெளிநாடுகளுக்கு சென்றவர்களான, இஸ்லாமிய நாடுகள் முழுவதும் பரவிய கிலாஃபத் இயக்கத்திலிருந்து வந்தவர்கள். போர் நாட்களின்போது மாபெரும் ஹிஜாரத் இயக்கத்திலிருந்து வந்து, பின் ரஷ்ய அக்டோபர் புரட்சி செல்வாக்கின் தாக்கத்தால் ஈர்க்கப்பட்டவர்களும் உண்டு.

அவர்களில் முகமது அலி செப்பாய், ரஹ்மத் அலி கான், ஃபெரோஜுதீன் மன்சூர், அப்துல் மஜீத் மற்றும் செளகத் உஸ்மானி முதலானோர் அடங்குவர்.

மூன்றாவது குழு தேசிய புரட்சியாளர்கள், அவர்கள் அனைவரையும் சீக்கியர்கள் மற்றும் அமெரிக்காவில் போருக்கு முன் புலம்பெயர்ந்த பஞ்சாபிய தொழிலாளர்கள் மத்தியில் அமைக்கப்பட்ட கதர் கட்சி (Ghadar party) யிலிருந்து வந்தவர்கள் என டாக்டர் ஜி அதிகாரி வகைப்படுத்துவார். அவர்கள் புரட்சியை அரங்கேற்ற முயன்றார்கள், ஆனால் 1915ல் அந்த முயற்சி முறியடிக்கப்பட்டது.

மற்றொரு குழு, தேசியக் காங்கிரஸ் கட்சியில் செயல்பட்டுவந்த இடதுசாரி அணி, கிலாஃபத் இயக்கம், தலைமறைவு புரட்சிகர இயக்கங்கள் மற்றும் கட்சிகள், தவிர அகாலி இயக்கம் குறிப்பாகக் கதர் கட்சியுடன் தொடர்புடைய அகாலி இடதுசாரி குழு முதலானவற்றில் தாய் நாட்டிற்குள் தீவிரமாகச் செயல்பட்டு வந்தவர்களைச் சேர்ந்ததாகும்.

1921 –22ன் ஒத்துழையாமை இயக்கம் திரும்பப் பெற்ற ஏமாற்றத்தால் வந்தவர்கள் இந்தக் குழுக்களில் பலராவர்; அவர்கள் விஞ்ஞான சோஷலிசத்தை நம்பியவர்கள் அணியில் சேர்ந்து தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் வர்க்க அமைப்புகளில் இணைந்தனர்.

அந்தக் காலகட்டம், மாபெரும் அக்டோபர் புரட்சி நடத்தி முடிக்கப்பட்டு, புதிய சோவியத் அரசு அமைந்த காலம். அந்த யுகப் புரட்சி உலகம் முழுவதுமுள்ள விடுதலை இயக்கங்கள் மற்றும் புரட்சிகர இயக்கங்களின் மீதும், ஆசியா மற்றும் பிற இடங்களில் காலனிய எதிர்ப்பு விடுதலை இயக்கங்கள் மீதும் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்தியப் புரட்சிகர எழுச்சியை பிரிட்டிஷ் காலனியவாதிகள், 1857ன் எழுச்சியைப் போல அபாயகரமானதாக, கையறுநிலை அவநம்பிக்கையை உணர்ந்தனர்.

20ம் நூற்றாண்டின் தொடக்க இருபதுகளில் கம்யூனிஸ்ட் கட்சி அமைக்கப்பட்டது என்பதே, சுதந்திரத்திற்கான மேலும் திறனுள்ள முறைகளில் புதிய புதிய போராட்டத் திட்டங்களைச் செயல்படுத்தும் வழிவகைகளைத் தேடுவதன் வெள்ளத் தடுப்புக் கதவுகளை உடைத்தெறிந்து திறந்து விடுவதாயிற்று. மேலும் அது, பல வேறுபட்ட போக்குகளில் இருந்தவர்களை எல்லாம் ஒன்று திரட்டிக் கொண்டு வந்து, விடுதலை நோக்கி மேலும் முன்னேற விஞ்ஞான முறையைக் கண்டது.




பாட்டாளி சர்வதேசிய இயக்கவியல் ஒற்றுமையும், தேச பக்தியும் இணைந்தன் விளைவு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நிறுவப்பட்டது. கட்சியுடன் சேர்ந்தே இந்த இரண்டு போக்கு நீரோட்டமும் தொடர்ந்து உருவாகி வளர்ந்தது. ஏகாதிபத்திய எதிர்ப்பு நீரோட்டம் எப்படி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பகுதியானதோ அதே போல, அதன் சுரண்டலுக்கு எதிரான போராட்டம், தொழிலாளர் வர்க்கம் மற்றும் விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் என இரு சாரர்களையும் அணி திரட்டியது.

நாட்டின் பலபகுதிகளில் தொடக்க கால கம்யூனிஸ்ட் குழுக்கள் அமைக்கப்பட்டன. அவற்றுள், பம்பாயில் 'சோஷலிஸ்ட்' என்ற இதழை வெளியிட்டு 'காந்தி எதிர் லெனின்' என்ற ஒப்பீட்டு நூலை எழுதிய எஸ். ஏ. டாங்கே அவர்களின் இரு எழுத்துகளையும் லெனின் பார்த்தார், படிக்கவும் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. சென்னையில் புகழ்பெற்ற தொழிற்சங்கத் தலைவரான வழக்கறிஞர் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலு 'விவசாயிகள் மற்றும் தொழிலாளர் கட்சி'யை அமைத்தார்.

கட்சி அமைக்கப்படுவதற்கு ஏற்ற தொடர்டைய சந்தர்ப்பத்தை அமைக்க உதவிய நிகழ்வுகளை 1922 – 25 காலகட்டத்தில் நடந்தவைகளிலிருந்து அடையாளம் காண முடியும். முதலாவது 1922 – 24 காலகட்டத்தின் பெஷாவர் சதி வழக்குகள். இவற்றைத் தொடர்ந்த கருத்துகள், கம்யூனிஸ்ட்களின் செயல்பாடுகளை வெளிப்படையாக ஆற்றவும், மக்கள் திரளைத் திரட்டி கட்சி வலிமை அடைந்தது. இது பிரிட்டிஷ் ஆட்சியாளர்களிடம் ஆழமான பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

அதிலிருந்து மீளும் வழியாக அவர்கள் மக்கள் கூட்டத்தையும் தலைவர்களையும் பிரிக்கத் திட்டமிட்டார்கள். இது தொடர்பாக அவர்களின் முதல் நடவடிக்கை, 1924ன் கான்பூர் போல்ஷ்விக் சதி வழக்கு.

விரைவில் 1925 டிசம்பர் 26ல் முதலாவது அமைப்பு மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது. அக்டோபர் யுகப் புரட்சிக்கு இட்டுச் சென்ற கோட்பாடுகளின் வளர்ச்சி, இப்போது இந்தியாவிலும் கூட திரும்ப மாற்ற முடியாதபடி காலூன்றி, இந்திய நாட்டில் அன்று பிறந்த இளம் கம்யூனிஸ்ட்களின் நடவடிக்கைகள், வரும் காலத்தில் உண்மையான ஆபத்தாகப் போகிறது என்பதைப் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் உணர்ந்தனர்.

காலனிய எதிர்ப்பு முன்னணியில் போராட்டத்தைத் தொடர்வதற்கான உத்தியை அமைப்பது குறித்து லெனின் அக்கறை கொண்டார். காலனிய மற்றும் அரைக்காலனிய நாடுகளில் தேசிய இயக்கத்தில் ஈடுபடுத்திக் கொண்ட பூர்ஷ்வா முதலாளி பிரிவுக்குப் பரவலான ஆதரவு அளிக்கும் தேவை குறித்து அவர் மிக கவனமாக இருந்தார். இப்பிரச்சனை விடுதலைக்குப் பிறகும் உயிர்ப்புடன் நீடித்தது.

தேசியப் பிரதான நீரோட்டத்தில் தேசிய பூர்ஷ்வாக்களின் பங்கு மற்றும் அவர்களைக் குணாம்சப்படுத்துவது ஐக்கிய முன்னணி அமைப்பதில் முக்கியமான கட்டாயமாகும். தேசியம் நோக்கிய உறுதிப்பாட்டுடன் அப்படி கூட்டணி சேரும்போது வேறுபட்ட வர்க்க நலன்கள் மற்றும் அதற்கான தீர்வுகளில் சமரசம் மீது விவாதமும் எழுப்பப்பட்டது.

பின்னர் 1925ல் கட்சி மாநாடு கான்பூரில் நடைபெற்றபோது, கட்சி அமைப்பு நிலை விதிகளுடன் சுருக்கமான திட்டங்களின் அடிப்படைகளும் அளிக்கப்பட்டன.

தொடக்க நாட்களிலிருந்து கொல்கத்தா, பம்பாய், சென்னை, பஞ்சாப் மற்றும் பல்வேறு பிற இடங்களில் செயல்பட்டுவந்த கம்யூனிஸ்ட் குழுகளின் பிரதிநிதிகள் அனைவரையும் மாநாட்டில் கட்சியால் திரட்டிக் கூட்ட முடிந்தது. மாநாடு மத்திய செயற்குழுவைத் தேர்ந்தெடுத்தது. 1929ல் மீரட் சதி வழக்கில் ஏறத்தாழ எல்லாத் தலைவர்களும் கைது செய்யப்பட்டது.

ஒரு முனையில் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போராடுவது மற்றும் அதே நேரம் மறுமுனையில் தொழிலாளர் வர்க்கம் மற்றும் வேளாண் தொழில் மக்களையும் திரட்டுவது என்ற புதிய கட்டத்தில் கட்சி நுழைந்தது.

பெருமளவில் பெருந்திரள் மக்கள் இயக்கங்கள், வேலைநிறுத்தப் போராட்டங்கள், விவசாயிகளின் பேரணிகள் மக்களுக்கு அரசியல் விழிப்புணர்வு பெற உதவின. அவை வர்க்கங்களுக்கு இடையே வெளிப்படையான அரசியல் பொருளாதாரப் போராட்டம், ஏறத்தாழ நாடு முழுவதும் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் கட்சிகளின் தலைமையேற்பில் வெளிப்படையாகத் தொடங்கப்பட்ட இயக்கங்களாகும்.

இந்திய காங்கிரஸ் கட்சியிலும்கூட கம்யூனிஸ்ட்கள் பணியாற்றி, பரந்த இடது அணி ஆதரவைத் தேசியப் புரட்சிகரத் திட்டத்திற்காக வற்புறுத்தியது; தவிர, புரட்சிகரத் திசைவழியில் நாட்டின் விடுதலைக்கான போராட்டங்களில் பெருந்திரள் சக்தியாக உரிய பங்கை ஆற்ற தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் மத்தியில் சுதந்திரமான பெருந்திரள் அடிப்படையில் வர்க்க அமைப்புகளைக் கட்டி அமைக்கவும் கம்யூனிஸ்ட்கள் பாடுபட்டனர்.

திசைவழியில் இந்தத் தெளிவுதான், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அமைப்பு தினம் 1925 கான்பூர் மாநாடே என்பதைக் கட்சித் தலைவர்கள் 1959 ஆகஸ்ட் 18ல் முடிவு செய்ய உதவியது. (இவ்வாறு கூறுவதால், தாஷ்கண்ட்டில் நடைபெற்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியை நிறுவுவதற்கான கூட்டத்தின் மதிப்பையும், அதன் முக்கியத்துவத்தையும் குறைத்து மதிப்பிடுவதோ அல்லது அது ஒரு, குறிப்பிடத்தக்க நிகழ்வு என்பதன் பெருமையை விட்டுக் கொடுப்பதோ அல்ல.)

அமைப்பு மாநாடு, காலனிய ஆட்சியிலிருந்து நாட்டை விடுவிக்கவும் நாட்டைச் சோஷலிசப் பாதையை நோக்கி நடைபோடச் செயயவும் கம்யூனிஸ்ட் கட்சி பாடுபடும் என்று உறுதிபட பிரகடனப்படுத்தியது.

மாற்றங்களின் வேகத்துடன் ஈடுகொடுத்துக் கட்சியின் அந்தப் பயணம் தொடர்கிறது, ஆனால் இலக்கு அதே இலட்சியங்களுடன் பயணத்தை வழி நடத்துகிறது.

வெற்றிகரமாக நூற்றாண்டில் கால் பதிக்க இருக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வாழ்க!

**நியூ ஏஜ் தலையங்கம்**
**தமிழில் : நீலகண்டன்**

## திருச்சியில் என்சிபிஎச் புத்தக கண்காட்சி

நேஷனல் புக் ட்ரஸ்ட் மற்றும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் இணைந்து நடத்தும் 38வது தேசிய புத்தக கண்காட்சி திருச்சி மத்திய பேருந்துநிலையம் அருகில் மூன்று மாத காலம் நடைபெறுகிறது. இதன் துவக்க விழா தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற மாநில துணைத்தலைவர் ம. செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது. புத்தக கண்காட்சியை 53 வது வார்டு மாமன்ற உறுப்பினர் ஜே. கலைச்செல்வி தொடங்கி வைத்தார்.

என்.சி.பி.எச் மண்டல மேலாளர் எஸ்.குமார் முன்னிலை வகித்தார். 23 வது வார்டு மாமன்ற உறுப்பினர் க. சுரேஷ் வரவேற்புரை ஆற்றினார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநகர் மாவட்ட செயலாளர் எஸ். சிவா வாழ்த்துரை வழங்கினார். ஏ ஐ டி யு சி மாவட்ட தலைவர் நடராஜா, மாணவர் பெருமன்றத்தின் மாநில தலைவர் க.இப்ராகிம், இளைஞர் பெருமன்றத்தின் மேற்கு பகுதி செயலாளர் கி.தர்மராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர். இறுதியாக திருச்சி மேலாளர் க. சுரேஷ் நன்றியுரை ஆற்றினார்.



# மார்க்சியத்தை தமிழ் பண்பாட்டுக்கு பயன்படுத்தியவர் நா.வானமாமலை



எஸ்.தோத்தாத்திரி

**தமிழக பொதுவுடமை இயக்கத்தில் இரு வானமாமலைகள் உண்டு. இருவரும் பொதுவுடமைவாதிகளே. சாதி காரணமாக அவர்களைப் பற்றி அதிகம் பேசுவதில்லை.**

இது ஒரு தவறான போக்காகும். பொதுவுடமைக் கட்சிகள் என்று பல இருந்தாலும், கட்சிக்குள் வந்த பிறகு சாதிகளை மறக்க வேண்டும் என்ற உணர்வு வந்தால் தான் இந்தப் பார்வை நீங்கும்.

ஏனென்றால் இடதுசாரி கட்சிகள் எத்தனை இருந்தாலும் அவை மார்க்சியத்தை அடித்தளமாகக் கொண்டுதான் இயங்குகின்றன. ஒரு மார்க்சியவாதிக்கு இனம், மதம், மொழி இல்லை என்று கூறுவார்கள். இதைத்தான் வைணவரான பெரியாழ்வார் பின்வருமாறு கூறுவார்,

**“தொண்டைக் குலத்திலுள்ளார்**
**வந்தடி தொழுது**
**ஆயிரம் நாமம் சொல்லி**
**பண்டைக் குலத்தைத் தவிர்த்து**
**பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு என்மினே”**

இதன் பொருள், ஒருவன் வைணவனாகிவிட்டால் அவனுடைய பழைய சாதிய முறையை விட்டு விட வேண்டியதாகும். இந்தக் கூற்று பொதுவுடமை வாதிகளுக்கும் பொருந்தும். இதனால் மதத்தை நாம் ஆதரிக்கிறோம் என்று ஆகிவிடாது. அதன் மனிதநேயக் கருத்துக்களை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

பிறப்பால் மேல் சாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், இந்த இரு வானமாமலைகளும் தங்கள் குலத்தை மறந்து பொதுவுடமை இயக்கத்தில் சேர்ந்து பல சாதனைகளைப் புரிந்துள்ளனர்.

பேராசிரியர் நா.வானமாமலை 1917 ஆம் ஆண்டு நெல்லை மாவட்டத்தில் உள்ள நான்குநேரியில் பிறந்தார். அவரது தகப்பனார் தெற்கு நான்குநேரி கிராம முன்சீப்பாக இருந்தவர். அவரது குடும்பத்தார் அனைவரும் தீவிரமான வைணவர்கள். நான்குநேரி முன்பு ஸ்ரீவரமங்கல நகர் என்று அழைக்கப்பட்டது. இது வைணவ மரபில் உள்ள 108 திருத்தலங்களில் ஒன்று. வைணவர்களுக்கு குருநாதர் என்ற கருதப்படும் நம்மாழ்வார் இதனைப் பற்றி பாடியுள்ளார். இது வைணவ மரபில் மங்களா சாசனம் என்று அழைக்கப்படுகிறது.

நா.வானமாமலை பள்ளிப் படிப்பை ஜில்லா போர்டு பள்ளியில் முடித்தார். அந்த காலத்து இன்டர்மீடியட் படிப்பை நெல்லை இந்து கல்லூரியில் முடித்தார். பட்டப்படிப்பை மதுரை அமெரிக்கன் கல்லூரியில் முடித்தார். ஆசிரியர் பயிற்சிப் படிப்பை சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் முடித்தார். சிறிது காலம் பல உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றினார். இந்தக் காலகட்டத்தில் தனித்தேர்வராக இருந்து தமிழில் முதுகலை பட்டப்படிப்பை முடித்தார்.

## மடத்திற்கு எதிராகப் போராட்டம்!

இதே காலகட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தொடர்பு காரணமாக ஒரு முழு நேர கம்யூனிஸ்ட் ஆக மாறினார். அதன் காரணமாக அவரது வேலையை விட்டார். இந்தக் கட்டத்தில் அவர் தோழர் இரா.நல்லகண்ணு ஆகியோருடன் இணைந்து ஹரிஜனங்களை அழைத்துக் கொண்டு மடத்திற்கு எதிராக நடத்திய போராட்டம் குறிப்பிடத்தக்கது. அப்பொழுது அவர் தாக்கப்பட்டார். அந்த நேரத்தில் விவசாய சங்கத்தின் சார்பாக பல துண்டுபிரசுரங்களையும் வெளியிட்டார். அவை இன்று கிடைக்கவில்லை. பிறகு அங்கிருந்து நெல்லை சென்றார். ஜீவனத்திற்காக ஒரு தனிப் பயிற்சிக் கல்லூரி ஆரம்பித்தார். அதன் பிறகு அவரது வாழ்க்கை முழுவதிலும் பண்பாட்டு விஷயங்களில் கவனம் செலுத்தினார்.

நா.வானமாமலையின் பங்களிப்புகளில் மிக முக்கியமானது மார்க்சிய கல்வியை ஒழுங்குபடுத்தியது. இவருக்கு முன்னால் கட்சி கடுமையான அடக்குமுறைக்கு உள்ளாகி இருந்ததால் மார்க்சியம் பற்றி ஒரு ஒழுங்கான முறையில் பேச முடியாமல் இருந்தது. ஆங்காங்கே கட்சித் தலைவர்கள் இது பற்றிப் பேசவும் கற்கவும் முற்பட்டனர். ஆனால் விடுதலை பெற்ற பிறகு நிலைமை சற்று மாறியது. சோவியத் யூனியன் உறவு ஏற்பட்ட பிறகு நூல்கள் தாராளமாக கிடைக்க ஆரம்பித்தன. கட்சிக் கல்வி பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. கல்வியை ஒழுங்குபடுத்தி அவரே வகுப்புகளை எடுக்கவும் தொடங்கினார். அவரைப் பின்பற்றி பலர் வகுப்புகளை எடுக்கவும் ஆரம்பித்தனர். அவரது வகுப்புகளின் சிறப்பான அம்சம் சரளமான தமிழ், எளிமையான உதாரணங்கள், தெளிவு ஆகியனவாகும்.

அது மட்டுமல்லாமல், மார்க்சியத்தை ஒரு பட்டயப் படிப்பாக நடத்த மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் மூலம் ஏற்பாடு செய்தவரும் அவரே.

பேராசிரியர் நா.வா என்றவுடன் பண்பாட்டுத் துறையில் அவர் செய்த பணி மிகவும் முக்கியமானது. அதே சமயத்தில் பண்பாட்டுப் போராட்டத்தை மட்டும் வைத்துக்கொண்டு அடிப்படையான போராட்டத்தைப் புறக்கணிக்கும் போக்கு அவரிடம் கிடையாது. ஆரம்ப காலத்தில் அவர் சரஸ்வதி, தாமரை ஆகியவற்றில் கட்டுரைகள் எழுதினார். அவற்றில் குறிப்பிடத்தக்க ஒரு கட்டுரை நந்தனார் பற்றியது. இதில் வர்க்கப் போராட்டம் ஒளிந்திருப்பதை அவர் சுட்டிக்காட்டினார். தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் தலைவராகவும் இருந்தார். ஜீவாவிற்கு பிறகு அதன் கொள்கை அறிக்கையை தயாரித்தவரும் அவரே.

## நெல்லை ஆய்வுக்குழு!

எட்டயபுரம் பாரதி விழாவுடன் கருத்தரங்கு நடத்த ஏற்பாடு செய்து, அதன் மூலம் பல இடதுசாரி ஆய்வாளர்களை ஒன்று சேர்த்த வரும் அவரே. இந்தக் கருத்தரங்கம் தான் பின்னால் நெல்லை ஆய்வுக்குழு என்ற ஒன்றை உருவாக்கக் காரணமாக இருந்தது. இந்த ஆய்வுக்குழு முதலில் அவரது வீட்டில் கூடியது. பின்னர் அவரது தனிப் பயிற்சிக் கல்லூரியில் நடந்தது. இதில் யாரும் உறுப்பினராகலாம். கட்டணம் எதுவும் கிடையாது. இதன் காரணமாக பல இளம் ஆய்வாளர்கள் உருவாகினார். சில நேரங்களில் அவரே கட்டுரை படிப்பார். மற்ற நேரங்களில் பலரை படிக்கச் செய்வார். அதன் மீது விவாதங்கள் நடைபெறும். இந்த வாதங்களின் அடிப்படையில் கட்டுரை திருத்தி அமைக்கப்படும்.



அந்தக் கட்டுரைகளை வெளியிடுவதற்கு ஒரு சாதனமாக ஆராய்ச்சி என்ற பத்திரிக்கையை தொடங்கினார். இப்பத்திரிகை மூலம் பல புதிய இடதுசாரி ஆய்வாளர்கள் உருவாயினர்.

ஆராய்ச்சி பத்திரிகையில் மார்க்சியம், மானுடவியல், தொல்லியல், கல்வெட்டியல், தற்கால இலக்கியம், பண்டையத் தமிழ் இலக்கியங்கள், நாட்டார் வழக்காற்றியல் ஆகியன பற்றிய கட்டுரைகள் வெளியாயின. இந்த கட்டுரைகளில் பல அந்த துறையில் முதல் முதலாக வெளிவந்தவை.




பிப்ரவரி 2 நா.வானமாமலை நினைவு நாள்

அவற்றுக்கு முன்னோடிகள் இல்லை. இந்தப் பத்திரிக்கை தமிழக பண்பாட்டு துறையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

பேராசிரியர் நா.வா.வினுடைய மற்றொரு முக்கியமான பணி பல விஞ்ஞான நூல்களை மொழிபெயர்த்ததாகும். ஆனால் அவர் இதைத் தொடரவில்லை. அதே காலகட்டத்தில் சிறுவர்களுக்கான விஞ்ஞான நூல்களையும் எழுதினார். அதையும் அவர் தொடரவில்லை. பி.சி.ஜோசி அவர்களின் தூண்டுதல் காரணமாக அவர் நாட்டார் வழக்காற்றியல் நோக்கித் திரும்பினார். மிகப்பெரிய முயற்சிக்குப் பின் நாட்டுப்புறப் பாடல்களை சேகரித்து, அவற்றை வரிசைப்படுத்தி அவற்றுக்கு குறிப்புகளும் முன்னுரையும் எழுதி பெரிய தொகுப்பினை கொண்டு வந்தார். அது பல்கலைக்கழக அங்கீகாரம் பெற்ற தொகுப்பாக விளங்குகிறது.

பின்னர் தார்வார் பல்கலைக்கழகத்தில் ஓராண்டு காலம் ஆய்வு நிகழ்த்தச் சென்றார். இந்த ஆய்வின் முடிவுகளை “The Folk Life of Tamilnadu” என்ற நூலாக வெளியிட்டார். இது சர்வதேச அளவிற்கு அவரை உயர்த்தியது. சிறு சிறு பாடல்களைத் தொகுத்து வெளியிட்ட பிறகு, அவரது கவனம் நெடுங்கதைப் பாடல்களை நோக்கி திரும்பியது. கட்டபொம்மு கதை, கட்டபொம்மு கூத்து, முத்துப்பட்டன் கதை, காத்தவராயன் கதை, ஐவர் ராசாக்கள் கதை, கான்சாகிப் சண்டை ஆகியன இந்தப் பாடல்கள். இவற்றுக்கு எழுதிய ஆராய்ச்சி முன்னுரை நாயக்கர் காலத்திய தமிழக சமுதாய வரலாறு பற்றிய ஒரு மார்க்சிய விளக்கமாக இருக்கின்றன. இவை அனைத்தும் மதுரை காமராஜர் பல்கலைக்கழக வெளியீடாக வந்தன.

நா.வா. செய்த மிகப்பெரிய காரியம் குமரி மாவட்டத்தில் கீரிப்பாறை என்ற இடத்தில் அவர் தொடங்கிய பயிற்சி முகாம் ஆகும். இங்கு மார்க்சிய அழகியல், பல்வேறு வகையான இலக்கிய கோட்பாடுகள், இந்தியத்தத்துவம் ஆகியன பற்றிய உரைகள் இடம்பெற்றன. இவற்றில் ஒரு வேடிக்கை என்னவென்றால், அவர் அதிகமாக உரை நிகழ்த்தவில்லை என்பதுதான். ஒவ்வொரு முகாமையும் திட்டமிடும் வேலையை அவர் மேற்கொண்டார். இன்று அந்த முகாம் நடைபெறவில்லை.

## தமிழ்நாட்டின் பிளெக்கானவ்!

நா.வா. 1980 ஆம் ஆண்டு மறைந்தார். அவரது மறைவுக்குப் பின்னர் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் டி.லிட் (D.Lit.,) பட்டம் கொடுத்து கௌரவித்தது. அவரது நூல்கள் நாட்டுடமையாக்கப்பட்டன. அவற்றில் சிலவற்றை இங்கு குறிப்பிடலாம்.

1. தமிழர் பண்பாடும் தத்துவமும்
2. வேத மறுப்பு பௌத்தமும் இந்திய நாத்திகமும்
3. இந்திய தத்துவமும் மார்க்சிய இயங்கியலும்
4. மார்க்சிய அழகியல், இலக்கியத்தில் உருவமும் உள்ளடக்கமும்
5. கலைகளின் தோற்றம், புதுக்கவிதை முற்போக்கும் பிற்போக்கும்
6. மார்க்சிய சமூகவியல் கொள்கை

இவை அனைத்தும் இடதுசாரி சிந்தனையாளர்கள் தங்களது குழு மனப்பான்மையை புறக்கணித்துவிட்டு கற்கவேண்டிய நூல்களாகும். இத்தகைய முறையில் மார்க்சியத்தை தமிழக பண்பாட்டுக்கு பயன்படுத்தியதன் காரணமாக அவரை தமிழ்நாட்டின் பிளெக்கானவ் என்று கூட அழைக்கலாம்.

## வினாடி - வினா

1 காந்தியடிகள் முதன்முதலாக எங்கு, எவ்வளவு காலம் சிறையில் இருந்தார்?

2 காந்தியின் அறைகூவலை ஏற்று நாடு தழுவி நடைபெற்ற முதல் போராட்டம் எது?

3 காந்தி மேல்சட்டை, தொப்பி அணிவதை கைவிட்டு வேட்டி மட்டும் உடுத்தும் செயலை எங்கு, எப்போது மேற்கொண்டார்?

4 காந்தி 1930 ல் மேற்கொண்ட தண்டி யாத்திரை எதற்காக? எவ்வளவு தொலைவு?

5 இந்தியாவுக்கு முழு சுதந்திரம் கோரி காந்தி தலைமையில் காங்கிரஸ் கட்சி எப்பொழுது தீர்மானம் நிறைவேற்றியது?



6 காந்தியை 1948 சனவரி 30 அன்று சுட்டுக்கொன்ற கோட்சே வாக்குமூலத்தில் கூறி யிருப்பது என்ன?

விடைகள் 12 ஆம் பக்கம்

# லாலா லஜபதி ராய் சிலை திறப்பு




விடுதலைப் போராட்ட வீரர் லாலா லஜபதி ராயின் சிலை, ஜனவரி 28ஆம் தேதி ஏஐடியுசி பவனில் திறந்து வைக்கப்பட்டது.

இந்தியாவின் முதல் மத்திய தொழிற்சங்கமான, அனைத்திந்திய தொழிற்சங்க பேராயம் (ஏஐடியுசி) 1920 அக்டோபர் 31 பம்பாயில் துவக்கப்பட்டது. அதனை அமைக்கும் பணிகளில் ஈடுபட்ட, லாலா லஜபதி ராய் முதல் தலைவராக தேர்வு செய்யப்பட்டார்.

அவரது பிறந்தநாள் ஜனவரி 28 ஆம் தேதி ஆகும். அன்று அவரது சிலை திறக்கப்பட்டது, நாட்டின் தொழிற்சங்க இயக்கத்திற்கு ஒரு மறக்கமுடியாத நாள்.

நாட்டின் பத்து மத்திய தொழிற்சங்கங்களின் தலைவர்கள். திறப்பு விழாவில் பங்கேற்று, உரையாற்றினர்.

ஏஐடியுசி பொதுச்செயலாளர் அமர்ஜீத் கவுர், லாலா லஜபதி ராயின் கொள்ளுப் பேத்தி அனிதா கோயல் ஆகியோர் மரக்கன்று ஒன்றை நட்ட பிறகு, சிலை திறக்கப்பட்டது.

நாட்டின் சுதந்திரப் போராட்ட வீரர்களின் 50 கிராமங்களில் இருந்து சேகரித்த மண்ணுடன், இந்த மரத்தை இந்திய மக்கள் நாடக மன்ற (இப்டா) குழுவினர், குழுவினர் கொண்டு வந்திருந்தனர். அருமையான பாடல்களையும் அவர்கள் பாடினார்கள்.

லாலாஜியின் உருவச் சிலையை ஏஐடியுசி உத்திரபிரதேச மாநில குழு லக்னோவில் உருவாக்கிக் கொண்டு வந்தது.

அதன்பின்னர் ஏஐடியுசி தேசிய செயலாளர் மோகன் சர்மா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், ஏ.ஐ.டி.யு.சி. பொதுச் செயலாளர் அமர்ஜித் கவுர், லாலா லஜபதி கொள்ளுப் பேத்தி அனிதா கோயல், உ.பி. மாநில ஏ.ஐ.டி.யு.சி தலைவர் வி.கே.சிங், மத்திய தொழிற்சங்கத் தலைவர்களான சிஐடியு அமிதவ குஹா, ஐஎன்டியுசி அம்ஜத், எச்எம்எஸ் மஞ்சித், ஏஐயுடியுசி ஆர்.கே. ஷர்மா, ஏஐசிசிடியு ராஜீவ் டிம்ரி, சேவா சுமன், எல்.பி.எஃப். ரஷித் கான், டியுசிசி தர்மேந்திரா, யுடியுசி சத்ருஜித் சிங் உள்ளிட்டோர் பேசினார்கள்.

நமது நாட்டின் சுதந்திரம், தன்னம்பிக்கை, இறையாண்மை ஆகியவற்றை உருக்குலைத்துக் கொண்டிருக்கும் ஆர்எஸ்எஸ் – பாஜக தலைமையிலான அரசாங்கத்தின் தாக்குதலை எதிர்த்துப் போராடுவதற்குத் தொழிலாளி வர்க்கம் எழுச்சி பெற வேண்டும் என்று அமர்ஜீத் கவுர் அழைப்பு விடுத்தார்.

நமது நாட்டில் அரசியல் சாசனம், அனைத்து மதங்களின் நம்பிக்கைகளையும், மொழிகளின் பன்மைத்துவத்தையும், வேறுபட்ட பண்பாடுகள், உடைகள், உணவுப் பழக்கங்கள் மற்றும் பல்வேறு பண்டிகைகளுக்கு உரிய மரியாதை செலுத்துகிறது. அதன் அடிப்படைகளுக்கு வேட்டு வைக்கும் வகையில் இந்த ஆட்சி செயல் பட்டுக் கொண்டிருக்கிறது.

லாலா லஜபதி ராய் நாட்டின் சுதந்திரத்திற்காக தனது உயிரையே கொடுத்தார், இந்திய மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் சுதந்திர இந்தியாவைக் கனவு கண்டார். ஏகாதிபத்திய, முதலாளித்துவவாதிகளுக்கு எதிராக தொழிலாளி வர்க்கத்துடன் சேர்ந்து நின்றார்.

அவரது போராட்டத்தை அவரது வழியில் தொடர்ந்து எடுத்துச் செல்ல இந்த நாளில் சூளுரைக்கிறோம். மோடியின் அரசாங்கம், இந்தியா என்ற கருத்தாக்கத்தையே அழித்து, தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் நாட்டு மக்களின் நலன்களுக்கு எதிரான முறையில் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறது.

அதனை அதிகார பீடத்தில் இருந்து விரட்டி அடிப்போம் என்று பேசினார்.

திருமதி அனிதா கோயல் தனது உரையில், பரந்துபட்ட ஆளுமையை லாலா லஜபதி ராய் கொண்டிருந்தார். நாட்டின் சுதந்திரத்திற்கான முன்னணிப் போராளியாக இருந்ததோடு மட்டுமல்லாமல், பல்வேறு துறைகளிலும் அவர் பங்களித்தார். பல தலைமுறைகளுக்கு ஊக்கமளித்துக் கொண்டிருக்கிறார் என்று குறிப்பிட்டார்.

அனைத்து தொழிற்சங்கத் தலைவர்களும் பேசும்போது, தொழிலாளர்கள், விவசாயிகளின் வளர்ந்து வரும் ஒற்றுமையை வலுப்படுத்த உறுதியளித்தனர்.

நாட்டின் விவசாயிகளும் தொழிலாளர்களும் இணைந்து அழைப்பு விடுத்திருக்கிறார் பிப்ரவரி 16 கிராமங்களில் முழு அடைப்பு தொழிலாளர்கள் ஆகியவற்றை முழு வெற்றி பெறச் செய்ய முனைந்து செயல்படுவோம் என உறுதி அளித்தனர்.

மக்களையும். தேசத்தையும் பாதுகாக்க இன்னைக்கு செல்ல வேண்டியதன் அவசியத்தை இந்த விழா மேலும் தெளிவுபடுத்தியது. குணால் ராவத் நன்றியுரைத்தார்.

தமிழ்நாடு ஏஐடியுசி தலைவர் எஸ்.காசி விஸ்வநாதன், தமிழ்நாடு ஏஐடியுசி கட்டிட தொழிலாளர் சங்க துணைப் பொதுச் செயலாளர் எம்.முனுசாமி, செயலாளர் ஆர்.துரைசாமி, தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக தொழிலாளர் சம்மேளன துணைப் பொதுச் செயலாளர் என்.முருகராஜ், தேனி மாவட்ட ஏஐடியுசி செயலாளர் எம்.எஸ்.பி.ராஜ்குமார் உள்ளிட்டோர் தமிழ்நாட்டில் இருந்து சென்று விழாவில் பங்கேற்றனர்.

# மாநில நிதிப் பங்கீட்டைக்

## அம்பலப்படுத்திய நிதி ஆயோக் தல

**ஒன்றிய அரசின் ஜி.எஸ்.டி வரி வருவாயில் இருந்து, மாநிலங்களுக்குச் சேர வேண்டிய (வரிப் பங்கீடு) நிதியை குறைப்பதற்கு, பிரதமர் மோடி திரைமறைவு பேரம் நடத்தியிருப்பதை பிரதமர் அலுவலகத்தில் உயர் பதவி வகித்த அதிகாரி ஒருவரே அம்பலப்படுத்தியிருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.**


அருண் நெடுஞ்செழியன்

2023 ஆம் ஆண்டு மே மாதம் நடந்த நிதி ஆயோக்கின் எட்டாவது கூட்டத்திற்கு தலைமை தாங்கி உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, ஒன்றிய அரசும் முதலமைச்சர்களும் "டீம் இந்தியாவாக" செயல்பட வேண்டும் என்றும், மாநிலங்கள் வளர்ந்தால்தான் இந்தியா வளரும் என்றும் முழங்கினார். ஆனால் நடைமுறையில் மோடி அரசு என்ன செய்கிறது? மாநிலங்களுக்கான நிதிப் பங்கீட்டை உயர்த்தக் கோருகிற நிதி ஆணையத்தின் பரிந்துரையை ஏற்க மறுக்கிறது. நிதி ஆணையத்தை தனது நோக்கத்திற்கு ஏற்ப மிரட்டி பணியவைக்க முயற்சிக்கிறது.

டீம் இந்தியா என மேடைக்கு மேடை அலங்காரமாக பேசிவிட்டு, நடைமுறையில் அதற்கு நேர் முரணாக மோடி அரசு நடக்கிறது. இதன் மூலம் வாயால் மட்டுமே வடை சுடும் அரசு என்பதை நிரூபித்துள்ளது.

### அம்பலமான மோடி அரசின் பித்தலாட்டம்:

சமூக மற்றும் பொருளாதார முன்னேற்ற மையம் (CSEP)எனும் அமைப்பு அண்மையில் கருத்தரங்கம் ஒன்றை நடத்தியது. இதில் சிறப்பு விருந்தனராக பிரதமர் அலுவலக முன்னாள் இணைச் செயலாளரும், நிதி ஆயோக்கின் தலைமை செயல் அதிகாரியுமான பி.வி.ஆர்.சுப்பிரமணியம் கலந்துகொண்டார். அங்கு அவர் பேசியதே தற்போது விவாதமாகியுள்ளது.

"கடந்த 2013 ஆம் ஆண்டு 14வது நிதி ஆணையம் அமைக்கப்பட்டது. அப்போது குஜராத் மாநில முதலமைச்சராக இருந்த நரேந்திர மோடி, 2014 நாடாளுமன்ற தேர்தலில், பிரதமர் வேட்பாளராக பரப்புரையில் ஈடுபட்டு வந்தார். அப்போது, ஒன்றிய அரசின் வரி வருவாயில் 50 விழுக்காடு மாநில அரசுக்கு கொடுக்க வேண்டும் என முழங்கினார். ஆனால், பிரதமரான பிறகு அவர் தலைகீழாக நடந்துகொண்டார். 14 ஆவது நிதி ஆணையம் ஒன்றிய அரசிடம் வழங்கிய அறிக்கையில், வரி வருவாயில் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் 32 விழுக்காடு நிதியை, 42 விழுக்காடாக அதிகரிக்க வேண்டும் என்று பரிந்துரைத்தது. ஆனால், பிரதமர் மோடியும் நிதி அமைச்சகமும் 33 விழுக்காடு அல்லது அதற்கும் கீழ் குறைக்க வேண்டும் என நிதி ஆணையத்திற்கு அழுத்தம் கொடுத்தனர்" என பிரதமரின் உண்மை நோக்கத்தை போட்டு உடைத்து விட்டார்.

மாநிலங்களுக்கான நிதிப் பங்கீடு விவகாரத்தில், பிரதமர் அலுவலகத்தில் இருந்து வந்த அழுத்தத்திற்கு நிதி ஆணையத்தின் தலைவர் ஒய்.வி.ரெட்டி வளைந்து கொடுக்காமல் ஆணையத்தின் பரிந்துரையில் உறுதியாக இருந்துள்ளார். இந்த ஒய்.வி.ரெட்டி முன்னாள் ரிசர்வ் வங்கி ஆளுநர் என்பதும் நேர்மையாளர் என பெயர் வாங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சலாம் போட்டு பணிந்து போகிற அதிகாரிகள், ஊழல் அதிகாரிகள் போன்றவர்களையே பார்த்து வந்த மோடியால் இப்படிப்பட்ட அதிகாரிகளிடம் எதுவும் செய்ய முடியவில்லை. நிதி ஆணைய அதிகாரியை வளைத்து காரியத்தை சாதித்துவிடலாம் என தப்புக் கணக்கு போட்டு நாடாளுமன்ற நிதி நிலை அறிக்கையை வேறு மோடி அரசு அப்போது தயாரித்துவிட்டது. இப்படியொரு இக்கட்டான சூழலில் மோடி அரசுக்கு இரண்டு வாய்ப்புகள் தான் இருந்தன. ஒன்று ஆணையத்தின் பரிந்துரையை ஏற்க வேண்டும் அல்லது ஆணையத்தையே கலைக்க வேண்டும். ஏனெனில் ஆணையத்தின் பரிந்துரையை விவாதிக்கவோ மாற்றவோ பிரதமர் அலுவலகத்திற்கு சட்டபூர்வ அதிகாரம் கிடையாது.

அதேநேரத்தில் ஆணையத்தின் பரிந்துரையை ஏற்றுவிட்டால், இரண்டு நாளில் நாடாளுமன்றதில் தாக்கல் செய்ய வேண்டிய நிதி நிலை அறிக்கையை முற்றிலும் மாற்ற வேண்டும். இந்நிலையில் பிரதமர் அலுவலக முன்னாள் இணைச் செயலாளர் பி.வி.ஆர். சுப்பிரமணியம் மூலமாக நிதி ஆணையத் தலைவர் ஒய்.வி.ரெட்டியிடம், பிரதமர் நரேந்திர மோடி சுமார் இரண்டு மணி நேரம் திரைமறைவில் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதனை முன்னாள் இணைச் செயலாளர் பி.வி.ஆர்.சுப்பிரமணியம் அவர்களே பகிரங்கமாக தற்போது தெரிவித்துள்ளார். பேச்சு நடத்தும் போது தானும் அதில் பங்கேற்றதாக கூறியுள்ளார். பிரதமரிடம் இருந்து கடுமையான அழுத்தம் வந்தும் தனது பரிந்துரையில் ஒய்.வி.ரெட்டி உறுதியாக இருந்ததாக அவர் கூறுகிறார். ஒரு கட்டத்தில் கடுப்பான ஒய்.வி.ரெட்டி, தனக்குரிய தென்னிந்திய ஆங்கில உச்சரிப்பில் "என்னப்பனே, பரிந்துரையை ஏற்பதைத் தவிர வேறுவழியில்லை என உங்கள் தலைவரிடத்தில் கூறுங்கள்" என்று தன்னிடம் கூறியதாக பி.வி.ஆர். சுப்பிரமணியம் கூறியுள்ளார்.




இறுதியாக வேறு வழியின்றி, நிதி ஆணையத்தின் பரிந்துரையை ஏற்றுக் கொண்டும், இரு தினங்களில் மறுசீரமைக்கப்பட்டும் ஒன்றிய நிதிநிலை அறிக்கை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் நாடாளுமன்றத்திலோ உண்மைக்கு நேர் மாறாக பொய் மூட்டைகளை மோடி அள்ளி வீசினார். இந்த திரைமறைவு பேரம் தோல்வியில் முடிந்த கையோடு, நிதிநிலை அறிக்கையை மறுசீரமைத்தபின் 2015 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27 ஆம் தேதியன்று நாடாளுமன்றத்தில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி 'தேசத்தை வலிமைப்படுத்த நாம் மாநிலங்களை வலிமையாக்க வேண்டும். நிதி ஆணைய உறுப்பினர்களிடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. அதைநாம் பயன்படுத்திக் கொண்டிருக்கலாம். நாங்கள் செய்யவில்லை. ஆனால், மாநிலங்கள் வளப்படுத்தப்பட வேண்டும், பலப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக, மாநிலங்களுக்கு 42 விழுக்காடு வழங்கினோம்' என பொய்யின் ஊற்றாக பேசினார்.

இவரது பேச்சை மேஜையை தட்டி ஆர்ப்பரித்த பாஜக உறுப்பினர்கள், நிதியை கையாள பல மாநிலங்களுக்கு போதிய கருவூலங்கள் கூட இல்லை என எள்ளி நகையாடினார்கள். நாடாளுமன்றத்தில் இவ்வாறு புளுகு மூட்டைகளை அவிழ்த்துவிட்டவர், நிதி நிலை அறிக்கையில் பல மக்கள் நலத் திட்டங்களுக்கான நிதியை வெட்டுவதிலும் தவறவில்லை.

இவ்வாறு திரைமறைவு பேரத்தில் மாநிலங்களை முடக்க முயன்றும் திரைக்கு வெளியே மாநிலங்களை காப்பாற்றுவது போலவும் ஓர் பிரதமர் நாடகமாடுவது இதற்கு முன் இந்திய அரசியல் வரலாற்றில் கண்டிராத வெட்கக்கேடான நிகழ்வாகும். மோடி அரசு ஆட்சியில் இருந்த இந்த பத்தாண்டு காலத்தில், ஒன்றிய அரசின் உயர் பதவியில் பொறுப்பு வகித்த அலுவலர் ஒருவர் பிரதமர் மோடி மீதும் அவரது சகாக்கள் மீதும் பகிரங்கமாக குற்றம் சாட்டுவது முதல் முறையாகும்.

# குறைக்க பிரதமர் பேரம்!

## லைமை அதிகாரி!



முன்னேற்றம் மையம் ஏற்பாடு செய்த கூட்டத்தில் பி.வி.ஆர்.சுப்பிரமணியம் பேசிய காணொளி தற்போது நீக்கப்பட்டுள்ளது. அதேநேரம் அவரது காணொளியை ஆதாரமாகக் கொண்டு ரிபோர்ட்டர்ஸ் கலெக்டிவ் என்ற அமைப்பு மேற்கொண்ட ஆய்வும், அல்ஜீரா வலைதளத்தில் வெளியிட்ட கட்டுரைகளுமே பி.வி.ஆர்.சுப்பிரமணியம் பேசியதற்கு ஆதாரமாக உள்ளது.

மேலும் அவர் மோடி அரசு மீது அடுக்கிய பல்வேறு



குற்றச்சாட்டுகளில் சில வருமாறு:

- மோடி அரசு நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யும் நிதிநிலை அறிக்கையில் பல அடுக்குகளாக உண்மைகள் மறைக்கப்பட்டுள்ளன. இந்த நிதிநிலை அறிக்கைகளை ஆய்வு செய்து அம்பலப்படுத்த வேண்டும். ஜெ.பி.மோர்கன், சிட்டி வங்கி போன்ற அயல்நாட்டு வங்கிகள், மோடி அரசின் நிதி நிலை அறிக்கைகளை ஆய்வு செய்தால் இந்தியாவின் உண்மையான நிதி நிலைமை அம்பலப்பட்டுவிடும்.
- மாநிலங்களுக்கு நிதி வருவாயை நிதி ஆணையத்தை மிரட்டி குறைக்க முடியாததால் பல்வேறு மக்கள் நல திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டது. குறிப்பாக கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத்திட்டத்திற்கான நிதியை 36 ஆயிரம் கோடியில் இருந்து 18 ஆயிரம் கோடியாக குறைக்கப்பட்டது. அதேபோல பள்ளிகளுக்கான நிதி ஒதுக்கீடும் 18 விழுக்காடாக குறைக்கப்பட்டது.
- மோடி அரசு தான் வாங்கிய கடன் விவரங்களை திட்டமிட்டு மறைக்கிறது. வரி வருவாய்க்கு மீறிய செலவீனங்களை மேற்கொள்ள, வெளிச் சந்தையில் கடன் வாங்குகிறது. அந்த கடன் விவரங்களும் நிதி நிலை அறிக்கைகளில் மறைக்கப்படுகிறது. அரசின் பொதுத்துறை நிறுவனங்களை அடமானமாக வைத்து பல்வேறு முறைகளில் இந்த கடன் வாங்கப்படுகிறது.
- மோடி அரசின் நேரடி கட்டுப்பாட்டில் இருந்த ஜம்மு காஷ்மீரில், உள்கட்டுமானத் திட்டங்கள் மேற்கொள்ளப்படாமலேயே போலி ரசீது மூலமாக பல கோடி ரூபாய் நிதிப் பரிமாற்றம் நடைபெற்றுள்ளது.
- செஸ் வரியானது ஒன்றிய அரசுக்கு நேரடியாக சேரும் வரி வருவாய் ஆகும். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் ஒன்றிய அரசின் வரி வருவாயில் சுமார் 10 விழுக்காடாக இருந்த செஸ் வரி வருவாய், மோடி அரசின் காலத்தில் இரண்டு மடங்காக அதிகரித்து சுமார் 20 விழுக்காடாகியது.
- மோடிஅரசு 201718 நிதி ஆண்டில் கார்ப்பரேட்டுகளுக்கான வரியை 10 விழுக்காட்டிலிருந்து ஐந்து விழுக்காடாக குறைத்தது. இந்த வரி இழப்பை ஈடுகட்ட சர்சார்ஜ் வரியை உயர்த்தியது. அதேபோல 201819 ஆம் ஆண்டில் பெட்ரோல் டீசலுக்கான கலால் வரியை குறைத்தது. ஆனால் சாலை வரியை அதிகரித்து இழப்பை ஈடுசெய்தது.

இந்தக் குற்றச்சாட்டுகள் அனைத்தும் எதிர்க்கட்சிகளும் பொருளாதார அறிஞர்களும் கூறி வந்தவைதான். தற்போது பிரதமர் அலுவல் அதிகாரியும் இந்தக் குற்றச்சட்டுகளை முன்வைப்பதை இணைத்துப் பார்த்தால், இதுவரை எதிர்க்கட்சிகள் கூறியது எந்தளவுக்கு உண்மை என்பது தெளிவாகிவிடும்.

“நிதி ஆணையத் தலைவருடன் மறைமுக பேரத்தில் பிரதமர் மோடி ஈடுபட்ட செயல், அரசமைப்புச் சட்டத்துக்கு விரோதமானது. சுதந்திர இந்தியாவில் இதற்கு முன்பு எந்தவொரு பிரதமரும் மாநிலங்களுக்கு எதிராக இப்படியொரு கேட்டைச் செய்ததில்லை” என்றும் “அதிகார வெறிகொண்ட அரசு” என்றும் எதிர்க்கட்சிகள் கொந்தளிக்கின்றன.

**தமிழ்நாட்டை வஞ்சித்த மோடி அரசு:**

மாநிலங்களின் சமச்சீற்றவளர்ச்சிநிலைமைகளைக் கொண்ட இந்தியாவில், ஆணையத்தின் புதிய நடைமுறையின் கருதுகோள்களால் தமிழகம், கேரளம் உள்ளிட்ட தென்மாநிலங்களுக்கு பெரும் நிதி இழப்பையும் வடமாநிலங்களுக்கு கூடுதல் நிதியையும் வழங்கியது.14வது நிதிக்குழு ஆணையத்தின் பரிந்துரைகள் நிதி கூட்டாட்சி முறையை வலுப்படுத்துகிறது என ஆளும்கட்சி பரப்புரை செய்வதற்கு நேர் மாறாக தென் மாநிலங்களின் நிதிவருவாயை ஆணையத்தின் பரிந்துரைகள் பலவீனப்படுத்தி விட்டது. ஆணையத்தின் புதிய பரிந்துரையில் 1971 மக்கள் தொகை கணக்கீடு அடிப்படையில் 7.5 புள்ளியாக குறைத்து, 2011 மக்கள் தொகை அடிப்படையில் 10 புள்ளி சேர்த்திருப்பது தமிழகத்திற்கு பாதக விளைவை ஏற்படுத்தியது.

கடந்த 40ஆண்டுகளில் தென்மாநிலங்களின் மக்கள் தொகை பெருக்கம் மெதுவான விகிதத்திலேயே அதிகரித்து வருகிறது. கல்வியறிவு மற்றும் மக்கள் தொகை கட்டுப்பாட்டில் சிறப்பாக செயல்பட்டுவரும் தமிழகம், கேரளம் போன்ற தென் மாநிலங்களுக்கு 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்வது இழப்பை ஏற்படுத்தும். ஆனால், 1971க்கும் 2011க்கும் இடையில் உத்தரப்பிரதேசம், மகாராஷ்டிரா, பீகார் போன்ற மாநிலங்களில் மக்கள் தொகை இருமடங்கு உயர்ந்துள்ளதால், இம்மாநிலங்களுக்கு அதிக நிதி போய்ச் சேர்கிறது.

மேற்கூறிய மாற்றங்களால், இந்தியாவிலேயே மோசமாக நிதி இழப்பை சந்திக்கும் மாநிலமாக தமிழ்நாடு ஒரே இரவில் மாறிவிட்டது. இந்த மாற்றங்களால் தமிழ்நாட்டிற்கு தோராயமாக 6 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. மேலும் ஒன்றியத் திட்டங்களுக்கான மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டு பங்கை அதிகரித்தது, பேரிடர் நிவாரண நிதிச்சுமையை மாநில அரசின் மீதும் சுமத்துவது போன்ற காரணங்களால் தமிழ்நாட்டை நிதிப் பற்றாக்குறை மாநிலமாக மாற்றிவிட்டது.

ஒன்றிய பாஜகவின் பத்தாண்டு கால ஆட்சியில் நாட்டின் கூட்டாட்சி தத்துவம் மிகப்பெரிய அளவுக்கு தாக்குதலுக்கு உள்ளாகி இருப்பதை ஒவ்வொரு நாளும் நடைபெறும் அரசியல் நிகழ்வுகள் உண்மையாக்கி வருகின்றன. கல்வி, கூட்டுறவு உட்பட மாநில மற்றும் பொதுப் பட்டியலில் உள்ள துறைகளை புதிய கல்விக் கொள்கை என்ற பெயரில் தன்னிச்சையான கைப்பற்றுகிறார்கள். மாநிலங்களின் நிதி ஆதாரத்தை பறித்தும் அமலாக்கத்துறை மற்றும் ஆளுநர்களைக் கொண்டு மிரட்டியும் மாநில அரசுகளை செல்லாகாசாக்க முயன்று வருகின்றனர்.

இவ்வாறு ஒரே தேசம், ஒரே மொழி, ஒரே மதம், ஒரே பண்பாடு, ஒரே வரி, ஒரே தேர்வு, ஒரே சந்தை, ஒரே கட்சி, ஒற்றையாட்சி என்ற திசையில் நாட்டை இழுத்துச் செல்லும் ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.கவை வரும் 2024 நாடாளுமன்ற தேர்தலில் வலிமையோடு எதிர்த்து நின்று, தோல்வியடையச் செய்யவேண்டியது அனைத்து ஜனநாயக சக்திகளின் முதன்மையான கடமையாகின்றது. இம்முறை பாஜக வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தால் குறைந்தபட்ச நாடாளுமன்ற ஜனநாயகம் கூட நீடிக்குமா என்பது சந்தேகமாக உள்ள நிலையில், பாஜகவை வீழ்த்துவது நமது உடனடியான வரலாற்றுக் கடமை.

தொடர்புக்கு: 9842391963

# ஊழல் பெருச்சாளிகளை உருமாற்றம் செய்துதரும் சலவை எந்திரம்



1950 களிலும் அதற்கு முன்னும், இந்தியத் திரைப்படங்களில் சாமியார்கள் திடீரென ஒரு பொடியைத் தூவுவார்கள். மனிதன் புலியாவான், பூவாய் மாறுவான், பாம்பாவான், கட்டிடமும் கடலும் கூடக் காணாமல் போகும். மாயா பஜார், பூலோக ரம்பா என்று படங்கள் வந்தன.

இன்று ஆர்.எஸ்.எஸ்.சின் அரசியல் படக் கம்பெனியான பி ஜே பி, தங்களிடம் வரும் ஊழல் செய்த குற்றவாளிகளைக் குறிப்பாகத் தாய்க் கட்சிக்குத் துரோகமிழைத்துத் தன் ஊழல் குற்றத் தண்டனையை விட்டு விட வருகின்ற திமிங்கிலங்களை உருமாற்றிப் புனிதராகக் காட்டும் எந்திரமாக்ச் செயல்படுகிறது. அதற்கான எந்திர சக்தியை அமலாக்கத் துறை, வருமான வரி இலாக்கா, தேர்தல் கமிஷன் மூலம் கட்டளையிட்டுப் பெறுகிறது. இதை உறுதி செய்யப் பலப் பல எடுத்துக்காட்டுக்கள் சான்றுகளுடன் கூறலாம்.

மகாராஷ்டிரா மாநிலக் கூட்டுறவு வங்கியின் ஒரு உயர் மட்டப் பொறுப்பிலிருந்த ஷரத் பவார் கட்சியிலிருந்த அஜித் பவார் “ ஜரகண்டேஷ்வர் மில்லுக்கு“ வழங்கிய 800+ கோடிக் கடனுதவியால், அதே நிறுவனத்தின் கீழிருந்த எஸ்.கே. ஃபேக்டரியை அடிமாட்டு விலைக்கு வாங்கினார். அதை, அஜித் பவார், மற்றும் அவர் மனைவியும் இயக்குனர்களகச் செயல்பட்ட, பெருமளவு பங்கு வைப்பு கொண்டவர்களாயுள்ள“ ஸ்பார்க்லிங்க் சாயில் பிரைவேட் லிமிடெட்” (SPARLINGSOILPRIVATELIMITED)க்கு விற்றனர். இந்திய பணப் பரிவரிவர்த்தனையை அமலாக்கத்துறை குற்றவாளியெனச் சொல்லி விசாரணையை மேற்கொண்டது.

நாட்டின் மொத்தப் புனிதத்தையும் டெண்டர் எடுத்த மோடி, பி. ஜே. பி. யுடன் மராட்டியத்தில் ஜூலை 2 (BOAT JUMPING) தாவிய போது அமலாக்கத்துறையின் குற்றப் பத்திரிக்கையில் அஜித் பவாரின் மனைவியின் பெயர்கள் இடம் பெறவில்லை.

2016 ஆம் ஆண்டு மகாராஷ்டிர தொழில் வளர்ச்சிக் கழகம், தொழில் முனைவோருக்கென ACPL என்ற நிறுவனத்துக்குக் கொடுத்த இலவச நிலத்தை அஜித்பவாரின் அண்ணனுக்கு சொற்ப தொகை வாடகைக்குத் நிரந்தரத் தொழில் நடத்தக் கொடுத்தது. மத்தியத் தணிக்கைக் குழுவின் சுட்டிக்காட்டல் பெறப்பட்டு குற்றப் பத்திரிக்கை தயாரான பின், அஜித் பவார் பி. ஜே. பி. யோடு இணைந்த செயல்பட்டுக்கு வந்த உடனேயே நிகழ்ந்தது இது :பி.ஜே.பி.யோடு சேர்ந்து நின்றதால். கோடிகள் கைமாறிக் குற்றம் மறைந்தது. தீர்ந்தது ஊழல் புகார். மறைந்தது ஊழல் குற்றம்.

**சங்கிகளின் புதிய ஊதுகுழல் சர்மா!**

முந்தைய அஸ்ஸாம் காங்கிரஸ் ஆட்சியில் கேபினட் அமைச்சராக இருந்த ஹேமந்த் பிஸ்வாஸ் சர்மா மீது அன்றைய ஒன்றிய அமைச்சர் அமித்ஷா அவர்களின் பத்திரிக்கைச் செய்தி.

இந்த சர்மாதான் ஒரு நாள் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி நவம்பர் 23 அஹமதாபாத்தில் நடந்த இறுதிப் போட்டியில் இந்தியா தோற்றதற்குக் காரணம். இந்திரா காந்தியின் பிறந்த நாளில் அது நடந்ததே என்ற அறிஞர். “புகுந்த வீட்டு அடிமை விசுவாசி”. முன்னாள் காங்கிரஸ் அமைச்சர்.

மேற்கு வங்க மாநிலத்தைச் சேர்ந்த பல பிரபலங்களை மாட்டவைத்த “சாரதா சீட்டுக் கம்பெனி” ஊழலின் மிக முக்கியப் புள்ளியாக சிபிஐ யால் கருதப்பட்டுக் கைதான சுதீப்தோ சென் 2013 ஏப்ரல் 6 அன்று கைப்பட எழுதிக் கொடுத்த வாக்குமூலத்தில் “ஹேமந்த் பிஸ்வாஸ் சர்மா 3 கோடிக்கும் மேலாகப் பெற்றுக் கொண்டார்” என்று குறிப்பிட்டிருக்கிறார்.

பிஸ்வாஸ் சர்மா காங்கிரஸ் அமைச்சராக இருந்தபோது தண்ணீர்க் குழாய்கள் வாங்கிய விவகாரத்தில் லஞ்சம் கொடுக்கப் பட்டதாக அமெரிக்க அரசு “லூயிஸ் பெர்கர்” கம்பெனிக்கெதிராக வழக்குநடத்தியது. அதுமட்டுமல்ல, அன்றிருந்த காங்கிரஸ் அரசின் மீது பி.ஜே.பி கட்சி வெளியிட்ட 11 பக்கக் குற்றப் பத்திரிக்கையில் இந்த “லூயி பெர்கர்” ஊழலும் இடம் பெற்றது. அதில் அந்தத் துறையின் அமைச்சர் பிஸ்வாஸ் சர்மாவைக் குற்றம் சாட்டியிருந்தது. புனிதர்களின் பாசறை மோடியின் பி ஜே பி.. அவர் கட்சி தாவிய பின், அமித் ஷா சொன்னார், “அரசின் எந்த ஊழல் புகாருக்கும் பதிலை அந்த அரசின் தலைவரான முதல்வர்தான் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறார். பிஸ்வாஸ் சர்மா என்ன அந்த அரசின் தலைவரா?” என ஊடகவியலாளர்களைத் தமிழ்நாட்டு அண்ணமலை போல் கேட்டார்.

அப்புறம் என்ன? தீர்ந்தது லூயிஸ் பெர்கர் ஊழல் பிரச்சினை. ஹேமந்த் பிஸ்வாஸ் சர்மா இப்போது கறை நீக்கப் பட்டு பி ஜே பி வாஷிங் மிஷினிலிருந்து வந்து தினமும் முஸ்லிம் எதிர்ப்பு, காங்கிரஸ் எதிர்ப்புப் பிதற்றல்களில் வண்டி ஓட்டிக் கொண்டிருக்கிறார்.

– ஆர்.ராமானுஜம்

# இசையமைப்பாளர், பாடகர் பவதாரிணி மறைவுக்கு இரங்கல்



இசையமைப்பாளர், பாடகர் பவதாரிணி மறைவுக்கு இரங்கல் தெரிவித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு.

இசைஞானி இளையராஜாவின் மகளும், பிரபல இசையமைப்பாளருமான பவதாரிணி (47), 25.01.2021 அன்று இலங்கையில் காலமானார் என்று துயரச் செய்தி அறிந்து அதிர்ச்சியுற்றோம்.

இசைக் குடும்பத்தில் இளையராஜா, ஜீவா தம்பதியருக்கு 1976 ஆம் ஆண்டு பிறந்த பவதாரிணி தனது தனித்த முயற்சியாலும் திறமையாலும் சிறந்த இசையமைப்பாளர் மற்றும் பாடகியாக திகழ்ந்தவர். இவரது "மயில் போல பொண்ணு ஒன்னு" என்ற பாடல் தேசிய விருதைவென்றது.பலதிரைப்படங்களுக்கு பின்னணி பாடல்களை பாடியுள்ளார். இவரது இனிய குரல் என்றென்றும் ஒலித்துக் கொண்டிருக்கும். இசை உலகின் சிகரம் நோக்கி பயணித்த பவதாரிணியின் உடல் நலனை தாக்கிய புற்று நோயை எதிர்த்து போராடிய போதிலும், மருத்துவம் தோற்றுப் போனது. பெண் குலத்துக்கு பெருமை சேர்த்து வந்த இசை மகளை இழந்து விட்டோம்.

பவதாரிணியின் தாயார் ஜீவா 2011 அக்டோபர் மாதம் காலமாகிவிட்டார். தந்தையார் இசைஞானி இளையராஜாவுடன் அவரது சகோதரர்கள் கார்த்திக் ராஜா, யுவன் சங்கர் ராஜா ஆகியோர் இருக்கின்றனர். அவர்களை என்ன சொல்லியும் ஆற்றுப் படுத்த இயலாது. காலம் தான் அவர்களை தேற்றி ஆற்றுப் படுத்த வேண்டும்.

இசைவாணி பவதாரிணியின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. அவரை பிரிந்து வாடும் இளையராஜா உள்ளிட்ட அவரது குடும்பத்தினருக்கும், இசை உலக நண்பர்களுக்கும் ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது. இவ்வாறு தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

### சாலை விபத்து ஏற்படுத்தும்

# ஓட்டுனருக்கு அபராதம், 10 ஆண்டுகள் சிறை தண்டனையை ரத்து செய்ய வேண்டும்

**த. போக்குவரத்து தொழிலாளர் சம்மேளனப் பொதுச் செயலாளர் அறிக்கை**



சாலை விபத்து ஏற்படுத்தும் ஓட்டுனருக்கு அபராதம் மற்றும் 10 ஆண்டுகள் சிறை தண்டனை ரத்து செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு போக்குவரத்து தொழிலாளர் சம்மேளனப் பொதுச் செயலாளர் ஆர்.ஆறுமுகம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு.

இந்திய தண்டனைச் சட்டத்திற்கு மாற்றாக 2023 டிசம்பர் 25 முதல் பாரதிய நியாய சங்கீதா என்ற சட்டம் அமலுக்கு வந்துள்ளது. விபத்தை ஏற்படுத்தி விட்டு தப்பிச் செல்லும் வாகன ஓட்டுநர்களுக்கு 10 லட்சம் அபராதமும் ஏழு ஆண்டுகள் சிறை தண்டனையும் வழங்க வகை செய்யும் சட்ட பிரிவை 106(1)(2) ரத்து செய்ய வேண்டும் என நாடு முழுவதும் ஓட்டுநர்கள் கொந்தளித்து எழுந்துள்ளனர்.

அசாம், பீகார்,ஒடிசா மாநிலங்களில் வேலை நிறுத்தம் தீவிரமாக நடந்துள்ளது.குறிப்பாக மத்திய சாலை போக்குவரத்து அமைச்சர் நிதின் கட்காரியின் சொந்த ஊரான நாக்பூரில் முழுமையான வேலை நிறுத்தம் ஜனவரி 1, 2 தேதிகளில் நடந்துள்ளது.இரண்டாம் தேதி இரவு உள்துறை அமைச்சகத்தில் இருந்து இச்சட்டத்தை அமுலுக்கு கொண்டு வரும் முன்பாக தொழிற்சங்க தலைவர்களை கலந்து பேசுவோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாலையின் அமைப்பு , மோசமான தன்மை, பாதசாரி, இருசக்கர வாகனம், எதிரே வரும் வாகனம், காலநிலை இதரவை விபத்துக்கான காரணமாக அமைகிறது.

தேசிய உரிமம் பெற்ற வாகனங்களில் இரண்டு ஓட்டுனர் அனுமதி இல்லை என அரசு கூறியதன் காரணமாக ஒரே ஓட்டுனரே நீண்ட நேரம், நீண்ட தூரம் ஓய்வின்றி வாகனத்தை இயக்க வேண்டிய நிலை உள்ளது.

ஓய்வு, உணவருந்தும் நேரம் அதற்கான வசதிகள் இல்லை. இதனை ஒதுக்கிவிட்டு விபத்துக்கு ஓட்டுநரை பலிகடா ஆக்குவது சரியல்ல.

மரண விபத்து காவல்துறை முதல் தகவல் அறிக்கை பதிவு, அதிவேகம் அஜாக்கிரதை என்று காவல்துறை வழக்குகளில் பொத்தம் பொதுவாக குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகிறது. அது சரியல்ல. இதுபற்றி ஆய்வு செய்ய நிபுணர் குழு அமைக்க வேண்டும்.

எதிர்பாராமல் விபத்து நேரிடும் சூழ்நிலையில் ஓட்டுநர் அங்கு இருந்தால் அப்பகுதி மக்கள் கோபாவேசமாக வெகுண்டு எழுந்து ஓட்டுநரை மிருகத்தனமாக தாக்குகின்றனர். பல இன்னல்களுக்கு ஆட்படுத்துகின்றனர். இதன் காரணமாக சில இடங்களில் ஓட்டுநர்கள் கொல்லப்படுகின்றனர்.

விபத்தை ஏற்படுத்தி விட்டு தப்பித்துச் செல்ல வேண்டும் என உள்நோக்கம் எதுவும் கிடையாது மோட்டார் வாகனச் சட்டம் 1988 பிரிவு 134 இத்தகைய நடவடிக்கை தவறாக கொள்ள முடியாது என குறிப்பிடுகிறது.

இந்தியாவில் வணிக வாகனங்களை இயக்குவதற்குரிய ஓட்டுனர்கள் 30% பற்றாக்குறை தற்போது நிலவுகிறது. சாலையில் இயக்கப்படும் ட்ரக் வாகனங்கள் கடும் நெருக்கடியில் உள்ளது. இந்த நிலையில் கடும் தண்டனைகளும் அபராதமும் சாலைப்போக்குவரத்து அழிவு பாதைக்கு சென்றுவிடும் அபாயம் உள்ளது.

சாலை போக்குவரத்தில் செயல்படும் அனைத்து தொழிற்சங்கங்களையும் ஒன்றிய அரசு அழைத்து பேசிதீர்வு காண வேண்டும்.

மேற்சொன்ன சூழ்நிலையில் இந்திய தண்டனைச் சட்டத்திற்கு மாற்றாக பாரதிய நியாய சங்கீதா 2023 பிரிவு 106(1) (2) கைவிடப்பட வேண்டும். இதற்குரிய சட்ட திருத்தம் செய்து எதிர்வரும் பாராளுமன்ற கூட்டத்தொடரில் உள்துறை செயலாளர் கொடுத்துள்ள வாக்குறுதி நிறைவேற்றிட வேண்டும். அகில இந்திய தலைவர்கள் கையொப்பமிட்ட கடிதம்12 .01.24 அன்று ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அகில இந்திய அளவில் போராட்டத் திட்டம்

பாரதிய நியாய சங்கீதா 2023 சட்டப்பிரிவில் உள்ள பாதிப்புகளை அந்தந்த வட்டார மொழிகளில் துண்டு பிரசுரங்கள் வெளியிட்டு அதன் பாதிப்பை சாலைப்போக்குவரத்து தொழிலாளர்களுக்கு உணர்த்திட வேண்டும்.

மாநில/ மாவட்ட/ வட்டார அளவில் பிப்ரவரி 10ஆம் தேதிக்கு முன்பாக LP-F,AITUC, INTUC, CITU, HMS, TUCI மற்றும் சாலை போக்குவரத்தில் செயல்படும் இதர சங்கங்களையும் இணைத்துக் கொண்டு மாநாடுகள் நடத்தப்பட வேண்டும் என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# தூய்மைப் பணியாளர்களை அவமதிப்பதா?

**ஏஐடியுசி கண்டனம்!**

தூய்மை பணியாளர்கள், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குனர்களை கௌரவிப்பதாக அழைத்து அவமதிப்பதா என்று ஏஐடியுசி பொதுச் செயலாளர் எம்.இராதாகிருஷ்ணன் கண்டனம் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு.

விருதுநகர் மாவட்டத்தில் நடைபெற்ற குடியரசுதினவிழாவில் கௌரவிப்பதற்காக தூய்மை பணியாளர்கள், தூய்மை காவலர், மேல்நிலைத் தொட்டி இயக்குபவர், சுகாதார ஊக்குனர்கள் மற்றும் மகளிர் திட்ட தொழிலாளிகள் அனைவரையும் வரவழைத்துள்ளனர்.

ஆனால் அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் பாராட்டு சான்று மற்றும் பதக்கம் வழங்கிவிட்டு, தொழிலாளர்களுக்கு திட்ட இயக்குனர் வழங்குவதாக தெரிவித்துள்ளார். திட்ட இயக்குனரோ தொழிலாளர்களை அவரது அலுவலகத்திற்கு வரச்சொல்லி உள்ளார்.

அவ்வாறு வந்த தொழிலாளர்களை மதியம் ஒரு மணி வரை காத்திருக்க வைத்துவிட்டு கடைசியில் உதவி இயக்குனர் தனிக்கையை வைத்து சான்று மட்டும் வழங்கி அனுப்பியுள்ளார்.

மக்கள் மத்தியில் விழா நிகழ்ச்சி நடைபெறும் இடத்தில் வழங்க வேண்டிய கௌரவத்தை இதுபோன்று இழுத்தடிப்பு செய்து வழங்கியது தொழிலாளர்களை கவுரவிப்பது ஆகாது; மாறாக அவமதிக்கும் செயலாகும். சிறப்பாக பணியாற்றியதற்காக கவுரவிக்க தேர்வு செய்யப்பட்ட தொழிலாளிகளை இவ்வாறு அவமதித்ததானது மேலாதிக்க மனநிலையை வெளிப்படுத்துவதோடு வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் படியும் தண்டனை தரத்தக்க குற்றமாகும். கடைநிலையில் பணிபுரியும் சமூகத்தின் கடை கோடியில் உள்ள இத் தொழிலாளர்களை கௌரவிக்கவில்லை என்றாலும் இதுபோன்று வரவழைத்து அலைக்களிப்பு செய்து அவர்களை அவமதிப்பது எந்த காரணத்தாலும் ஏற்புடையதல்ல

தமிழ்நாடு உள்ளாட்சி பணியாளர் சம்மேளனம் (ஏஐடியுசி) இதனை வன்மையாக கண்டிப்பதோடு, விருதுநகர் மாவட்ட ஆட்சியர் மற்றும் திட்ட இயக்குநர் உள்ளிட்ட சம்மந்தப்பட்ட அலுவலர்கள் உணர்ந்து கொள்ளும் வகையில் அவர்கள் மீது தமிழ்நாடு அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறோம் என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

1 ஆம் பக்கத் தொடர்ச்சி

ஒதுக்கீட்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்திற்கு ரூபாய் நான்கு லட்சம் கோடி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என ஒன்றிய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

**2. ஆதார் - இணைப்பு உத்தரவை ரத்து செய்க!**

தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புச் சட்டத்தின் கீழ் திட்டப் பணிகளை தேர்வு செய்யும் அதிகாரம் கிராம ஊராட்சிகளுக்கும், கிராம சபாக்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த சட்ட நடைமுறைகளை அரசின் நிர்வாக அமைப்புகள் அலட்சியப்படுத்தி, அதிகார வர்க்க நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றது. ஒன்றிய பாஜக அரசு வேலை அட்டையுடன் ஆதார் அடையாள அட்டை இணைக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனை விதித்துள்ளது. இதனைத் தொடர்ந்து சுமார் 6 கோடி வேலை அட்டைகள் ரத்து செய்யப்பட்டிருப்பதை இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கம் வன்மையாக கண்டிக்கிறது. அரசின் சேவைகளை பெறுவதற்கும், சட்டபூர்வ உரிமைகளை பெறுவதற்கும் ஆதார் அட்டையை இணைக்க வேண்டும் என கட்டாயப்படுத்தக் கூடாது என்று உச்சநீதிமன்றம் தெளிவான உத்தரவிட்டிருப்பதற்கு எதிராக செயல்படுவதை கைவிட வேண்டும். ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத் ராஜ் அமைச்சகத்தின் வேலை அட்டையுடன், ஆதார் அட்டையை இணைக்க வேண்டும் என்ற உத்தரவை ரத்து செய்து, வேலை அட்டை பெற்றுள்ள அனைவருக்கும் நிபந்தனையின்றி வேலை வழங்க வேண்டும்.

**3. நாடாளுமன்ற தேர்தலில் பாஜகவை தோற்கடிப்போம்!**

பாரதிய ஜனதா கட்சியின் பத்தாண்டு கால ஆட்சி விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு எதிராகவும், கார்ப்பரேட் சக்திகளுக்கு ஆதரவாகவும் செயல்பட்டுள்ளது. நாட்டின் பெரும் பகுதி மக்களின் நலனை புறக்கணித்து விட்டு, பெரும் பணக்காரர்களுக்கு ஆதரவாக செயல்பட்டு வருகிறது.

வேலையின்மையும், வேலையிழப்பும் அதிகரித்து வருகிறது. அத்தியாவசிய உணவு தானியங்கள், காய்கறி வகைகள் உட்பட அனைத்துப் பொருட்களின் விலைகளும் உயர்ந்து வருகின்றன.

பெரும்பான்மை மத அடிப்படைவாத உணர்வையும், வெறுப்பு அரசியலையும் முன்னெடுத்து மனித சமூகத்தை சாதி அடையாளங்களுடன் பிளவுபடுத்தும் சனாதன, வர்ணாசிரம முறைகளை அமலாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. பட்டியலின, பழங்குடியினர் மீதும், மதச்சிறுபான்மையினர் மீது கொடூரமான தாக்குதலை நடத்தி வருகிறது.

மாநிலங்களின் அதிகாரங்களையும், உரிமைகளையும் பறித்து, தனிநபர் மையப்பட்ட, பாசிச சர்வாதிகாரமாக உருவாகி வரும் பேராபத்து ஏற்பட்டுள்ளது. இந்த நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்கவும், அரசியல் அமைப்பு சட்டத்தை பாதுகாத்து, ஜனநாயக ஆட்சி முறையை நிலைநிறுத்தவும் நாடாளுமன்ற தேர்தலில் (2024) பா.ஜ.க.வை தோற்கடிக்க வேண்டும் என நாட்டின் அனைத்து பகுதி மக்களையும் கேட்டுக் கொள்கிறது.

கூட்ட நிறைவில் தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் அ.பாஸ்கர் நன்றி கூறினார்.

# லெனின் நூற்றாண்டு விழா

**நாமக்கல்:** திருச்செங்கோடு நகர இந்திய கம்யூனிஸ்ட் கட்சிசார்பில், லெனின் 100வது ஆண்டு நினைவு தினம், நகரச் செயலாளர் எஸ்.சுகுமார் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் பி.தனசேகரன், தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாவட்ட செயலாளர் எஸ்.ராமகிருஷ்ணன், கட்டட சங்க மாவட்ட செயலாளர் ஏ.குமார் மற்றும் கட்சியின் முன்னணி தோழர்கள் கலந்து கொண்டனர்.

**கரூர்:** கரூர் மாவட்ட கட்சி அலுவலகத்தில் லெனின் திருவுருவ படத்திற்கு மாலையிட்டு மரியாதை செய்யப்பட்டது. மாவட்ட செயலாளர் கே.என்.நாட்ராயன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், மாவட்ட துணை செயலாளர் எஸ்.மோகன் குமார், மாவட்ட பொருளாளர் ஆர்.ராஜேந்திரன், மாவட்ட நிர்வாக குழு வி.லட்சுமி காந்தன், மாவட்ட குழு உறுப்பினர்கள் ஜிபிஎஸ். வடிவேலன், கே.எஸ்.நேதாஜி, என்.ராமசாமி, எஸ்.கார்த்திகேயன், எஸ்.பழனி, அரவை சாமிநாதன், டிஎன்எஸ்டிசி கனகராஜ், ஜி.விஜயகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# கலை இலக்கியப் பூங்கா




## "அன்பிலதனை அறம்" அனைத்திந்திய கலைப் பயணம் புதுச்சேரியில் பிரச்சாரம்!

நாட்டில் நிலவும் வெறுப்பரசியலுக்கு எதிராக "மனித நேயம் வளர்ப்மே, மத நல்லிணக்கம் காப்போம்" என்ற முழக்கங்களுடன் நாடு முழுவதும் இந்திய மக்கள் நாடக மன்றம் முன்முயற்சி எடுத்து நடத்துகின்ற அகில இந்திய கலைப் பயணத்தின் ஒரு பகுதியாக ஜனவரி 18,19 ஆகிய இரு தினங்கள் புதுச்சேரியில் "அன்பிலதனை அறம்" என்ற பதாகையின் கீழ் கலைப்பயணம் பத்து மையங்களில் பிரச்சாரம் நடைபெற்றது.

புதுச்சேரியில் மகாகவி பாரதி இல்லத்தில் அவரது உருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி கலைப் பயணம் தொடங்கியது. இந்த கலைப்பயணம் நிகழ்ச்சிக்கு கலைமாமணி பேராசிரியர் நா.இளங்கோ தலைமை தாங்கினார். முன்னாள் தலைமை நீதிபதி தாவீது அன்னுசாமி தொடங்கி வைத்தார். புதுச்சேரி மாநிலக் கலை இலக்கியப் பெருமன்றத்தின் சிறப்பு தலைவர் கலைமாமணி பாவலர் மு.கு.இராமன், மக்கள் ஒற்றுமை இயக்கம் இமாம்ஹாசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் அ.மு.சலீம், மார்க்சிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் ராஜாங்கம், முன்னாள் அமைச்சர் ஆர்.விசுவநாதன், ஏஐடியூசி தலைவர்கள் வி.எஸ்.அபிஷேகம் தினேஷ் பொன்னையா, சுப்பையா அந்தோணி, சிவகுரு. பாலா சிபிஎம் தலைவர்கள் பெருமாள், கொளஞ்சியப்பன், சத்தியா உட்பட பலர் கலந்து கொண்டனர். கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச்செயலாளர் மு.வீரபாண்டியன், அகில இந்திய முற்போக்கு எழுத்தாளர்கள் சங்க செயலாளர் வினித் திவாரி, நாடகவியலாளர் பிரளயன் ஆகியோர் உரையாற்றினார்கள். புதுச்சேரி மாநிலக் கலை இலக்கியப் பெருமன்றம் சார்பில் பொதுச்செயலாளர் பெ.பால கங்காதரன் தலைமையில் துரை. செல்வம், மு.சி.இராதாகிருஷ்ணன், மு.ஆதிராமன், இரா.தங்கமணி, ஓவியர் கலைமாமணி கா.முனிசாமி, ஓவியர் கி.சக்திகுருநாதன், ஜெயஹி ஆகியோர் பங்கேற்றனர்.

### கு.அழிகரிசாமி சிறுகதை வாசிப்பு!

எழுத்தாளர் கு.அழகிரிசாமி சிறுகதைகளை இணைய வழியாக தினமும் ஒருவர் சொல்வதென தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் முடிவு செய்தது.

முதல்நாள் நிகழ்வினை விருதுநகர் மாவட்ட ஆட்சியர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் கு.அழகிரிசாமி எழுதிய "குமாரபுரம் ஸ்டேசன்" "அன்பளிப்பு" ஆகிய இரண்டு கதைகளைச் சொல்லி தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து தினமும் ஒருவராக சிறுகதை சொல்லி 50வது நாளாக தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற மாநிலப் பொதுச்செயலாளர் மருத்துவர் த.அறம் கு.அழகிரிசாமி எழுதிய "பங்கஜத்தின் தற்கொலை" என்ற சிறுகதையைக் கூறினார்..

இந்த 50ஆம் நாள் நிகழ்விற்கு தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித் துறை இயக்குனர் முனைவர் ஔவை அருள், எழுத்தாளர் கு.அழகிரிசாமி அவர்களின் படைப்புகளைச் சிறப்பித்து இணைய வழியாக வாழ்த்துரை வழங்கினார். தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற மாநிலத் தலைவர் எஸ்.கே. கங்கா, மேனாள் பொதுச் செயலாளர் கவிஞர் இரவீந்திரபாரதி, முனைவர் கரு.முருகன், முனைவர் அகிலா கிருஷ்ணமூர்த்தி உட்பட பலர் இந்த இணையவழி நிகழ்ச்சியில் பங்கேற்று கருத்துரை வழங்கினர்.

### நூல் அறிமுகம், ஆவணப்படம் திரையிடல்!

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சாத்தூர் கிளை சார்பில், தனுஷ்கோடி அரங்கத்தில் படத்திறப்பு, நூல் அறிமுகம், பாராட்டு விழா, ஆவணப்படம் திரையிடல், ஆகிய விழாக்கள் நடைபெற்றது.

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற மாநிலப் பொதுச் செயலாளர் மருத்துவர் த. அறம் எழுதிய. "நூற்றாண்டு கண்ட ஆளுமைகள்" என்ற புத்தகத்தை பெருமன்ற மாநில துணைத்தலைவர் டி.எஸ். நடராஜன், மாநிலச் செயற்குழு உறுப்பினர் முனைவர் கணபதி இளங்கோ, சிவகாசி கிளை முத்துபாரதி, கோவில்பட்டி மணிகண்டன் ஆகியோர் அறிமுகம் செய்து உரையாற்றினர்.

தொடர்ந்து தமிழ்நாடு அரசு கலை பண்பாட்டுத் துறை சார்பில் "கலைமுதுமணி" பட்டம்பெற்றகைவினைக்கலைஞர் அறிவொளி இராமமூர்த்தி மற்றும் "எட்டயபுரத்து ஏழிசைப் புலவா" என்ற பாடலை இயற்றிப் படமாக்கிய திரை இயக்குனர் கண்ணன் ஆகியோர்களைப் பாராட்டி மருத்துவர் த.அறம், கோவில்பட்டி காமராஜர் மெட்ரிக் பள்ளி முதல்வர் கே.பிரபு, தலைமை ஆசிரியர் வெங்கட்ராமன் ஆகியோர் பேசினர்.

நூற்றாண்டு கண்ட இலக்கிய ஆளுமை எழுத்தாளர் கு.அழகிரிசாமி அவர்களின் வாழ்க்கை மற்றும் படைப்புகள் பற்றிய ஆவணப்படம் திரையிடப்பட்டது.

### முப்பெரும் விழா!

தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றத்தின் ஈரோடு மாவட்டம் சிவகிரி கிளையின் சார்பில், இலக்கிய பேராசான் ஜீவா திருவுருவப்படம் திறப்பு, பேரூராட்சி தூய்மை பணியாளர்களுக்கு பாராட்டு, அகவை 80ஐ நிறைவு செய்த கா.மா. முருகேசன் அவர்களுக்கு பாராட்டு என முப்பெரும் விழா நடத்தப்பட்டது.

விழாவிற்கு ஈரோடு மாவட்ட தலைவர் மு. வரதராஜன் தலைமை வகித்தார். கிளைச் செயலாளர் த.மணிவண்ணன் வரவேற்புரை ஆற்றினார். பெருமன்றத்தின் மாநில துணைச் செயலாளர் சசிகலா, பேராசான் ஜீவா திருஉருவப்படத்தை திறந்து வைத்து சிறப்புரையாற்றினார். ஈரோடு மாவட்ட செயலாளர் ஓடை பொ.துரையரசன் வாழ்த்தி உரையாற்றினார். சிவகிரி திராவிடர் கழக அமைப்பாளர் கு. சண்முகம், பேரூராட்சி தூய்மை பணியாளர்களை பாராட்டி, பயனாடை அணிவித்தார். கா.மா. முருகேசனை பாராட்டி சிவகிரி கிளை தலைவர் சி.ஆறுமுகம், கட்சியின் கொடுமுடி ஒன்றிய செயலாளர் இரா.ரணதிவேல், பேரூராட்சி மன்ற முன்னாள் கவுன்சிலர் ஆ. மீனாட்சி சுந்தரம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சிவகிரி கிளைச் செயலாளர் சசி, பத்திரிக்கையாளரும் கிளையின் நிர்வாக குழு உறுப்பினருமான சி.க.கார்த்திகேயன் மற்றும் பலர் பயனாடை அணிவித்து பாராட்டினர். கா.மா.முருகேசன் ஏற்புரை ஆற்றினார்.

### நூல்கள் வெளியீடு!

சென்னை புத்தகக் காட்சி சிற்றரங்கில், நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் சார்பாக, தமிழில் சமகால அரசியல் நூல்கள் வெளியீட்டு விழா நடைபெற்றது.

இவ்விழாவிற்கு நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர் க.சந்தானம் தலைமையேற்று, நூல்களைவெளி யிட்டார். நூல்களை "செம்மலர்" ஆசிரியர் ச.தமிழ்ச்செல்வன், சி.பி.ஐ. (ம.லெ) விடுதலை இயக்கத்தின் வெ.சந்திரமோகன் பெற்றுக் கொண்டனர். நூல்கள் குறித்த கருத்துரைகளை இணை பதிப்பாளர் ப.கு.ராஜன், மொழி பெயர்ப்பாளர் மா.சிவக்குமார் வழங்கினர்.

■ சென்னை புத்தகக் காட்சியில் தேனி மாவட்டச் செயலாளர் முனைவர் பெரு.



பழனிச்சாமி எழுதிய இரு நூல்களை பொதுச் செயலாளர் மரு.த.அறம் வெளியிட்டார்.

"இயற்கையால் நலம் பெறவோம்" என்ற நூலை மாநில துணைத் தலைவர் டி.எஸ். நடராஜன் பெற்றுக் கொண்டார். "விளிம்பு நிலை மக்கள் ஆய்வுகள்" நூலை மாநில செயற்குழு உறுப்பினர் மரு.சாந்தி பெற்றுக் கொண்டார். சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச்செயலாளர் டாக்டர் ரவீந்திரநாத், மாநில செயற்குழு உறுப்பினர் நவநீதகிருஷ்ணன், மாநிலக் குழு உறுப்பினர் ராமசுப்பிரமணியன் கலந்து கொண்டனர். நிகழ்வை சென்னை மாவட்டச் செயலாளர் கணபதி இளங்கோ ஒருங்கிணைத்தார்.

### தமிழ்ஒளி நூற்றாண்டு விழா!

கோவை சூலூர் ஆர்.வி.எஸ். கல்லூரியில் கவிஞர் தமிழ்ஒளி நூற்றாண்டு விழா நடைபெற்றது. மாவட்டத் தலைவர் வெ.சுப்பிரமணயன் தலைமையுரையாற்றினார். மாநிலத் துணைத்தலைவர் எல்லை சிவக்குமார் பேச்சுப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்ளுக்குப் பரிசளித்து, சிறப்புரையாற்றினார்.

முனைவர் த.திலிப்குமார் இயக்கத்தில் கவிஞர் தமிழ்ஒளியின் "பற்றுக்கோடு" சிறுகதையை மாணவர்கள் நடித்து அசத்தினர்.

நிகழ்வினை அடுத்து பெருமன்றமும், கல்லூரியும் இணைந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியது. கவிஞர் தமிழ்ஒளியின், பெருமைக்குரிய பங்களிப்புகளை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லும் வகையில் விழா அமைந்தது குறிப்பிடத்தக்கது.

### கருத்தரங்கம்!

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சென்னை மாவட்டம் வியாசர்பாடி கிளை சார்பாக, கவிஞர் தமிழ்ஒளி நூற்றாண்டு விழாக் கருத்தரங்கம் சென்னை மகாகவி பாரதி நகர் பேருந்து நிலையம் எதிரில் நடைபெற்றது. பேரா மா.து.ராஜ்குமார் தலைமை உரை நிகழ்த்தினார். முனைவர் யாழினி முனுசாமி ஒருங்கிணைப்பு செய்தார்.

பொதுவுடைமைக் கவிஞர் தமிழ்ஒளி என்ற தலைப்பில் எழுத்தாளர் வே. எழிலரசு, கவிஞர் சொர்ணபாரதி "கல்வெட்டு பேசுகிறது" இதழ் ஆசிரியர் மற்றும் முனைவர் மணி கோ. பன்னீர்செல்வம் பாரதிதாசன் ஆய்விருக்கை உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் சென்னை முதலிய பேராளர்கள் சிறப்புரை ஆற்றினர்.

வியாசர்பாடி ஜீவா கலைக் குழு தோழர்கள் புரட்சிகர பாடல்கள் பாடினர். மரு.ஏ.ஆர். சாந்தி த.க.இ.பெ செயற்குழு உறுப்பினர் மற்றும் கணபதி இளங்கோ மாவட்டச் செயலாளர் த.க.இ.பெ சென்னை மாவட்டம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்.

### படைப்பரங்கம்!

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் காரைக்குடி கிளைக் கூட்டம் கரு.ஞானாம்பாள் மகாலில் முனைவர் முருகேசுவரி தலைமையிலும் தமிழ்க்கடல் அய்யாறு மெய்யாண்டவர் முன்னிலையிலும் நடைபெற்றது. கூட்டத்தில் மைசூர் தமிழ்ச் சங்கத்தின் துணைத்தலைவர் கர்ணன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். படைப்பரங்கில் வழக்கறிஞர் சத்தியமூர்த்தி திரை விமர்சனமும், இரா.பூபதி சாகித்ய அகாடமி விருது பெற்ற எழுத்தாளர் தேவிபாரதியின் 'நீர்வழிப்படூஉம்' நாவல் அறிமுகமும் செய்தனர். இரா. பூபதி 'வேலையோ வேலை' எனும் சிறு நாடகத்தை அரங்கேற்றினார். மாவட்டத் தலைவர் முனைவர் மு.பழனியப்பன் கிளைத் தலைவர் முதுமுனைவர் சந்திரமோகன் கூட்ட மதிப்பீடு செய்தனர்.

### கவியரங்கம்!

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் மதுரை மாவட்டம், நியூ செஞ்சுரிப் புத்தக நிறுவனம் மதுரை கிளையும் இணைந்து புத்தக நிறுவன வளாகத்தில் தைத்திருநாள் கவியரங்கினை நிகழ்த்தியது. மாவட்டத் தலைவர் கவிஞர் மு.செல்லா தலைமை வகித்தார். சாகித்ய அகாதமி விருதாளர் பேராசிரியர் பா.ஆனந்தகுமார் வாழ்த்துரை வழங்கினார். கவிஞர் ஜி.மஞ்சுளா முன்னிலை வகித்தார். சோழவந்தானூர் முத்தையாப் புலவன், தமிழ் சிவா, மதுரை செல்லூர் உபாத்தியாயர், ஆண்டி பாண்டி, மதுரை அச்சகனார் மகனார் ரோசாமுத்தையன், மதுரை பட்டு நூலார் மகனார் நல்லீசன், பேராசிரியர் நேருஜி, தோழர் நெளசக் உள்ளிட்ட கவிஞர்கள் தம் கவிதையை அரங்கேற்றினர்.

அகவை முதிர்ந்த தமிழறிஞர் அ.முத்துவேலன், விமர்சகர் நூலகர் ந.முருகேசப் பாண்டியன், புத்தக நிறுவன மேலாளர் இரா.மகேந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### நூல் அறிமுகம்!

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சென்னை மாவட்டம் மற்றும் ஒய். எம்..சி.ஏ பட்டிமன்றம் சென்னை இணைந்து நடத்திய, நூல் அறிமுக நிகழ்ச்சி ஒய்.எம்.சி.ஏ பட்டிமன்றம் எசுபிளனேடு அரங்கில் சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் முனைவர்.ப.தாமரைக் கண்ணன் வரவேற்புரை ஆற்றினார். தனுஷ்கோடி ராமசாமி சிறுகதைகள் இரு தொகுதிகள் அறிமுகம் செய்யப்பட்டது. எழுத்தாளர் டி.குலசேகர் தலைமை உரை நிகழ்த்தினார். டி.எஸ். நடராஜன் தேசியச் செயலாளர் ஏ.ஐ.பி.டபிள்யு.ஏ. வாழ்த்துரை வழங்கினார்.

நூல் குறித்த கவிஞர் இரவீந்திரபாரதி சிறப்புரை ஆற்றினார். எழுத்தாளர் தனுஷ்கோடி ராமசாமி அவர்களுடன் இணைந்து பயணித்த அனுபவங்கள் ஊடாகவும், அவரது மார்க்சிய நோக்கில் அமைந்த படைப்பாற்றல் குறித்தும் தோழர்கள் விவரித்தனர். மரு.த.அறம் ஏற்புரை வழங்கினார். இறுதியில் புலவர் பு.சீ. கிருஷ்ணமூர்த்தி நன்றி கூறினார்.



# பொள்ளாச்சியில் கட்சியின் 99ஆம் ஆண்டு விழா



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 99ஆம் ஆண்டு துவக்கம், மாமேதை லெனின் 100வது நினைவு நாள், இலக்கியப் பேராசான் ஜீவா 61வது நினைவு நாள், ஆர்.நல்லகண்ணு அவர்களின் 99வது பிறந்த தினம், விளையாட்டு வீரர்களுக்கு பாராட்டு நிகழ்வு ஆகிய ஐம்பெரும் விழா பொள்ளாச்சி வங்கி ஊழியர் சங்க அலுவலகத்தில் நடைபெற்றது.

கட்சியின் பொள்ளாச்சி வட்ட செயலாளர் வி.சண்முகம் தலைமை தாங்கினார். இளைஞர் மன்ற தலைவர் மணிகண்டன் வரவேற்புரையாற்றினார். கட்சியின் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் கே.வெங்கடாசலம் அறிமுக உரையாற்றினார். கட்சியின் மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் கலந்துகொண்டு வீரர்களுக்கு பதக்கங்களை அணிவித்து, பாராட்டி வாழ்த்திப் பேசினார். கட்சியின் மாவட்டத் துணைச் செயலாளர்கள் ஜே.ஜேம்ஸ், மௌ.குணசேகர் கலந்துகொண்டனர்.

# சிபிஐ அரசியல் விளக்க பொதுக்கூட்டம்!



இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சேலம் மாநகரம் சூரமங்கலம் மண்டலம் ஆண்டிப்பட்டி கிளை சார்பாக அரசியல் விளக்க பொதுக்கூட்டம் ஆண்டிப்பட்டி அண்ணல் அம்பேத்கர் திடல் அருகில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சேலம் மாவட்ட குழு உறுப்பினர் பேராசிரியர் ஜெ.கனியன் பூங்குன்றன் தலைமை வகித்தார். கலை இலக்கிய பெருமன்றம் ஆண்டிப்பட்டி கிளை சார்பாக பறை இசை தப்பாட்டம், ஒயிலாட்டம், கரகம் உள்ளிட்ட இசை நிகழ்வுகளுடன் கூட்டம் தொடங்கியது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன், சேலம் மாவட்ட செயலாளர் ஏ.மோகன், மாவட்ட துணை செயலாளர் எம்.ராமன், மாநில நிர்வாக குழு உறுப்பினர் க.பாரதி மற்றும் காங்கிரஸ் சேலம் மாவட்ட பொருளாளர் தாரை கு.ராஜகணபதி, மண்டல தலைவர் வழக்கறிஞர் ஷாநவாஸ், விசிக மாவட்ட செயலாளர் இ.காஜாமைதீன், மதிமுக மாவட்ட செயலாளர் மருத்துவர் சி.சங்கேஷ்வரன், தவாக மாவட்ட செயலாளர் சி.மோகன்ராஜ் உள்ளிட்ட கூட்டணி கட்சியை சேர்ந்த தலைவர்கள் வாழ்த்துரை வழங்கினர்.

பாராளுமன்ற தேர்தல் நிதியாக ரூபாய் 25,000 கே.சுப்பராயன் அவர்களிடம் ஆண்டிப்பட்டி கிளை தோழர்கள் வழங்கினார்கள். கூட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆண்டிப்பட்டி கிளை தோழர்கள் எஸ்.குமார், த.வீரமணி, பா.மதன், சி.சிவக்குமார், வர்மா தியாகு, பகத்சிங் சாரதி, சி.அப்பு, ர.சங்கீதா உள்ளிட்ட கிளை தோழர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## வினாடி - வினா விடைகள்

1) 1908ல் இரண்டு மாதம் ஜோகன்னஸ்பர்க் சிறையில் (தென்னாப்பிரிக்கா) அடைக்கப்பட்டார்.

2) ரவுலட் சட்டத்துக்கு எதிரான சத்தியாகிரகப் போராட்டம் (1919 ஆம் ஆண்டு)

3) 1921 செப்டம்பர் 22 அன்று மதுரையில் நடைபெற்ற கூட்டத்தில்.

4) உப்புக்கு வரி விதிக்கப்பட்டதற்கு எதிராக 240 மைல்கள் நடைபயணம் (யாத்திரை) சென்றார்.

5) 1929 டிசம்பரில் நடைபெற்ற லாகூர் மாநாட்டில்.

6) இந்து மத தர்மத்தையும் பகவத் கீதையையும் அடிப்படையாக கொண்டே காந்தியை கொன்றதாகக் கூறினார்.

# இந்திய 75வது குடியரசு தினவிழா கொண்டாட்டம்!



திருச்சி



நாமக்கல்

இந்திய நாட்டின் 75 வது குடியரசு தின விழா தமிழகம் முழுவதும் கொண்டாடப்பட்டது.

**திருச்சி:** 75 ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு திருச்சி பெரிய மிளகு பாறையில் உள்ள கட்சி அலுவலகத்தில், அகில இந்திய பொதுச் செயலாளர் டி.ராஜா தேசியக்கொடியை ஏற்றி வைத்தார்.

உறையூர் மற்றும் சோமரசம்பேட்டை பகுதியில் நடைபெற்று நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் தேசியக் கொடி ஏற்றி வைத்தார். எடமலைப்பட்டி புதூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி செயற்குழு உறுப்பினர் பத்மாவதி கொடியேற்றி வைத்தார். இதில் தேசிய கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் எம். செல்வராஜ், திருச்சி மாநகர் மாவட்டச் செயலாளர் எஸ். சிவா, அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் மாநிலச் செயலாளர் க.பாரதி, அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் மாநிலக் தலைவர் க.இப்ராகிம், ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் க.சுரேஷ், தலைவர் நடராஜா, பொருளாளர் ராமராஜ், கட்சியிஅ துணைச் செயலாளர் சி.செல்வக்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இளைஞர் பெருமன்றத்தின் மேற்கு பகுதிக் குழு சார்பில் நடைபெற்ற குடியரசு தின விழா மற்றும் பொங்கல் தின விழா விளையாட்டு போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு இளைஞர் பெருமன்ற மாநிலச் செயலாளர் க. பாரதி பரிசு வழங்கி, சிறப்புரையாற்றினார்.

**சேலம்:** சேலம் மாவட்டம் எடப்பாடி வட்டம் குருக்குப்பட்டி அரசு தொடக்க பள்ளியில் குடியரசு தின விழா பள்ளியின் தலைமை ஆசிரியர் ரஜ்ஜித்குமார் தலைமையில் நடைபெற்றது. விழா ஏற்பாடுகளை சிபிஐ எடப்பாடி ஒன்றிய செயலாளர் ஏ.சுப்ரமணி செய்தார்.

**அரியலூர்:** அரியலூரில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி _ஏஐடியூசி அலுவலகம் முன்பு கட்சியின் மாவட்டக்குழு உறுப்பினர் டி.தண்டபாணி தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். ஒன்றிய செயலாளர் ராயதுரை, நகராட்சி ஏஐடியூசி செயலாளர் ரெ.நல்லுசாமி, துணைச்செயலாளர் ந.கோவிந்தசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்

**நாமக்கல்:** நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு நகர கட்சி அலுவலகத்தில் நகர செயலாளர் எஸ்.சுகுமார் தலைமை தாங்கினார். கட்சியின் மாவட்ட செயலாளர் க.அன்புமணி தேசியக்கொடி ஏற்றி வைத்தார். ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் பி.தனசேகரன், தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாவட்ட செயலாளர் எஸ்.ராமகிருஷ்ணன், சிபிஐ மாவட்ட குழு உறுப்பினர் டி.கே.சுப்பிரமணி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**செங்கல்பட்டு:** செங்கல்பட்டு மாவட்டம் பரனூர் டோல் கேட்டில் மாநிலச் செயலாளர் கே. இரவி தேசிய கொடியை ஏற்றி சிறப்புரையாற்றினார். மாவட்ட பொதுச் செயலாளர் எம். ஜஹாங்கீர் சங்கப் பெயர் பலகை திறந்து வைத்தார். பின்பு உறுதிமொழி ஏற்கப்பட்டது.

மறைமலை நகர் பகுதியில் செக் பாய்ண்ட் சங்க பொருளாளர் எஸ்.ராஜா தலைமையிலும், விர்கோ பாலிமர் சங்கச் செயலாளர் வி . குமரவேல் தலைமையிலும் மற்றும் வூரி தொழிற்சங்க செயலாளர் எம் ராமு தலைமையிலும் தேசியக்கொடி ஏற்றப்பட்டது. இந்நிகழ்ச்சிகளில் தொழிலாளர்கள் பெருவாரியாக கலந்து கொண்டார்கள்.

# ஐக்கிய விவசாயிகள் முன்னணி, அனைத்து தொழிற்சங்கம் சார்பில் டிராக்டர் பேரணி!




ஜனவரி 26 இந்தியாவின் 75வது குடியரசு தினத்தன்று ஒன்றிய அரசின் விவசாய, தொழிலாளர் விரோத கொள்கைகளைக் கண்டித்தும், ஐக்கிய விவசாய சங்கங்களின் டெல்லி போராட்டத்தின் போது ஒன்றிய அரசு ஒத்துக்கொண்டு எழுதி கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் புறக்கணித்து வருவதை கண்டித்தும், அதனை நிறைவேற்றக் கோரியும் அனைத்து தொழிற்சங்கங்களின் ஆதரவுடன் விவசாயிகள், விவசாய தொழிலாளர் சங்கங்களின் டிராக்டர் , ஆட்டோ மற்றும் இருசக்கர வாகன பேரணி நடத்தப்பட்டது.

**செங்கல்பட்டு:** செங்கல்பட்டில் காஞ்சிபுரம் புறவழிச் சாலையில் இருந்து ராட்டினம் கிணறு வரை ஏ.ஐ.கே. எஸ். மாவட்ட தலைவர் வெ. ஹரிகிருஷ்ணன் தலைமையில், பேரணியை சிஐடியு மாநில பொருளாளர் மாலதி சிட்டிபாபு துவக்கி வைத்தார்.

பேரணி முடிவில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் எம். ஜஹாங்கீர், ஏ.ஐ.கே.எஸ். மாநிலச் செயலாளர் பி. துளசி நாராயணன், தமிழ்நாடு விவசாய சங்க மாவட்ட செயலாளர் வி.ஏ.ஏழுமலை, ஏ.ஐ.ஏ.டபிள்யு.யு. மாவட்டத் தலைவர் ஜி. புருஷோத்தமன் ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள். சமூக சமத்துவத்திற்கான மருத்துவர்கள் சங்க மாநில பொதுச் செயலாளர் டாக்டர். ஜி.ஆர்.ரவீந்திரநாத் நிறைவுரையாற்றி முடித்து வைத்தார்.

**மயிலாடுதுறை:** மயிலாடுதுறை மாவட்டத்தில் விவசாய சங்க மாவட்ட செயலாளர் பெ.வீரராஜ் தொழிற்சங்க மாவட்ட செயலாளர் கே.ராமன் சீர்காழி வி.ச.ஒன்றிய செயலாளர் கே.வரதராஜன்.செம்பை ஒன்றிய செயலாளர் எஸ்.கிருஷ்ணமூர்த்தி இளைஞர் பெருமன்றத்தின் மாவட்ட செயலாளர் மா.பிரபாகரன் மற்றும் 50க்கும் மேற்பட்ட தோழர்கள் இருசக்கர வாகனத்தில் கலந்து கொண்டனர்.

**தஞ்சாவூர்:** தஞ்சாவூர் மணிமண்டபம் அருகில் உள்ள ஐடிஐ விளையாட்டு மைதானத்தில் டிராக்டர் ஆட்டோ மற்றும் இருசக்கர வாகனங்கள் மேலவஸ்தாச்சாவடி ரவுண்டா வந்தடைந்து. பேரணிக்கு ஐக்கிய விவசாய முன்னணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் என்.வி.கண்ணன் தலைமை வகித்தார். விவசாய சங்க தலைவர்கள் முத்து உத்திராபதி, சோ. பாஸ்கர், பி.செந்தில்குமார், ஆர்.ராமச்சந்திரன், காளியப்பன், தொழிற்சங்க நிர்வாகிகள் கு.சேவியர், ஆர்.தில்லைவனம், சி.ஜெயபால் மற்றும் விவசாய சங்க, தொழிற்சங்க நிர்வாகிகள் ஏராளமானோர் பங்கேற்றனர்.

**விழுப்புரம்:** விழுப்புரம் நான்கு முனை சந்திப்பிலிருந்து மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகம் வரை டிராக்டர் மற்றும் இருசக்கர வாகன பேரணி நடைபெற்றது, பேரணிக்கு ஐக்கிய விவசாயிகள் முன்னணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஆர்.கலியமூர்த்தி தலைமை தாங்கினார், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட செயலாளர் சகாபுதின், மாவட்ட பொருளாளர் பி.மணிகணாடன், பாலசுப்பிரமணியம்,மாவட்ட செயலாளர் ஆர் டி.முருகன், மாவட்ட தலைவர் ஆர்.தாண்டவராயன் உட்பட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

# விவசாயிகளை வஞ்சிக்கும் மோடி அரசு!

## இரா.முத்தரசன் பேச்சு!



விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க விருதுநகர் மாவட்ட 26வது மாநாட்டு பேரணி, பொது மாநாடு நடைபெற்றது. இதற்கு தென்னை விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் வி.அழகிரிசாமி எக்ஸ் எம்பி தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் சவுந்திரபாண்டியன் முன்னிலை வகித்தார்.

மாநாட்டில் கலந்து கொண்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் பேசுகையில், இன்று விவசாயிகள் மிகப்பெரிய நெருக்கடியில் சிக்கித் தவிக்கின்றனர். தேர்தலின்போது மோடி தான் ஆட்சிக்கு வந்தால் வேளாண் விஞ்ஞானி சுவாமிநாதன் பரிந்துரைகளை நிறைவேற்றுவேன் என வாக்குறுதி அளித்தார். பிரதமராகி பத்து வருடம் முடியப் போகிறது விவசாயிகளுக்கு எவ்வித நன்மையும் செய்யவில்லை. தாக்குதல்களைத்தான் தொடுத்துள்ளார். டில்லி விவசாயிகள் ஒரு வருட வரலாற்று சிறப்புமிக்க போராட்டத்திற்கு அடிபணிந்து விவசாயிகள் விரோத சட்டங்களை வாபஸ் பெற்றார். ஆனால் கட்டுபடியான விலை உட்பட எதையும் நிறைவேற்றவில்லை.

மக்களுக்கு எதையும் செய்யாமல் அயோத்தியில் ராமர் கோயிலை திறந்து மீண்டும் ஆட்சிக்கு வந்து விடலாம் என நினைக்கிறார். அந்த கனவு பலிக்காது.

பிப்ரவரி 16ல் விவசாயிகள் தொழிலாளர்கள் தேசந்தழுவிய வேலை நிறுத்த போராட்டத்தை அறிவித்து உளளார்கள். இம்மாவட்டத்திலும் வெற்றியடைய நீங்கள் முழு மூச்சுடன் பங்கேற்க வேண்டும். இவ்வாறு முத்தரசன் பேசினார்.

முன்னதாக ராமகிருஷ்ணாபுரத்திலிருந்து பேரணி புறப்பட்டு முக்கிய வீதிகள் வழியாக வந்து மாநாட்டு திடலை வந்தடைந்தது.

இரண்டாவது நாள் ஸ்ரீவில்லிபுத்தூர் லட்சுமி நாராயணா திருமண மண்டபத்தில் பிரதிநிதிகள் மாநாடு நடைபெற்றது. வட்ட செயலாளர் பாரதிதாசன், கோபாலன்பட்டி அழுகுமலை, விழுப்பனூர் ஊராட்சி மன்றத் தலைவர் தமிழ்ச் செல்வன் ஆகியோர் தலைமைக்குழுவாக செயல்பட்டார்கள். வட்ட செயலாளர் இராஜேந்திரசோழன் வரவேற்றார். சிபிஐ தேசியக்குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ விவசாய சங்க கொடியை ஏற்றி வைத்தார். தவிச மாநில தலைவர் எஸ்.குணசேகரன் எக்ஸ் எம்எல்ஏ மாநாட்டை தொடங்கி வைத்துப் பேசினார். சிபிஐ மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ்.எம்பி, பொன்னு பாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ, சகோதர சங்கங்களின் தலைவர்கள் முருகன், இராமச்சந்திரராஜா, மம்சாபுரம் முத்தையா, ஏஐடியுசி முத்துமாரி, தவிதொச வரதராஜன், மாதர் சங்க பாண்டிச்செல்வி, இளைஞர்மன்ற கணேசமூர்த்தி ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள்.

மாவட்ட செயலாளர் சவுந்திரபாண்டியன் வேலை அறிக்கை வைத்துப் பேசினார். விவசாய விலை பொருட்களுக்கு கட்டுபடியான விலை, காட்டுப்பன்றி உள்ளிட்ட வனவிலங்குகளிடமிருந்து பயிர்களுக்கு பாதுகாப்பு, கனமழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு உரிய நிவாரணம் வழங்கு உள்ளிட்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. 33 பேர்கள் கொண்ட மாவட்டக் குழுவும், அதில் தலைவராக சங்கரபாண்டியன், துணைத் தலைவர்களாக பாரதிதாசன், திருவேங்கடம், கூடலிங்கம், செயலாளராக சவுதந்திரபண்டியன், துணை செயலாளர்களாக அய்யணன், சங்கரநாராயணன், பொருலாளராக பலவேசம் உள்ளிட்டோர் ஏகமனதாக தேர்வுசெய்யப்பட்டார்கள். மூர்த்தி நன்றி கூறினார்.

# ஆண்டிப்பட்டி ஒன்றியக்குழு அலுவலகம் திறப்பு

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி நகர் சக்கம்பட்டியில் தோழர் தா. பாண்டியன் நினைவு இல்லமான இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றியக் குழு அலுவலக திறப்பு விழா சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கு ஒன்றிய செயலாளர் பா.பிச்சைமணி தலைமை தாங்கினார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 10 வது வார்டு கவுன்சிலர் மு.மீனாட்சி முன்னிலை வகித்தார். மூத்த தோழர் வி.வேலுச்சாமி கொடி ஏற்றினார். நகர செயலாளர் க.முனீஸ்வரன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

அலுவலகத்தை திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் சிபிஐ மாநில கட்டுபாட்டு குழு தலைவர் கே.சுப்புராயன் திறந்து வைத்தார்.

சிபிஐ மாநில செயற்குழு உறுப்பினர் க. சந்தானம், தா. பாண்டியன் படத்தை திறந்து வைத்தார்.

சிபிஐ மாநில செயற்குழு உறுப்பினர் வி.ரவி, ஜீவா படத்தை திறந்து வைத்தார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மூத்த வழக்கறிஞர் ஏ.வி. அழகிரிசாமி எக்ஸ். எம்.பி. அவர்கள் கல்வெட்டை திறந்து வைத்தார்.

மாவட்ட செயலாளர் ஏ.பெருமாள் தோழர் சுந்தராஜன் படத்தை திறந்து வைத்தார்.

மாவட்ட துணை செயலாளர் வே.பரமேஸ்வரன் தோழர் பரந்தாமன் படத்தை திறந்து வைத்தார்.

நிகழ்ச்சிக்கு திமுக ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் ஆ. மகாராஜன் எம்.எல்.ஏ மற்றும் கூட்டணி கட்சி தலைவர்கள், தோழர்கள், முற்போக்காளர்கள், எழுத்தாளர்கள், பொதுமக்கள் என 500 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். ஒன்றியக்குழு உறுப்பினர் ஜனசக்தி பிரபாகரன் நன்றியுரை நிகழ்த்தினார்.

# தேசத்தந்தை மகாத்மா காந்தி நினைவு நாள்

இந்துத்துவ மதவெறியன் நாதுராம் கோட்சேவால் படுகொலை செய்யப்பட்ட தேச தந்தை மகாத்மா காந்தியடிகள் நினைவு நாள் அனுசரிக்கப்பட்டது.

***திருச்சி:*** மகாத்மா காந்தி நினைவு தினத்தையொட்டி திருச்சி அரசு மருத்துவமனை அருகில் உள்ள காந்தி அஸ்தி மண்டபத்தில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திருச்சி மாநகர் மாவட்ட குழுவின் சார்பில் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்ச்சியில் ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் க.சுரேஷ் எம்.சி., மாவட்ட செயலாளர் எஸ்.சிவா, மாவட்ட பொருளாளர் சொக்கி. சண்முகம், பகுதி குழு செயலாளர்கள் எஸ்.பார்வதி, எஸ்.சையது அபுதாஹிர், இரா.சுரேஷ் முத்துசாமி, ஒன்றிய செயலாளர் எம்.ஆர்.முருகன், ஏஐடியுசி மாவட்ட தலைவர் வே. நடராஜா, இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் வி. செல்வகுமார் உள்ளிட்ட 30க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டார்கள்.

***கோவை:*** கோவை ஜீவா இல்லம் கட்சி அலுவலகத்தில், காந்தி படம் வைத்து மாலை அணிவித்து தோழர்கள் அஞ்சலி செலுத்தினர். இந்த நிகழ்ச்சிக்கு கட்சியின் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் கே.எம்.செல்வராஜ் தலைமை தாங்கினார். மாநில பொருளாளர் எம்.ஆறுமுகம், மாவட்ட செயலாளர் சி.சிவசாமி, மாவட்ட பொருளாளர் சி.தங்கவேல், மாவட்ட பொருளாளர் சி.தங்கவேல், மாவட்ட நிர்வாகக்குளுய் உறுப்பினர்கள் பி.மௌனசாமி, கே.வெங்கடாசலம், சாந்திசந்திரன், மற்றும் மேற்கு மண்டல செயலாளர் என்.சந்திரன், மத்திய மண்டல துணை செயலாளர் ஏ.பி.மணிபாரதி, மதுக்கரை கே.ஆர்.தங்கராஜ், ஏ.அசரப் அலி, பூபதி, சம்பத் ஞானவேல் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



திருச்சி



கோவை

# சி.எஸ். கட்டிட நிதி!

மாமல்லபுரத்தில் நடந்த ஏஐடியுசி பொதுக்குழு கூட்டத்தின் போது தோழர் சி.எஸ்.கட்டிட நிதி வழங்கப்பட்டது.

நிதி வழங்கியோர்:

தோழர் ஆரோக்கியராஜ், ஆவடி – ரூ.1000

தோழர் விஜயசிலன் ஏ.ஐ.டி.இ.எப். ஆவடி – ரூ.1000

தோழர் ஜஹாங்கீர், செங்கல்பட்டு – ரூ.1000

தோழர் குணசேகரன், திருவாரூர் – ரூ.1000

# தியாகி டி.ஆர்.இராமாமிர்தம் தொண்டைமான் சிலைக்கு இரா.முத்தரசன் மாலை அணிவிப்பு!



தத்துவாஞ்சேரியில் சுதந்திரப்போராட்ட வீரர் தியாகி டி.ஆர். ராமாமிர்தம் தொண்டைமான் திருவுருவ சிலைக்கு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் ஆர்.முத்தரசன் மாலை அணிவித்து மரியாதை செய்தார்.

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் முன்னாள்: மத்திய அமைச்சர் மணிசங்கர் அய்யர், சுதந்திர போராட்ட வீரர் டி.ஆர். இராமாமிர்தம் தொண்டைமான் மகன் டி.ஆர்.லோகநாதன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தஞ்சை வடக்கு மாவட்ட துணை செயலாளர் ஆர்.செந்தில்குமார், மாவட்ட பொருளாளர் ஏ.ராஜேந்திரன், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட செயலாளர் சாமு.தர்மராஜன் உள்ளிட்ட கட்சியின் முன்னணி ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

## பிப். 16 பொது வேலைநிறுத்தத்தை விளக்கி

# தெருமுனை பிரச்சாரம்!

வேளாண் விளைபொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயம் செய்ய வேண்டும், விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த வேண்டும், குறைந்தபட்ச மாத ஊதியம் 26 ஆயிரம் வழங்க வேண்டும், நான்கு சட்ட தொகுப்புகளை திரும்ப பெற வேண்டும் உள்ளிட்ட 27 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து தெருமுனை பிரச்சாரக் கூட்டம் மத்திய தொழிற்சங்கங்கள் மற்றும் ஐக்கிய விவசாயிகள் முன்னனி சார்பில் திருச்சி பீம நகரில் நடைபெற்றது. இதில் தொமுச தொழிற்சங்க செயலாளர் ஜோசப் நெல்சன் தலைமை தாங்கினார். ஏஐடியுசி சார்பில் பொதுச் செயலாளர் க.சுரேஷ், நடராஜா, சி ஐ டி யு சார்பில் சீனிவாசன், எச் எம் எஸ் யூனியன் ஜான்சன், ஏ ஐ சி சி டி யு தேசிகன், ஐக்கிய விவசாயிகள் முன்னணி சார்பில் சம்சுதீன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். தொமுச பேரவை மாநில செயலாளர் எத்திராஜ் சிறப்புரையாற்றினார்.

# மூத்த தோழர் திருவொற்றியூர் எம்.கோதண்டம் மறைவு!



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருவொற்றியூர் பகுதி மூத்த தோழர் எம்.கோதண்டன் (வயது 80) அவர்கள் 23.01.2024 இயற்கை எய்தினார்.

அவருடைய உடலுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எஸ்.கண்ணன், கட்சியின் வட சென்னை மாவட்ட செயலாளர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி, மாவட்டக்குழு உறுப்பினர் இராஜா, திருவெற்றியூர் பகுதி கிளை செயலாளர் ஜெயராமன், சலீம் உள்ளிட்ட தோழர்கள் அஞ்சலி செலுத்தினர்.

## இந்த வார தம்பிக்குறள்

### 149. இறைத்த கிணறூறும்

**இறைத்த கிணறூறும் என்றுமிசைந் தீயார்**
**பொருளும் புகழும் அறும்.**

நீர் இறைக்கும் கிணற்றில் நீர் ஊறிக் கொண்டே இருக்கும்.இதுபோலபிறருக்குச்செல்வம்வழங்குபவனுக்குப் பொருள் பெருகிக் கொண்டு இருக்கும். வழங்காதவனின் செல்வமும் புகழும் அழியும் (உவமையணி).

**பிள்ளை பெறப்பெற ஊறும்பால் மற்றாங்கே**
**ஆற்றஆற்ற ஊறும் அறிவு.**

குழந்தை தாயிடமிருந்து பாலைப் பெறப்பெற (உறிஞ்ச) தாய்ப்பால் ஊறும். அதுபோலவே செயல் செய்யச் செய்யத்தான் புதிய அறிவு பெருகிக் கொண்டே இருக்கும் (உவமையணி).

# நெருக்கடியில் அமெரிக்கா! முன் தள்ளப்படும் இனவெறி!



தா.சந்திரன்

**இந்தியாவை எப்படிப்பட்ட நாடு என்ற அடையாளப்படுத்தும் போது உடனடியாக நினைவுக்கு வருவது இந்தியா ஒரு மிகப்பெரிய ஜனநாயக நாடு என்பதுதான்.**




அமெரிக்காவைப் பொறுத்தவரை இடதுசாரிகள் "ஏகாதிபத்திய வல்லரசு" என்று வரையறுத்துள்ளனர். ஆனால் அமெரிக்கா உலகம் முழுமையிலும் தன்னை ஒரு மிகப்பெரிய ஜனநாயக நாடாகவும், ராணுவத்தில் மிகப்பெரிய வலிமை மிக்க நாடாகவும் அடையாளப்படுத்தி இருக்கிறது.

இரண்டு கட்சி ஆட்சி முறை என்று இருப்பதே ஜனநாயக விரோதமானது என்றாலும் கூட, அந்த இரு கட்சிகளை சார்ந்தவர்களும், அந்தக் கட்சிக்குள்ளேயே வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான வாய்ப்புகளை தருவது, அந்த வேட்பாளர்களுக்குள்ளேயே விவாதங்களை பொதுவெளியில் நடத்துவது மற்றும் எதிரெதிர்க் கட்சிகளைச் சார்ந்தவர்களும் விவாதங்களை பொதுவெளியில் நடத்துவது, என்றெல்லாம் காட்டி ஜனநாயகத்தின் மொத்த குத்தகைதாரர்கள் போல பிம்பத்தை கட்டமைத்துள்ளது.

அதுமட்டுமின்றி பதவியை விட்டுப் போகிறவர்கள், பதவிக்கு வருபவர்களிடத்தில் மிகவும் நாகரீகமான முறையிலே பதவியை கையளித்து விட்டு போவது போன்ற ஒரு நடைமுறையை வைத்து இருப்பது போல காட்டுவர்.

ஆனால் கடந்த தேர்தலில் ட்ரம்ப் இந்த நாகரீகத்தை உடைக்கிற வகையில் ஒரு மூர்க்கமான ரவுடி போல நடந்து கொண்டார். சொல்லப்போனால் அவரை போன்ற ஒரு மிகத் தீவிரமான பிற்போக்கு வலதுசாரி அமெரிக்காவில் இருப்பார் என்று கூட வெளிஉலகம் நம்பாத அளவுக்கு அமெரிக்கா வைத்திருந்த பிம்பத்தை ட்ரம்ப் உடைத்து எறிந்தார்.

பிறகு பதவியை விட்டு விலகும் தருணத்தில் அவரும் அவரது ஆதரவாளர்களும் அமெரிக்காவின் புனிதமானதாக கருதப்பட்ட வெள்ளை மாளிகை மீது தாக்குதல் நடத்தினார்கள். கிட்டத்தட்ட ட்ரம்பை பதவியில் இருந்து இறக்க முடியுமா? முடியாதா? என்பது போன்ற கேள்விகள் எழும் அளவுக்கு வன்முறை தலைவிரித்தாடியது. ட்ரம்பின் இனவெறி, நிறவெறியின் அருவருப்பான பேச்சுக்களைத் தாண்டி, அந்த செயல்கள் இன்னும் கூடுதலாக அவருக்கு ஒரு ரவுடி அந்தஸ்தை கொடுத்தது. அந்த வெள்ளை மாளிகை தாக்குதல் அமெரிக்காவிலும், உலக அரங்கிலும் அமெரிக்க ஜனநாயக புனித பிம்பத்தின் மீது தீராத கறையாகப் படிந்ததோடு, அதன் பலவீனத்தையும் வெளிப்படுத்துவதாக அமைந்தது.

அடுத்த வருடம் நவம்பரில் அதிபர் தேர்தல் வர இருக்கும் நிலையில் இப்போதிருந்து தேர்தல்களுக்கான ஆரம்ப கட்டப்பணிகள் ஆரம்பித்திருக்கிற நிலையில் சில அதிரடியான வேலைகளில் இறங்கியுள்ளது. பொதுத்தேர்தலுக்கு ஒரு வருடத்திற்கு முன்பாக வழக்கமாக ஆரம்பிக்கும் உட் கட்சி தேர்தல், தற்போது ஆரம்பித்திருக்கிறது.

இந்த முறை குடியேற்றம் சம்பந்தமான அதாவது சட்ட விரோதக் குடியேற்றம் சம்பந்தமான பிரச்சினைகள் முன்னுக்கு வந்திருக்கிறது. சட்ட விராத குடியேற்றத்தினுடைய பிரச்சினை இவ்வளவு பெரிதாக வர என்ன காரணம் ?

அமெரிக்காவில் இருப்பவர்களுக்கு வேலைவாய்ப்பு, வருமானம் மிக கடுமையாக பாதிக்கப்பட்டு இருக்கிறது, இதற்கு வெளியிலிருந்து வருபவர்கள்தான் காரணம் என்றும், இது அமெரிக்கர்களின் வேலை மற்றும் வருமானத்திற்கு ஆபத்தை உருவாக்குகிறது என்கிற பிரச்சாரத்தை வலதுசாரிகள் முன்வைக்கிறார்கள். ஜோ பிடன் ஆதரவாளர்களும், ஜனநாயக கட்சியும் இந்த சட்டவிரோத குடியேற்றம் என்ற பிரச்சினையில் இதே நிலையையே எடுத்தாக வேண்டிய நிர்பந்தத்துக்கு ஆளாகி உள்ளனர்.

உண்மையில் பிரச்சனை சட்டவிரோத குடியேற்றம் அல்ல, அமெரிக்காவில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடிதான். பொதுவாக அமெரிக்காவினுடைய பணவீக்கம் பிடன் பதவியேற்ற வருடம் வெறும் 0.12 சதவீதமாக மட்டுமே இருந்தது. ஆனால் கடந்த வருட பணவீக்கம் அமெரிக்க வரலாற்றிலேயே இல்லாத வகையில் 8 சதவீதம் எனும் உச்சத்தைத் தொட்டது. எனவே வருகிற தேர்தலில் இந்த சட்டவிரோத குடியேற்றம் ஒரு மிக முக்கிய பிரச்சினையாகிறது.

அதோடு வேலை வாய்ப்பு, மனித உரிமைகள், கல்வி, பணவீக்கம், சுகாதாரம், பயங்கரவாதம், சூழல் கேடுகள் இதுபோன்ற பிரச்சனைகள் முன்னுக்கு வருகின்றன.

கடந்த வருடத்திலிருந்து இரண்டு மிகப்பெரும் யுத்தங்களை உலகம் சந்தித்து வருகிறது. ஒன்று ரஷ்யா – உக்ரைன் யுத்தம், அது கிட்டத்தட்ட இரண்டாம் வருடத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது. இஸ்ரேல் – ஹமாஸ் யுத்தம் கிட்டத்தட்ட இரண்டு மாதங்களாக நடந்து கொண்டிருக்கிறது.

அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் ரஷ்யாவின் மீது மிகப்பெரிய பொருளாதாரத் தடையை போர் ஆரம்பித்த சில நாட்களிலேயே விதித்தார்கள். அவ்வாறிருந்த போதும் இன்று வரை ரஷ்யாவை பணிய வைக்க முடியவில்லை. போரும் முடிவுக்கு வரவில்லை.

இஸ்ரேல் பாலஸ்தீன பிரச்சனையில் இஸ்ரேலுக்கு நேரடி ஆதரவு என்று பகிரங்கமாக ஜோ பிடன் அறிவித்திருக்கிறார், சொல்லப் போனால் இஸ்ரேல் பிரச்சினையில் ஜனநாயகக்கட்சி, குடியரசுக்கட்சி இரண்டு கட்சிகளுமே இஸ்ரேல் ஆதரவு நிலையைத்தான் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறார்கள்.

அப்படி இருந்தும் ஒரு சின்னஞ்சிறிய அமைப்பான ஹமாசை இதுவரை வீழ்த்த இயலவில்லை.

அது மட்டுமின்றி ஏமனின் ஹய்த்தி அமைப்பு, ஹமாஸுக்கு ஆதரவாக செங்கடல் பகுதியில் அமெரிக்கா மற்றும் அமெரிக்கா ஆதரவு வணிக கப்பல்களை நேரடியாக தாக்குகிறது.

அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துக் கொண்டிருக்கிறதே தவிர, அவர்களுடைய நடவடிக்கைகளை முழுமையாக முறியடிக்க முடியவில்லை.

இரண்டு போர்களிலும் பெரும் பின்னடைவைச் சந்தித்ததன் விளைவாக , அமெரிக்காவின் ராணுவ பலம் என்ற பிம்பம் பாதிப்பிற்குள்ளாகியுள்ளது.

அதேவேளையில், மற்றொரு அடையாளமான அமெரிக்கா ஜனநாயகம் என்ற விஷயத்தில் என்ன நடக்கிறது ?

தேர்தல் இல்லாத காலங்களில் ஊழல் குற்றச்சாட்டு எழும், அது கூட தவிர்க்க முடியாத போதுதான் தண்டனை அளவிற்குக் கொண்டு செல்லப்படும்.

அமெரிக்காவில் மட்டுமல்ல இந்தியா போன்ற முதலாளித்துவ ஜனநாயகத்தை ஏற்றுக் கொண்ட எல்லா நாடுகளிலும், கட்சிகள் ஒன்றின் மீது மற்றொன்று ஊழல் குற்றச்சாட்டுக்களை கூறுமே தவிர, ஆட்சிக்கு வந்த பிறகு அந்தக் குற்றச்சாட்டுகளின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை.

ஊழலின் ஊற்றுக்கண் முதலாளித்துவ உற்பத்தி முறை. அந்த உற்பத்தி முறை நீடிக்கும்வரை ஊழல் ஒழியாது, அந்த உற்பத்தி முறையின் நலன்களை நிர்வகிக்கும் ஆட்சிமுறைதான் அதிகாரத்திலிருப்பது, பிறகு எப்படி ஊழல் மீது நடவடிக்கை எடுக்கும்,

சில சமயங்களில், ஒன்றிரண்டு பேருக்கு தண்டனை தருவதன் மூலம், முதலாளித்துவ உற்பத்தி முறை மீது தவறில்லை, ஊழல் என்பது தனிநபர்களின் ஒழுக்கம் சார்ந்த பிரச்சினை என்பது போல கட்டமைத்து அதற்கும் இந்த முதலாளித்துவ ஆட்சி முறையிலேயே தீர்வு இருப்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்துகிறது.

இந்த முறை ஜோ பிடன் அரசு இந்த முகமூடியை கழட்டி எறிந்துவிட்டு முன்னாள் அதிபரும், வரும் தேர்தலில் போட்டியாளருமான ட்ரம்பின் மீது நேரடி நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

ட்ரம்பை வெள்ளை மாளிகை தாக்குதலுக்குப் பொறுப்பாக்கி வழக்குத் தொடுத்து, வழக்கின் மூலமாக ட்ரம்ப் வருகிற தேர்தலில் நிற்க முடியாது என்கிற ஒரு தீர்ப்பை உத்தரவாதப்படுத்தி இருக்கிறது.

இந்தத் தீர்ப்பின் மீது மேல்முறையீட்டுக்கு வாய்ப்பு இருக்கிறது என்றாலும் கூட, இந்தத் தீர்ப்பு தேர்தலில் ஒரு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

அது மட்டுமின்றி சொத்து தொடர்பாக குற்றம் இழைத்ததாக மேலும் ஒரு வழக்கும் ட்ரம்ப்மீது தொடரப்பட்டு தீவிர படுத்தப்பட்டு கொண்டிருக்கிறது.

ட்ரம்பின் தலைமை வழக்குரைஞராக இருந்த ஜென்னா எல்லீஸ் என்பவர் 2020ல் ஜார்ஜியா மாகாண தேர்தலில் தவறான தகவல்களை கொடுத்ததாக குற்றம் சாட்டப்பட்டு ஐந்து வருடம் தண்டனை என்ற தீர்ப்பை பெற்று இருக்கிறார். பொதுவாக ட்ரம்ப் மற்றும் அவரது ஆதரவாளர்கள் சட்டப்படி தண்டனைக்கு உட்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஒருநாகரீகமான ஜனநாயகத்திற்குரியது அமெரிக்கா என்று உருவாக்கப்பட்ட பிம்பத்தில் பெரிய ஓட்டை விழுந்திருக்கிறது.

கடும் பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டதன் விளைவாக 2022ல் அமெரிக்கா மிகப்பெரிய தொழிலாளர் போராட்டங்களை சந்தித்தது. பணவீக்கத்தின் காரணமாக விலைவாசி உயர்ந்து, அதன் விளைவாக தங்களது வாழ்க்கையை வழக்கம் போல நடத்த முடியவில்லை என்று கொதித்து எழுந்து தொழிலாளர்கள் போராடி சம்பள உயர்வு பெற்றார்கள்.

எப்போதெல்லாம் இப்படி முதலாளித்துவம் தனக்கு மிகப்பெரிய நெருக்கடி ஏற்படுகிறதோ அப்போதெல்லாம், இந்த உற்பத்தி முறையின் தோல்வியை மறைக்க புதிய புதிய விஷயங்களை முன்வைத்து இந்தத் தோல்விகளை திசைதிருப்பும்.

2008ல் இதேபோல 3.84 சதவீதமாக கடுமையான பணவீக்கத்தை சந்தித்த போது, அதற்கு அடுத்த வருடம் 2009 தேர்தலில் கருப்பினத்தவரான ஒபாமா அதிபர் வேட்பாளராக, நிறுத்தப்பட்டு, முதலாளித்துவ நெருக்கடி மடைமாற்றப்பட்டு, கருப்பினத்தவர் அமெரிக்க அதிபரான விசயம் முன்னுக்குக் கொண்டுவரப்பட்டது.

இந்தியாவிலும் வலதுசாரி பாஜக ஆட்சிக்கு வந்த தேர்தலில் ஊழலும், பொருளாதார நெருக்கடியும் பிரதான விசயமாக பேசப்பட்டது. ஆனால் அதற்கடுத்த தேர்தலில் பொருளாதார நெருக்கடி பின்னுக்குத் தள்ளப்பட்டு மதவெறி முன்னுக்குக் கொண்டுவரப்பட்டது.

தேர்தல் தோல்விகள் எவ்வாறு கம்யூனிஸ்டுகளின் பலத்தை வெளிப்படுத்தும் குறியீடல்லவோ, அதுபோலத்தான் முதலாளித்துவ கட்சிகளின் தேர்தல் வெற்றிகளும் முதலாளித்துவத்தின் தோல்வியை மூடி மறைத்துவிட முடியாது.

அது மக்கள் போராட்டங்களை எதிர்கொண்டே தீரும், விவசாய போராட்டம் அதற்கொரு உதாரணம்.

"முதலாளித்துவம் தனக்குத்தானே சவக்குழி தோண்டிக் கொள்ளும் " என்ற மார்க்சின் கூற்றுப்படி, முதலாளித்துவம் தனது நெருக்கடிகளின் போதெல்லாம் தானே அணிந்து கோண்டிருந்த முகமூடிகளை கழற்றி எறியும், தானே உருவாக்கி வைத்திருக்கிற பிம்பங்களை அதுவே உடைத்தெறியும்.

சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சிக்கு பிறகு கம்யூனிஸ்ட் கட்சிகள் மிகப்பெரிய பலவீனத்தில் இருப்பதாக பலரும் தொடர்ந்து பிரச்சாரம் செய்கிறார்கள். முதலாளித்துவவாதிகள் மட்டுமின்றி கம்யூனிஸ்டுகளே கூட மார்க்சியத்திற்குப் பின்னடைவு என்பதை விளம்பரப்படுத்துகிறார்கள்.

ஆனால் முதலாளித்துவம் அதற்கே உரிய பலவீனத்தில் நெருக்கடியில் சிக்கிக் கொண்டுள்ளது என்பதை யாரும் பெரிதாக பேசுவது கிடையாது.

பலவீனம் என்பது இந்த முதலாளித்துவ சமூகத்தில் பொதுவானது. " விடுதலை பிரிக்க முடியாது " என்றார் மார்க்ஸ், தொழிலாளி வர்க்கம், சமூகத்தை புரட்சிகரமாக மாற்றியமைப்பதன் மூலம், முதலாளித்து போட்டியிலிருந்து முதலாளிகளுக்கும் விடுதலையைப் பெற்றுத்தரும், அதாவது முதலாளிகளே இல்லை என்ற நிலையை உருவாக்குவதன் மூலம் மட்டுமே முதலாளிகளுக்கு விடுதலை கிடைக்கும் என்பதைத்தான், முதலாளிகளுக்குத் தனி விடுதலை, தொழிலாளர்களுக்குத் தனி விடுதலை என்று உருவாக்க இயலாது எனவே விடுதலை பிரிக்க முடியாதது என்று மார்க்ஸ் கூறினார்.

கம்யூனிஸ்டுகளுக்கு ஏற்பட்டுள்ள பின்னடைவு நெருக்கடியை விட கூடுதலான நெருக்கடியை முதலாளித்துவம் எதிர்கொண்டு வருகிறது, எனவே முதலாளித்துவம் எதிர்கொள்ள முடியாததோ, வெல்ல முடியாததோ அல்ல என்பதை முதலாளித்துவத்தின் முகமாக அறியப்படுகிற அமெரிக்காவின் பலவீனங்கள் வெளிப்படுத்துகின்றன

# மாணவர் பெருமன்றத்தின் 5 கோடி கையெழுத்து இயக்கம்

## ஆர். நல்லகண்ணு தொடங்கி வைத்தார்

ஒன்றிய பிஜேபி அரசின் மாணவர் கல்வி விரோத போக்கை கண்டித்தும். தேசிய கல்விக் கொள்கை 2020 ஐ ரத்து செய். ஏழை எளிய மாணவர்களின் மருத்துவக் கனவைப் பறிக்கின்ற தனியார் பயிற்சி மையங்களுக்கு கொள்ளை லாபம் ஈட்டித் தருகிற நீட் தேர்வை ரத்து செய். இந்தியா முழுவதும் உள்ள மாணவர்களின் கல்விக் கடனை ரத்து செய்.

இந்தியா முழுவதும் உள்ள பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், பள்ளிகளில் மாணவர் பேரவை தேர்தலை நடத்திடு. கல்வியைப் பொதுப் பட்டியலிலிருந்து மாநில பட்டியலுக்கு மாற்று.






















இந்தியா முழுவதும் உள்ள அனைத்து வகைக் கல்வி நிலையங்களிலும் ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியிடங்களை நிரப்பு. மத்தியப் பல்கலைக்கழகங்கள் மாணவர் சேர்க்கைக்கான (Cuet) நுழைவுத் தேர்வை ரத்து செய்.

இந்தியா முழுவதும் கல்வியில் தனியார்மய மற்றும் வர்த்தக நடவடிக்கையை தடுத்து நிறுத்து. நாடு முழுவதும் ஒரே பாடத்திட்டம் என்ற பெயரில் மாநிலங்களின் பண்பாடு, கலாச்சாரம், வரலாறை சிதைக்காதே. பல்கலைக்கழக வேந்தராக ஆளுநரை நியமிக்கும் முறையைக் கைவிடு. ஒன்றிய அரசின் கல்வி நிலையங்களில் மாநில மொழியைக் கட்டாயமாக்கு, இந்தி மொழியைத் திணிக்காதே. பகத்சிங் தேசிய வேலை உறுதி அளிப்பு சட்டத்தை இயற்று ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி நாடு முழுவதும் 5 கோடி கையெழுத்து இயக்கத்தை ஜனவரி 23 முதல் மார்ச் 23 வரை நடைபெறுகிறது.

தமிழ்நாட்டில் நடைபெற்ற தொடக்க நிகழ்விற்கு மாநிலச் செயலாளர் பா.தினேஷ் தலைமை வகித்தார். மாநில தலைவர் கா.இப்ராஹிம் வரவேற்புரையாற்றினார். விடுதலைப் போராட்ட வீரர் தகைசால் தமிழர் இரா.நல்லகண்ணு முதல் கையொப்பமிட்டு தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து கையெழுத்து இயக்கத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயலாளர் இரா.முத்தரசன், கல்வியாளர் பிரின்ஸ் கஜேந்திரபாபு, திரைப்பட இயக்குனர் கோபிநயினார், அகில இந்திய பொதுச் செயலாளர் தினேஷ சீரங்கராஜ், என்.சி.பி.ஹெச் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் க.சந்தானம், விவசாய தொழிலாளர் சங்கத்தின் மூத்த தலைவர் நாகேந்திரநாத் ஓஜா, அகில இந்திய தலைவர் ந.பெரியசாமி, மாநிலச் செயலாளர் அ.பாஸ்கர், சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.பத்மாவதி, மாதர் சங்க மாநில செயலாளர் கண்ணகி, சமூக சமத்துவத்திற்கான மருத்துவர் சங்க மாநில பொதுச் செயலாளர் டி.ரவீந்திரநாத், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சென்னை மாவட்ட செயலாளர் எஸ்.கே.சிவா ஆகியோர் கையெழுத்திட்டனர்.

இதில் மாநில பொருளாளர் பி.கணேஷ், மாநிலத் துணைச் செயலாளர் இர.ராமசாமி, தென் சென்னை மாவட்ட செயலாளர் ஆ.மணிகண்டன், கார்த்திக், ஆகாஷ், ஆர்.சதீஸ், முஜூபூர் ரகுமான், வித்யா, அகிலாண்டேஸ்வரி, ரம்யா, சுஷ்மிதா, சதிஷ், சுபலெட்மி, அருணா, ஆதித்யன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நாடாளுமன்றம் குழு தலைவர், திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே. சுப்புராயன் மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் நிறுவனத் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் தொல். திருமாவளவன் ஆகியோர் கையெழுத்து விட்டனர்.

# ஒயிலாட்டக் கலைஞர் மா.பத்ரப்பனுக்கு 'பத்மஸ்ரீ' விருது!

## கே.சுப்பராயன் எம்.பி. நேரில் வாழ்த்து!



கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் அருகே தாசம்பாளையம் கிராமத்தைப் பூர்வீகமாகக் கொண்ட ஒயிலாட்டக் கலைஞர் கலைமாமணி மா.பத்ரப்பன் (87)) ஒன்றிய அரசின் 'பத்மஸ்ரீ' விருதிற்கு தேர்வு செய்யப்பட்டிருப்பது, அவரது அரைநூற்றாண்டு கால கலைப்பணிக்கும், தமிழ்நாட்டில் பல பகுதிகளிலும் அறியப்பட்டுள்ள ஒரு நாட்டுப்புறக்கலைக்கும் கிடைத்த அங்கீகாரமாகும்.

மா.பத்ரப்பன் 10 வது வரை படித்தவர். மேட்டுப்பாளையம் செயற்கை வைரத்தொழிற்சாலையில் பணியாற்றிய போது, தொழிற்சங்கம் ஆரம்பித்த காரணத்திற்காக வேலைநீக்கம் செய்யப்பட்டார். பின்னர், விவசாயத் தொழிலில் இறங்கினார். கூடவே, ஒயிலாட்ட ஆசான்களிடம் சிறுவயதில் கற்ற ஒயில் கும்மியாட்டத்தை, இளைஞர்கள், பெண்கள், மாணவர்கள் என அடுத்த தலைமுறை யினருக்குப்பயிற்றுவிப்பதை தனது வாழ்நாள் லட்சியமாகக் கருதி அர்ப்பணிப்புடன் கலைப்பணியாற்றி வந்துள்ளார்.



கோவையில் நடந்த தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் 40 வது மாநாடு, சிறுதுளி அமைப்பு நத்திய "நதிக்கரையோரம்" நிகழ்ச்சி, மேட்டுப்பாளையம் பவானி நதிநீர் பாதுகாப்பு மாநாடு என பல நிகழ்வுகளில் இவரது குழுவினரின் ஒயில் கும்மியாட்டம் நடைபெற்றது மற்றும் பொதிகை தொலைக்காட்சியிலும் இவரது குழுவினரின் நிகழ்ச்சி ஒளிரப்பப்பட்டுள்ளது.

கலை இலக்கியப் பெருமன்றத்தின் மேட்டுப்பாளையம் கிளைத் தலைவர் அ.சிக்கந்தர் பாஷாவின் "ஒற்றைத் தீக்குச்சி படைப்பகம்" சார்பில் மா.பத்ரப்பனின் கலைப் பயணம் குறித்த " ஒரு கிராமியக் குரல் " ஆவணப்படம் பெருமன்றமும் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனமும் 2019 ல் நடத்திய இலக்கியப் போட்டியில் ஆவணப்படப் பிரிவில் பரிசு பெற்றது. அதில், தா.பாண்டியன், கவிஞர் புவியரசு ஆகியோர் வாழ்த்திப் பேசியுள்ளனர்.

கிராமியக்கலைக்கு 50 ஆண்டுகளுக்கு மேல் சேவையாற்றிவரும் மா.பத்ரப்பன் அவர்களுக்கு 2021 ல் தமிழ்நாடு அரசு "கலைமாமணி" விருது வழங்கிகவுரவித்தது. தற்போது ஒன்றிய அரசு பத்மஸ்ரீ விருது வழங்கி கௌரவித்துள்ளது.

தகவல் அறிந்து தற்போது பத்ரப்பன் வசித்து வரும் தோட்டத்து சாலைக்குச் சென்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில கட்டுப்பாட்டு குழு தலைவரும், திருப்பூர் நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினருமான கே. சுப்பராயன் சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்.

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் கோவை மாவட்டக்குழுவின் சார்பில், ப.பா.ரமணி, வி.வெள்ளிங்கிரி, எல்.ஜான், சிக்கந்தர் பாஷா, ஜனார்த்தனம், செல்வின், ஞானகுமார் ஆகியோர் "பத்மஸ்ரீ" விருது பெறவுள்ள தோழர். மா.பத்ரப்பன் அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

மேலும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மேட்டுப்பாளையம் நகர கமிட்டியின் சார்பாகவும், ஏஐடியுசி கட்டுமான சங்கத்தின் சார்பாகவும் மா.பத்திரப்பனை சந்தித்து மரியாதை செலுத்தப்பட்டது.

நிகழ்ச்சிக்கு கட்சியின் மேட்டுப்பாளையம் நகர செயலாளர் சண்முகசுந்தரம், நகர துணை செயலாளர் மன்சூர், நகரப் பொருளாளர் எம். வெள்ளிங்கிரி, ஏஐடியுசியின் மாவட்ட பொதுச் செயலாளர் எல்.செல்வம் உள்ளிட்டோர் கலந்துகொண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர்.

## லெனின் நூற்றாண்டு விழா

வத்திராயிருப்பில் வட்ட செயலாளர் கோவிந்தன் தலைமையில் தேசிய குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, பொன்னுபாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ, தவிச சவுந்திர பாண்டியன் உள்ளிட்டோரும், இராஜபாளையத்தில் நகர செயலாளர் விஜயன் தலைமையில், மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்ட பொருளாளர் எஸ்.பழனிக்குமார், இளைஞர் மன்ற மாவட்ட செயலாளர் கணேசமூர்த்தி, வழக்கறிஞர் பகத்சிங் உள்ளிட்டோரும், விருதுநகரில் நகர செயலாளர் முத்துக்குமார் தலைமையில் மாதர் சங்க மாரீஸ்வரி உள்ளிட்டோரும் கலந்து கொண்டு வீரவணக்கம் செலுத்தினார்கள்.

Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday

# புதிய இந்தியாவில்..



டி. ராஜா

**அயோத்தியில் மத நிகழ்ச்சிக்கு பிரதமர் சென்றதும், செயலாற்றியதும் மதச்சார்பின்மைக்கான அரசியல் சாசனத்தின் வாக்குறுதியை உடைத்து நொறுக்கி உள்ளது.**

இந்திய காலனித்துவ அரசு சட்டம், 1935ஐ மாற்றி, அதற்குப் பதிலாக, இந்திய அரசியலமைப்புச் சட்டம் ஜனவரி 26, 1950 அன்று நடைமுறைக்கு வந்தது. சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவத்தின் உலகளாவிய இலட்சியங்களை உள்ளீடாகக் கொண்டு, இந்தியா ஒரு நவீன, மதச்சார்பற்ற, ஜனநாயக, குடியரசாகத் திகழும் என்பதை உலகிற்கும் அதன் சொந்தக் குடிமக்களுக்கும் பிரகடனம் செய்தது.

ஆயினும்கூட, 2024 ஆம் ஆண்டில், நவீன ஜனநாயக இந்தியாவின் தோற்றத்தை நினைவுகூறும் குடியரசு தினம், அயோத்தியில் ராமர் கோவில் திறப்பு நிகழ்வுக்கு சில நாட்களுக்குப் பிறகு வருகிறது. அந்த விழா, ஆளும் ஆட்சி, பிரதமர் மற்றும் ஒட்டுமொத்த அமைச்சரவையின் முழு ஈடுபாட்டுடன் நடத்தப்பட்டது. தேசத் தலைநகரான டெல்லியில் எங்கு பார்த்தாலும், மூவண்ணக் கொடிக்கு மாற்றாக, ராமரின் படங்கள் பொறிக்கப்பட்ட காவிக்கொடிகளே நிறைந்திருந்தன. சங்க பரிவாரத்தின் அரசியல் திட்டத்தின் ஒரு அம்சத்தை நிறைவேற்றிய பெருமிதமே இதில் வெளிப்பட்டது.

2024ல் இந்தியாவைப் பார்க்கும்போது, பி.ஆர். அம்பேத்கர், அரசியல் சாசனத்தின் நோக்கங்களுக்கு ஏற்பட்ட சீர்படுத்த முடியாத குறைபாட்டைக் குறித்து கவலையில் ஆழ்ந்திருப்பார்.


அரசே தலைமையேற்று நடத்திய ராமர் கோவில் திறப்பு விழா, ,இந்தியாவை ஜனநாயக நாடாக நிலைநிறுத்திக் கொண்டிருக்கும் அரசியல் சாசனத்தின் விழுமியங்களில் இருந்து மதச்சார்பின்மையை பிரித்து அகற்றும் நோக்கத்தடன் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகும்.

சமத்துவமற்ற, படிநிலைக் கருத்தைச் சுற்றிக் கட்டமைக்கப்பட்டுள்ள இந்துத்துவம், இந்திய அரசியல் சாசனத்தின் முகவுரையில் விவரிக்கப்பட்டுள்ள அடிப்படைக் கொள்கைகளை வேகமாக மாற்றிக் கொண்டிருக்கிறது.

"இந்திய மக்களாகிய நாம்", அரசின் அதிகாரத்தால் பிரிக்கப்பட்டு, வேறுபடுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

சட்டத்தின் ஆட்சியை அருவருப்பான முறையில் மீறி, பாபர் மசூதி இடிக்கப்பட்டது என, உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது. அந்த மீறலைத் தொடர்ந்து, அரசியல் சாசனம் வரைந்துள்ள புனிதக் கோட்டை, அரசாங்கமே நம் கண்ணெதிரே மீறி சென்று கொண்டிருக்கிறது.

அரசியலமைப்புச் சட்டம் விதித்துள்ள 'மதச்சார்பற்ற குடியரசு' என்ற உள்ளடக்கத்தைப் பிரித்து உதிர்த்துவிட ஒன்றிய அரசு முயல்கிறது.




தனது பழிவாங்கும் நோக்கத்திற்காக, மக்களின் இறை நம்பிக்கையை, ஆர்.எஸ்.எஸ். – பாஜக ஆயுதமாக கூர் தீட்டுகிறது.

ஒரு சிறிய வரலாற்று பாடம் இங்கே பயனுள்ளதாக இருக்கும். சோம்நாத் கோவில் குடமுழுக்கின் போது, பிரதமர் ஜவஹர்லால் நேரு, சி.ராஜகோபாலாச்சாரியார் மற்றும் டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் ஆகியோர் அந்த விழாவில் குடியரசுத் தலைவர் பங்கேற்க வேண்டாம் என அன்றைய குடியரசுத் தலைவர் ராஜேந்திர பிரசாத்தை வலியுறுத்தினர்.

இந்தியக் குடியரசுத் தலைவர் எந்தக் கோயிலுக்குச் சென்றாலும் பிரச்சனை இல்லை, ஆனால் குடமுழுக்கு போன்ற ஒரு சிறப்பு நிகழ்ச்சிக்கு அவர் சென்றால், அது அரசின் சார்பற்ற நிலைக்கு பங்கம் விளைவிப்பதோடு, ஒரு குறிப்பிட்ட மதத்தின் பக்கம் சாய்வதாகவும் அமைந்துவிடும். அது ஒரு நியாயமற்ற மற்றும் ஆபத்தான முன்னுதாரணமாக ஆகிவிடும் என்று ராஜாத்திர பிரசாத்துக்கு நேரு கடிதம் எழுதினார்.

அதற்கு பிரசாத், தான் இந்தியாவின் குடியரசுத் தலைவராக பங்கேற்கவில்லை என்றும், ஒரு தனி மனிதன் என்ற நிலையிலேயே அங்கு செல்வதாகவும் பதில் அளித்தார். இருப்பினும், நேரு, ராஜகோபாலாச்சாரி மற்றும் ராதாகிருஷ்ணன் ஆகியோர், குறிப்பிட்ட மதத்தில் சிறப்பு செயல்பாடுகளுக்கு குடியரசுத் தலைவர் சென்றால், அவரை மற்றவர்கள் தனிமனிதர் என்று பிரித்துப் பார்க்க மாட்டார்கள்; அவ்வாறு கருதுவது சாத்தியமற்றது என்று தெளிவுபடுத்தினர்.

இந்த புதிய பாரதத்தில், இந்த தனித்துவ வேறுபாடுகளுக்கு எல்லாம் எந்த மதிப்பும் இல்லை.

ஒரு பக்கம் அரசியல் சாசனத்தை மனமாறப்புறக்கணித்துக் கொண்டிருக்கும் மோடி, மறுபுறம் அம்பேத்கரை போற்றி உதட்டளவில் பேசிக் கொண்டிருக்கிறார். அம்பேத்கரின் சமத்துவம், சமூக நீதி மற்றும் விடுதலை பற்றிய கருத்துக்களில் இருந்து அவரைத் துண்டித்து, ஒரு வெற்று அடையாளமாகக் குறைக்கும் முயற்சிதின் நடந்து கொண்டிருக்கிறது.

அம்பேத்கர், தனது வரைவு அரசியல் சாசனத்தில், இந்திய அரசுக்கு எந்த மதச்சார்பும் இல்லை எனவும், இந்தியாவில் சிறுபான்மையினரை முழுமையாகப் புறக்கணிப்பதற்கான எந்தவொரு அறைகூவலும், சட்டப்படி குற்றமாகத் தான் கருதப்படும் என்று வரையறுத்து இருக்கிறார்.

இந்தியாவின் சட்டம் இயற்றும் அமைப்புகளான நாடாளுமன்றம் சட்டப்பேரவை போன்றவை எதிர்காலத்தில் எந்த வகையில் இவற்றை கையாள வேண்டும் என்பதையும் அவர் வரையறுத்து இருக்கிறார்.

அரசின் நீதி உணர்வு இப்படி சமரசம் செய்துகொண்டிருப்பதைக் கண்டு அம்பேத்கர் கலங்கியிருப்பார். ஏனெனில், குடிமக்களால் அரசியலமைப்பு ஒழுக்கத்தை வளர்ப்படுவது, அரசியலமைப்புச் சட்டத்தின் வெற்றிக்கு, இன்றியமையாதது என்று கூறியவர் அம்பேத்கர். ஆனாலும், இந்த ஆட்சியின் கீழ், இது தலைகீழாக மாற்றப்பட்டு வருவதைக் காண்கிறோம்.

அரசாங்கம் வேண்டுமென்றே ஏகாதிபத்திய எதிர்ப்பும், நிலப்பிரபுத்துவ எதிர்ப்பும் நிறைந்த இந்தத் துணைக்கண்டத்தின் வரலாற்றைத் தள்ளி வைத்துவிட்டு, அவற்றுக்கு பதிலாக கட்டுக்கதைகளையும், தனக்கு விருப்பமான சித்தரிப்புகளையும், அறிவியலுக்குப் புறம்பான மனோபாவத்தையும் கொண்டு வந்து திணித்துள்ளது.

இந்து ராஷ்டிராவின் பேரழிவை தடுத்து நிறுத்தவும், எதிர்த்துப் போராடவும் தேச மக்களுக்கு அம்பேத்கர் விடுத்த அழைப்பை இங்கு நினைவு கூர்வது அவசியம்.

சிலர் சிலைகள், கோவில்கள், முழு உருவ கட்அவுட்டுகள் போன்ற வெற்று அடையாளங்கள், நகரங்களை அழகுபடுத்துதல், நகரங்களின் பெயர்களை மாற்றுதல், போலியான அறிவியலையும் வரலாற்று புரட்டுகளையும் செய்வதன் மூலம், ஏழைகளையும் அவர்களது குடியிருப்புகளையும் திரை போட்டு மறைத்து விட்டதாக மகிழ்ச்சி அடைகிறார்கள்.

மறுபுறம், வேலைவாய்ப்பின்மை அதிகரித்தல், கல்வியை வணிகமயமாக்குதல், பெண்களுக்கு குறிப்பாக தலித் மற்றும் ஆதிவாசி பெண்களுக்கு எதிரான, கொடூரமான கட்டமைக்கப்பட்ட வன்முறைகள் போன்றவற்றுக்கு எதிரான அடிப்படை பிரச்சனைகளை தொடர்ந்து கேள்வி எழுப்பி கவனத்தை ஈர்ப்பவர்களும் இருக்கிறார்கள்.

பெண் தொழிலாளர்களுக்கு பணிபுரியும் வாய்ப்பு மறுக்கப்படுதல், நிரந்தரமும் உத்தரவாதமும் இல்லாத தினக்கூலி வேலை முறை, பொது சொத்துக்கள் கொள்ளையடிக்கப்படுதல் ஆகியவையும் பெரும் பிரச்சனைகளாக எழுந்துள்ளன.

இன்றைய சூழலில், ஒத்த கருத்து உள்ளவர்களை ஒன்று திரட்டி, போராடும் வல்லமை பெற அரசியல் உறுதியை ஒருங்கிணைத்து, நமது நாட்டின் அரசியல் சாசனத்தை உயர்த்திப் பிடித்தாக வேண்டும் என்பதைத்தான் காலமும் வரலாறும் நமக்கு கற்பிக்கின்றன.

**இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழிலிருந்து...**

**தமிழில் டி.எம்.மூர்த்தி**

## நிதீஷ் குமாரின் துரோகத்துக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்!

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு ஜனவரி 29ஆம் தேதி வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

எதைச் செய்தாகிலும் அதிகாரத்தை கைப்பற்ற முயற்சிக்கும் ஆர்எஸ்எஸ் – பிஜேபி விரித்த பாவ வலைப்பில் விழுந்த நிதிஷ்குமார் இந்திய மக்களுக்கு பெரும் துரோகம் இழைத்திருக்கிறார். இதனை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கண்டிக்கிறது

பீகாரில் மகாகட்பந்தன் கூட்டணியின் அரசின் முதலமைச்சராக இருந்த நிதிஷ்குமார், பாட்னாவில் அனைத்து எதிர்க்கட்சிகளின் கூட்டத்தை கூட்டினார்.

பிஜேபியை வரட்டுவோம் நாட்டை பாதுகாப்போம் என்ற முழக்கத்தை அந்த கூட்டம் முன் வைத்தது.. ஆனால் அதே மக்கள் விரோத பிஜேபி யோடு இப்போது நிதீஷ் குமார் சேர்ந்திருக்கிறார். அதிகாரத்திலிருந்து பிஜேபியை அகற்று வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்ட இலக்குக்கு பெரும் துரோகத்தை அவர் செய்திருக்கிறார்.

பாஜகவின் தவறான ஆட்சியின் கடும் அதிருப்தி நிலவுகிறது. பாஜகவின் கேடுகெட்ட திட்டங்களுக்கு எதிராக மக்கள் எழுச்சி பெற வேண்டும், பாஜக மற்றும் நிதீஷ் குமார் இருவருக்கும் வரவிருக்கும் தேர்தலில் பாடம் கற்பிக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுக் கொள்கிறது.

## அதிகார வெறி பிடித்த அரசியல்வாதிகளின் சந்தர்ப்பவாதக் கூட்டு!



பிஜேபி – நிதிஷ்குமார் கூட்டணி, தீவிர வலதுசாரிகளின் அரசியலும் தார்மீக நெறிகளும் திவாலாகி விட்ட நிலையை வெளிப்படுத்துகிறது அதிகார வெறி பிடித்த அரசியல்வாதிகளின் இந்த சந்தர்ப்பவாதக் கூட்டு, மக்களால் தண்டிக்கப்படும். இந்தியா கூட்டணி என்பது எந்த ஒரு தனி நபரின் பேராசையின் பேரிலும் உருவாக்கப்படவில்லை. இது இந்தியா எனும் கருத்தாக்கத்தின் அடிப்படையில் கட்டப்பட்டது!

**பினாய் விஸ்வம்**
தேசிய செயலாளர்
நாடாளுமன்றக்குழுத் தலைவர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **T.M.Murthi,** Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **S.Shanmuganathan** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.